DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004 | BRAMPTON / MISSISSAUGA 905 457 1700 | MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com — Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1409 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday April 7, 2023

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship; Super visa for parents and grandparents including health insurance; Citizenship; Permanent resident card renewal
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333



Toronto Voice of Humanity
ரொறன்ரோவின் மனித நேயக் குரல்
கனடா

# யாழ்ப்பாணம் — சிறுப்பிட்டியில் பசுமை தமிழ்த் தேசிய இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி

## TORONTO VOICE OF HUMANITY நிதியுதவியில் — பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் ஆரம்ப வைபவத்தில் அமைப்பின் பிரதி பங்கேற்பு

கடந்த சனிக்கிழமை 01-04-2023 மாலை யாழ்ப்பாணம் சிறுப்பிட்டிக் கிராமத்தில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற பாடசாலை மாணவ மாணவிகளுக்கான அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் வைபவத்தில் கனடாவிலிருந்து அமைப்பின் பிரதிநிதி மரியாம்பிள்ளை மரியராசா கலந்து சிறப்பித்தார்.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவரும் முன்னாள் வட மாகாண விவசாய அமைச்சருமான பொ. ஐங்கரநேசனின் ஏற்பாட்டில் வருடா வருடம் கையளிக்கப்படும் இந்த திட்டத்திற்கு கனடாவின் - **TORONTO VOICE OF HUMANITY** தொடர்ச்சியாக பல வருடங்கள் நிதியை னுப்பி ஆதரவு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த வருடத்திற்குரிய 15 இலட்சம் இலங்கை ரூபாய்களை கனடாவிலிருந்து அனுப்புவதற்கு கனடா வாழ் திருமதி சக்தி ஞானம்மா. வர்த்தகப் பிரமுகர்கள் திரு சங்கர் நல்லதம்பி. திரு நிமால் விநாயகமூர்த்தி. திரு பாஸ்கரன் சின்னத்துரை மற்றும் யாழினி-இந்துநாதன் குடும்பத்தினர் நிதிப் பங்களிப்பு வழங்கியுள்ளார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. உள்ளே தொடர்ச்சி 9ம் பக்கத்தில்)

# பைரவி நுண்கலைக் கூடத்தின் மாணவர்கள் குருவர்ஷன் கமல்ராஜ், வர்ஷாஜினி கமல்ராஜ் ஆகியோரது கீபோர்ட் இசைத்திறன் சமர்ப்பண நிகழ்ச்சி

கனடாவில் நன்கு அறியப்பெற்ற இசைப் பயிற்சி நிறுவனமாக விளங்கும் "பைரவி நுண்கலைக் கூடத்தின் அதிபரும் குருவுமாகிய ஜெயச்சந்திரன் அவர்களது மாணவர்களான குருவர்ஷன் கமல்ராஜ் மற்றும் வர்ஷாஜினி கமல்ராஜ் ஆகியோ-ரது கீபோர்ட் இசைத்திறன் சமர்ப்பணம் நிகழ்ச்சி கடந்த சனிக்கிழமை இசைக் கலா மன்றத்தின் கலா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.







இங்கே உள்ள படங்களில் "பைரவி நுண்கலைக் கூடத்தின் அதிபரும் குருவுமாகிய தி. ஜெயச்சந்திரன் அவர்களையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட "அக்னி" இசைக்குழுவின் நிறுவனர் திருமதி சில்வியா பிரான்சிஸ் அவர்களையும் திரு. திருமதி கமல்ராஜ் தம்பதியர் கௌரவிப்பதைக் காணலாம்.
(தொடர்ச்சி உள்ளே 3ம் பக்கத்தில்)

JENITA AREVIN
BROKER
DOWNTOWN SPECIALIST
416.320.3201
JENITA@AREVIN.CA
ROYAL LEPAGE IGNITE REALTY, BROKERAGE
INDEPENDENTLY OWNED AND OPERATED

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance; First Mortgage; Second Mortgage; Commercial Mortgage; Equity Loan
ALL IN 1
ACCOUNTING
Personal Income Tax; Corporate Income Tax; HST Returns; Bookkeeping Service; Payroll Service; Audit preparation; Business Startup service
Mobile: 416.710.9150

Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666 srinada21@gmail.com

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7 — 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON — 905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

CANADIAN HOME APPRAISALS INC.
FOR RESIDENTIAL & COMMERCIAL
SK BALES, CRA, MVA, FRI, CRES
Bus: (416) 438-2200
Cell: (416) 801-3219
Website: www.chainc.ca
Email: skbales@hotmail.com
Ottawa Branch - Bus: (343) 698-8004
CHAI

# மீட்பர் கிறிஸ்து சபை

## Redeemer Christ Assembly

## பெரியவெள்ளி – உயிர்த்தெழுந்த ஞாயிறு
## GOOD FRIDAY & EASTER

இயேசு
மரித்தார் ஆனால் இன்று உயிரோடு இருக்கிறார்

"மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்".– வெளிப்படுத்தினவிசேஷம் 1: 18

"என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசி நாளில் பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன்"–யோபு 20: 25

"தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை (இயேசுவை) விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்"–யோவான் 3: 16

இரட்சிப்பு: "என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது."– ரோமர் 10: 9–11

அன்பானவர்களே!

இவ்வுலகிற்கு மனுவுருவெடுத்து வந்த தேவ குமாரனாகிய இயேசு, சகல மனித சமுதாயத்தின் பாவங்களைப் போக்க ஒரே பலியாகத் தன்னை சிலுவையில் ஒப்புக்கொடுத்து, இரத்தம் சிந்தி மரித்தார். அவர் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து, பரலோக இராட்சியத்தில் பிதாவான தேவனுடைய வலது பார்சத்தில் உட்கார்ந்து, எமக்காகப் பரிந்து பேசுபவராக இன்று இருக்கிறார்.

ஜெபம்: ஆண்டவராகிய இயேசுவே! நீங்கள் தேவ குமாரன் என்பதையும், என்னுடைய பாவங்களுக்காகவும் சிலுவையிலே இரத்தம் சிந்தி மரித்தீர்கள் என்பதையும், மூன்றாம் நாள் உயிர்தெழுந்தீர்கள் என்பதையும் நான் விசுவாசிக்கிறேன். நான் ஒரு பாவி என்பதை அறிக்கை செய்கிறேன். என் பாவங்களைத் தயவாக மன்னித்து, என்னைச் சுத்திகரித்து என்

வாழ்க்கையைச் சீர்ப்படுத்த என் இருதயத்தில் வந்து வாசஞ்செய்யும். உம்மை என் இரட்சகரும் மீட்பருமாக ஏற்றுக்கொள்கிறேன். என்னை நீரே வழிநடத்தும், நான் உம்மை நேசிக்கிறேன்.

### மேலும் அன்பானவர்களே!!

எங்கள் ஒவ்வொருவருடைய பாவங்களுக்காக பரலோகதிதிலருந்து இறங்கி மனுஷனாக அவதரித்து தன் இரத்தம் முழுவதையும் விரயமாகக் கொடுத்து, பலியாகிமரித்து, தெய்வீக லட்சணங்களின்படி மூன்றாம் நாள் உயிரோடு எழுந்த அந்த ஒரே பரிசுத்த தெய்வமாகிய இயேசுகிறிஸ்துவை உங்கள் தெய்வமாக ஏற்றுக்கொண்டு பாவம் நீங்கி, சமாதானத்தோடும், சந்தோஷத்தோடும் வாழ உங்கள் ஒவ்வொருவருக்காகவும் இறை ஆசிவேண்டிநிற்கிறோம். இயேசு மட்டுமே எமது பாவங்களை மன்னிக்க அதிகாரம் உள்ளவர். இயேசு நல்லவர். இயேசு ஒவ்வொருவரையும் நேசிக்கிறார். நாம் சகல மக்களுக்காகவும் ஊக்கமாக ஜெபிக்க கடமை உள்ளவர்களாய் இருக்கிறோம்.

"கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்."– பிலிப்பியா 4: 8

### ஆராதனை நேரங்கள் – Worship Times

பெரிய வெள்ளி - Good Friday – காலை 10.30 AM

உயிர்த்தெழுந்த ஞாயிறு – Easter Sunday – காலை 9.30 AM

அனைவரையும் அன்போடு வரவேற்கிறோம்

இயேசுவின் உயிர்தெழுந்த நன்நாள் வாழ்த்துக்கள் உங்கள் அனைவருக்கும் உரித்தாகுக.

## மீட்பர் கிறிஸ்து சபை – பிரம்டன்

பாஸ்டர் S. அல்பிரட் செருபிம் 647 – 271 7645

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | உதயன் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

Canada

We acknowledge the financial support of the Government of Canada

உதயன் கதிரோட்டம்

# பாராளுமன்ற அரசில் பதவிகளைத் பற்றிக் கொண்டவர்கள் அதை இழந்துவிடாது இருக்க 'எதனையும்' செய்வார்கள்

இலங்கையில் மாத்திரமல்ல உலகில் பாராளுமன்ற அரசியல் பதவிகளைப் பெற்றுக்கொண்டவர்கள் தங்களுக்கு முன்னாள் உள்ள சேவையாற்றும் பொறுப்பை காலக்கிரமத்தில் மறந்து விடுகின்றார்கள் போலும்.

அதற்கு உதாரணமாக இலங்கையில் பாராளுமன்ற அரசில் பதவிகளைத் பற்றிக் கொண்டவர்கள் அதை விட்டு விலகாமல் இருக்க 'எதனையும்' செய்யத் துணிவார்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் தமிழ் சிங்கள மற்றும் முஸ்லிம் அரசியல்வாதிகள் கடந்த காலங்களில் பல தவறுகளைச் செய்யத் துணிந்து நின்றார்கள்.

தாங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதை சில நாட்களில் மறந்து விடுகின்றார்களா? என்று நினைக்கும் அளவிற்கு காரியங்கள் இடம்பெற்று வருகின்றதை நாம் கண்களால் பார்த்து வருகின்றோம்.

எமது இவ்வார உட்பக்கம் ஒன்றில் கனடா வாழ் அரசியல் பத்தி எழுத்தாளர் நக்கீரன் அவர்கள் எழுதியுள்ள கட்டுரை ஒன்றின் தலைப்பு' பாராளுமன்ற அரசில் பதவிகளைத் பற்றிக் கொண்டவர்கள் அதை விட்டு விலகாமல் இருக்க 'எதனையும்' செய்வார்கள் என்பதாகும். அவர் பொதுவாகவே அரசியல்வாதிகள் என்று குறிப்பிட்டுள்ளமை ஏற்றுகொள்ளக் கூடியதாகும்

தனது கட்டுரையை அவர் இவ்வாறு ஆரம்பிக்கின்றார். 'ஊரார் வீட்டு நெய்யே என் பெண்டாட்டி கையே என்பது ஒரு தமிழ்ப் பழமொழி. அதாவது தன் வீட்டு நெய் என்றால் மனைவி சிக்கனமாகவும் ஊரார் வீட்டு நெய் என்றால் வாரி இறைத்தும் செலவு செய்வார் என்பதை விளக்க இந்தப் பழமொழியைக் கூறுவர் அதுபோல இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சாதாரண பொதுமக்களைப் பார்த்து வாயைக் கட்டி வயிற்ளைக் கட்டி வாழுமாறு உபதேசம் செய்கிறார். ஆனால் தனது அமைச்சரவை செலவீனங்கள் பற்றியோ, நாடாளுமன்ற உறுப்பினர்களது செலவு பற்றியோ அவர் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. கவலைப்படாதது மட்டுமல்ல நாடாளுமன்றத்தின் செலவீனங்களை அதிகரிப்பதில்தான் குறியாகயிருக்கிறார். அமைச்சரவையில் இப்போதுள்ள அமைச்சர்கள் போதாது என்று மேலும் பலருக்கு அமைச்சர் பதவிகள் வழங்க அவர் ஆயத்தமாகி வருகிறார். இதற்கான செலவு அவரது வீட்டுப் பணம் அல்ல, நாட்டின் கருவூலத்தில் இருக்கும் பணம்! என்று.

தற்போதைய இலங்கை அரசியல் விவகாரங்கள் ஒரு ஸ்தீரமில்லா நிலையில் மக்களின் ஆதரவு எதுவுமின்றி ஜனாதிபதிப் பதவியை தட்டிப் பறித்துக் கொண்ட ரணில் விக்கிரமசிங்க. அந்தப் பதவியை தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ளவே முயன்று வருகின்றார் என்பது நன்கு தெளிவாகின்றது. அதன் முதற்கட்டமாக சிலருக்கு அமைச்சர் பதவிகளை வழங்கலாம் என்ற உறுதியை வழங்கி. ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியிலிருந்து 50 இற்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துடன் இணைய நிர்ப்பந்தித்துள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. அவர்கள் எந்நேரமும் தயாராகவுள்ளனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவர் ஊடக சந்திப்பொன்றில் வைத்து அவர் இந்த கூறியுள்ள விடயமானது 'முழுப்பூசணிக்காயை சோற்றுக்குள் புதைத்தது போன்றே தெரிகின்றது, "ரணிலின் சிறந்த ஆட்சியாலும் நாட்டு மக்கள் மீதான அக்கறையாலுமே அவர்கள் அரசாங்கத்துடன் இணையத் தயாராகியுள்ளனர்" என்று அவர் தெரிவித்திருப்பது மக்கள் பற்றியும் நாடு பற்றியும் சிந்தித்துப் பார்க்கின்றார்களா? என்றே கேட்கத் தோன்றுகின்றது.

இவற்றைப் பார்க்கும் போது தமிழ் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட ரணில் விக்கிரமசிங்காவை தொடர்ந்து ஜனாதிபதிப் பதவியில் அமர்த்தும் வகையில் மக்களின் துன்பங்களை மறந்தும் அவரது பௌத்த மதத்தை தீவெங்கும் நிலை நாட்டும் முயற்சிக்கும் ஆதரவாகவே இருப்பார்கள் என்றே எண்ணத் தோன்றுகின்றது. மாங்கனித் தீவிற்கு எப்போது வெளிச்சம் வரும் என் று மக்கள் காத்திருக்க. கயவர்களின் திட்டம் இருளைக் கொண்டு வருவதுதான்!

## Mr. Tamil Canada வழங்கிய... (பின்பக்கத் தொடர்ச்சி)

**Mr. Tamil Canada** அமைப்பு நிர்வாகிகள், அனைவருமே "மேடைக்கு பின்னால்" நின்று கொண்டு மங்கையரை மாத்திரம் முன்னிறுத்தி விழாவை வெற்றிகரமாக நடத்தியதை முதலில் பாராட்ட வேண்டும்.

"மங்கையே சிறகை விரி" என்ற இந்த வருடத்திற்குரிய கருப்பொருளும் " பேசாப்பொருள்" ஐ மேடையில் பகிரங்கமாகவும் விளக்காமாகவும் பேசுவதற்கு ஒரு ஆண்களினால் நிர்வகிக்கப்பெறும் அமைப்பு வழங்கிய உயரிய சந்தர்ப்பத்திற்காகவும் மீண்டும் ஒரு தடவை **Mr. Tamil Canada** அமைப்பைப் பாராட்டு வேண்டும். கடந்த சில ஆண்டுகளாக நடத்தப்பெற்ற . பேசாப்பொருள்" ஐ மேடையில் பகிரங்கமாகவும் விளக்காமாகவும் பேசுவதற்கு வழங்கப்பெற்ற சந்தர்ப்பமாக இடம்பெற்ற மேடைக் கருத்துப் பகிர்வு நிகழ்வு இந்த வருடம் அர்த்தமுள்ள ஒரு கருத்துப் பகிர்வாக அமைந்தது என்பதும் அந்த நிகழ்வு நடைபெற்ற போது சபையில் ஒரு "ஊசி" விழுந்தாலும் அது ஏற்படுத்தும் சத்தத்தை நாம் கேட்டு விடக் கூடியதாகவே இருந்தது என்பதிலிருந்து அந்த நிகழ்வு எந்தளவிற்கு மதிக்கப்பெற்றது என்பது அனைவருக்கும் நன்கு புரிந்தது.

இறுதியாக **Mr. Tamil Canada** அமைப்பு நிர்வாகிகளையும் இயக்குனர் சபை உறுப்பினர்களையும் பாராட்டுகின்றோம்

## பைரவி நுண்கலைக் கூடத்தின் அதிபர் ஜெயச்சந்திரன் அவர்களது... (முன் பக்கத் தொடர்ச்சி)

திருமதி சாந்தி சிவகுமார் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

பிரதம விருந்தினராக "அக்னி" இசைக்குழுவின் நிறுவனரும் சமூக செயற்பாட்டாளருமான திருமதி சில்வியா பிரான்சிஸ் அவர்கள் அழைக்கப்பெற்றிருந்தார்கள். சிறப்பு விருந்தினர்களாக கனடாவில் பல்வேறு துறைகளில் சிறப்புக்களைக் கொண்ட பிரமுகர்கள் அறுவர் அழைக்கப்பட்டிருந்தார்கள். "பைரவி நுண்கலைக் கூடத்தின் அதிபரும் குருவுமாகிய ஜெயச்சந்திரன் அவர்கள் மற்றும் குருவர்ஷ 'ன் கமல்ராஜ் மற்றும் வர்ஷாஜினி கமல்ராஜ் ஆகியோரது பெற்றோர்கள் திரு. திருமதி கமல்ராஜ் ஆகியோர் விருந்தினர்கள் அனைவருக்கும் மேடையில் உரிய முறையில் கௌரவங்களை வழங்கினார்கள்.

அன்றைய தினம் விழாவின் இளம் நாயக நாயகியாக விளங்கிய குருவர்ஷன் கமல்ராஜ் மற்றும் வர்ஷாஜினி கமல்ராஜ் தங்கள் இசைத் திறனை நன்கு வெளிப்படுத்தி சபையோரின் பாராட்டுக்களைப் பெற்றார்கள். அத்துடன் அன்றைய தினம் இசை வழங்கிய இசைக் கலைஞர்கள் மற்றும் பாடல்களை இசைத்த ரொறன்ரோவின் புகழ்பெற்ற பாடக பாடகிகள் ஆகியோர் விழாவை உச்சத்திற்கு கொண்டு சென்று விழாவின் இளம் நாயக நாயகியாக விளங்கிய குருவர்ஷன் கமல்ராஜ் மற்றும் வர்ஷாஜினி கமல்ராஜ் ஆகியோரை உற்சாகப்படுத்தும் வகையில் தங்கள் பங்களிப்பை வழங்கினார்கள் என்றால் அது மிகையாகாது.

*- நன்றி செய்தி.கொம் குணா அவர்கள் மற்றும் சத்தியன்*

TRADITIONAL CHINESE
ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி,
நீரிழிவு நோய், வயிற்றுவலி,
மாதவிடாய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

HELP WANTED

Immediately we need an experienced line cook and dishwasher for a Mediterranean restaurant in Toronto Beaches area.
Fully time/ Part time day and evening shifts available.
Please call
647-783-3112 or
416-913-3361

இலங்கை வத்தளை நகரத்தில் காணி விற்பனைக்கு உண்டு

இலங்கையில் கொழும்பிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையம் செல்லும் வழியில் உள்ள வத்தளைச் சந்திக்கு அருகாமையில் உள்ள 45 பேர்ச்சஸ் காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு. காணியை முழுதாகவோ அன்றி பகுதியாய்ப் பிரித்தோ வாங்கலாம். விலையைப் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு:
(416) 839-7064
என்னும் இலக்கத்தை அழைக்கவும்

இந்தியா செய்திகள் India News

# 13 குழந்தைகள் பெற்ற தந்தைக்கு போராடி கருத்தடை செய்த மருத்துவ குழுவினர்



ஈரோடு மாவட்டம் அந்தியூர் அடுத்த பர்கூர் மலைப்பகுதி ஒன்னகரை என்ற கிராமத்தை சேர்ந்த 45 வயது மதிக்கத்தக்க ஒரு விவசாய கூலி தொழிலாளிக்கு ஏற்கனவே 7 ஆண் குழந்தைகள், 5 பெண் குழந்தைகள் என மொத்தம் 12 குழந்தைகள் இருந்தனர். இந்த நிலையில் இவர்களுக்கு கடைசியாக கடந்த 4 நாட்களுக்கு முன்பு 13-வது குழந்தையாக ஒரு ஆண் குழந்தை 3 கிலோ எடையில் பிறந்தது. 13 குழந்தைகளும் நலமுடன் உள்ளனர். இதையடுத்து மருத்துவ குழுவினர் அவர்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்ய முடிவு செய்தனர். 13 குழந்தைகள் பெற்றதால் குழந்தைகளின் தாய் ரத்த சோகையால் பாதிக்கப்பட்டு இருந்தார். இதனால் அவருக்கு குடும்ப நல அறுவை சிகிச்சை செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இதையடுத்து அந்த பெண்ணின் கணவருக்கு ஆண்களுக்கான அதிநவீன கருத்தடை அறுவை சிகிச்சை செய்ய மருத்துவ குழுவினர் ஆலோசனை வழங்கினர். ஆனால் அவர் அச்சம் அடைந்து மறுப்பு தெரிவித்து வந்தார். மருத்துவ குழுவினர் 8 முறை அவரது வீட்டிற்கு சென்று உள்ளனர். ஆனால் அவர் மருத்துவ குழுவினர் வரும் போதெல்லாம் வனப்பகுதியில் ஓடி மறைந்து கொண்டார். இந்த நிலையில் கடைசி முயற்சியாக வட்டார மருத்துவ அலுவலர் சக்தி கிருஷ்ணன், கிராம நிர்வாக அலுவலர் பாபு மற்றும் காவல் துறை மற்றும் தன்னார்வலர்கள் அடங்கிய குழு உதவியுடன் வட்டார மருத்துவ அலுவலர் தலைமையில் நேற்று ஒன்னகரை கிராமத்திற்கு நேரடியாக சென்று அவரை ஆண் அறுவை சிகிச்சை செய்து கொள்ள அறிவுறுத்தினார்கள். ஆனால் அவர் தானும் செய்து கொள்ள முடியாது தனது மனைவியும் செய்து கொள்ள முடியாது என்று கூறி பிடிவாதம் பிடித்தார். மீண்டும் மீண்டும் கர்ப்பம் தரித்தால் அவர்களுக்கு அது குறித்தான பக்க விளைவுகளை எடுத்துக்கூறி அவரை சம்மதிக்க வைத்து மற்றும் அவரது குடும்பத்தினர் அனைவருக்கும் 5 நாட்களுக்கு தேவையான அனைத்து விதமான உணவுப் பொருட்களையும் மருத்துவ குழுவினரின் சொந்த செலவில் வாங்கி அவரது மனைவியிடம் கொடுத்து விட்டு அவருக்கு பாதுகாப்பாக 2 நாட்களுக்கு ஆஷா பணியாளர்களை உடன் இருக்க வைத்தனர். பின்னர் அவரை அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்து அவருக்கு ஆண்களுக்கான நவீன கருத்தடை அறுவை சிகிச்சை செய்து முடித்து அவருக்கு ஊக்கத்தொகையும் அளித்து மீண்டும் அவரை பத்திரமாக மருத்துவக் குழுவினர் அவரது வீட்டுக்கு கொண்டு சென்று விட்டு வந்தனர். ஒரு வழியாக போராடி 13 குழந்தைகளின் தந்தைக்கு மருத்துவ குழுவினர் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து முடித்தனர்.

# கலாஷேத்ரா பேராசிரியர் ஹரி பத்மனின் காதல் லீலைகள் அம்பலம்

சென்னை கலாஷேத்ரா பேராசிரியர் ஹரிபத்மன், கேரள மாணவியின் பாலியல் புகாரின் பேரில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். பேராசிரியர் ஹரிபத்மன், தன்னிடம் அத்துமீறி பேசியதாகவும், அருவருக்கத்தக்க வகையில் நடந்து கொண்டதாகவும் அவர் குற்றச்சாட்டுகளை கூறி இருந்தார். இதுதொடர்பாக அடையாறு மகளிர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி உரிய ஆதாரங்களை திரட்டினர். இதைத்தொடர்ந்தே ஹரி பத்மன் மீது கைது நடவடிக்கை பாய்ந்தது. கேரள முன்னாள் மாணவி அளித்த புகாரில் கூறிய தகவல்கள் அனைத்தும் உண்மைதான் என்பதும், ஹரிபத்மன் காதல் மன்னனாக வலம் வந்ததும் விசாரணையில் அம்பலமாகி இருக்கிறது. முன்னாள் மாணவியின் தோழிகள் 5 பேரிடம் கேரளாவில் நடத்தப்பட்ட விசாரணையும், அவர்கள் அளித்துள்ள பரபரப்பு சாட்சியங்களுமே ஹரி பத்மனை வசமாக சிக்க வைத்துள்ளது. கேரள மாணவியிடம் ஹரிபத்மன் தகாத முறையில் பேசியது பற்றிய விவரங்களை 5 மாணவிகளும் வாக்குமூலமாக அளித்திருக்கிறார்கள். நான் வீட்டில் தனியாகத்தான் இருக்கிறேன். வீட்டுக்கு வருகிறாயா? என்று கேட்டு ஹரிபத்மன் சல்லாப முயற்சியில் ஈடுபட்டதும், கழிவறைக்கு சென்று விட்டு திரும்பியபோது யாருடன் இருந்துவிட்டு வருகிறாய்? என்று மாணவியிடம் ஹரிபத்மன் கேட்டதும் உண்மைதான் என்று மாணவியின் தோழிகள் தெரிவித்துள்ளனர்.

இது போன்று பல மாணவிகளிடம் ஹரிபத்மன் பாலியல் சீண்டலில் ஈடுபட்டி ருக்கலாம் என்று போலீசார் சந்தேகிக்கிறார்கள். இதுதொடர்பான விசாரணையை போலீசார் தீவிரப்படுத்தி உள்ளனர். ஹரிபத்மன் மாணவிகளிடம் எப்படி நடந்து கொள்வார்? என்பது பற்றி நடத்தப்பட்ட விசாரணையில் மேலும் பல தகவல்கள் வெளியாகி உள்ளன. தனது பேச்சுக்கு கட்டுப்படாத மாணவிகளை பழி வாங்கும் வகையிலும் ஹரிபத்மன் நடந்து கொண்டிருப்பதும் தெரியவந்துள்ளது. வெளியில் நிகழ்ச்சிகளுக்காக அழைத்துச் செல்லும்போது தேவையில்லாமல் பேசி மனக்கஷ்டத்தை ஏற்படுத்துவதையும், கடைசி நேரத்தில் நிகழ்ச்சிகளில் பங்கேற்க விடாமல் செய்வதையும் வழக்கமாக கொண்டிருந்ததாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. பேராசிரியர் ஹரிபத்மன் உடல் ரீதியாக தொல்லை கொடுக்கும் எண்ணத்திலேயே மாணவிகளுடன் ஆபாசமாக பேசுவது போன்ற செயல்களில் ஈடுபட்டுள்ளார். இதுவும் விசாரணையில் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இதனைத்தொடர்ந்து ஹரிபத்மனை 5 நாட்கள் காவலில் வைத்து விசாரிக்க போலீசார் முடிவு செய்துள்ளனர். இதுதொடர்பாக கோர்ட்டில் நாளை மனு தாக்கல் செய்ய உள்ளனர். ஹரிபத்மனை காவலில் எடுத்து விசாரிக்கும்போது மேலும் பல தகவல்கள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# "சொந்தமாக வீணை இல்லை" என கவலைப்பட்ட அரசுப்பள்ளி மாணவி தன் விருப்ப நிதியில் இருந்து வீணை வழங்கிய விருதுநகர் ஆட்சியர்



கலைப்போட்டியில் மாநில அளவில் முதலிடம் வென்ற தமிழ்நாட்டின் காரியாபட்டியைச் சேர்ந்த அரசுப் பள்ளி மாணவி ஒருவருக்கு, விருப்ப உரிமை நிதியில் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் வீணையை பரிசளித்தார்.

காரியாபட்டி பாண்டியன் நகரைச் சேர்ந்த கொத்தனார் ராஜா - சத்யா தம்பதியரின் மகள் காயத்திரி (வயது 15). காரியாபட்டி அரசு பெண்கள் மேல் நிலைப் பள்ளியில் 10-ம் வகுப்பு படித்து வருகிறார். இவருடைய தாய் சத்யா, சங்கீதம் மற்றும் நாட்டியத்தில் ஆர்வம் கொண்டவர். அதனால், தன் மகளிடம் சங்கீதம் கற்கும் ஆர்வத்தைத் தூண்டி வளர்த்தார். எஸ். கல்லுப்பட்டியில் வசித்த இவர்கள், மகளின் சங்கீத விருப்பத்திற்காக கடந்த 7 ஆண்டுகளுக்கு முன்பு காரியாபட்டி வந்தனர்.

காயத்திரி மிகவும் ஆர்வமாக வீணை, வயலின், பாட்டு, பரதம் கற்றுத்தேர்ந்தார்.

இந்நிலையில் விருதுநகர் மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் பள்ளிக் கல்வித் துறையால் நடத்தப்பட்ட கலைத் திருவிழாவில் ஒன்றிய, மாவட்ட அளவில் காயத்திரி பங்கேற்று மாநில அளவிலான போட்டிக்குத் தகுதி பெற்றார். கோவையில் நடைபெற்ற மாநில அளவிலான வீணை வாசிக்கும் போட்டியிலும் முதல் பரிசை வென்றார். சென்னையில் முதல்வர் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் மற்ற மாணவிகள் வீணை வாசித்தபோது காயத்திரி மட்டும் தன்னிடம் வீணை இல்லாததால் அந்த வாய்ப்பை இழந்து வாடினார்.

அதன்பின், கலைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுடன் மாவட்ட ஆட்சியர் கலந்துரையாடும் "காபி வித் கலெக்டர்" நிகழ்ச்சியில் காயத்திரியும் பங்கேற்றார்.

அப்போது, ஏன் பரிசளிப்பு விழாவில் வீணை வாசிக்கவில்லை என மாவட்ட ஆட்சியர் வீ.ப. ஜெயசீலன் கேட்டபோது, தன்னிடம் சொந்தமாக வீணை இல்லை என்றும், குருவின் வீணையை வைத்தே வாசித்து வந்ததாகவும் தெரிவித்தார்.

அதையடுத்து, தனது விருப்ப நிதியிலிருந்து தான் வீணை வாங்கிக் கொடுப்பதாக மாவட்ட ஆட்சியர் வீ.ப.ஜெயசீலன் உறுதியளித்தார். அதன்படி, தன் விருப்ப உரிமை நிதியின் மூலம் தஞ்சையிலிருந்து ரூ.25 ஆயிரம் மதிப்பிலான வீணை ஒன்றை வாங்கி மாணவி காயத்திரிக்கு மாவட்ட ஆட்சியர் வீ.ப.ஜெயசீலன் பரிசளித்தார். அந்த வீணையைப் பெற்ற மாணவி காயத்திரி "குறையொன்றும் இல்லை மறைமூர்த்தி கண்ணா" என்ற பாடலை வாசித்தது அங்கிருந்தோரை நெகிழச் செய்தது.

கடந்த 7 ஆண்டுகளாக மாணவிக்கு காயத்திரிக்கு வீணை, வயலின், பாட்டு கற்றுக்கொடுத்து வரும் குரு பால கணேஷ் இதுவரை தன்னிடமிருந்து கட்டணம் ஏதும் பெற்றதே இல்லை என்றும், தனது திறமையைப் பாராட்டி வீணை பரிசளித்த மாவட்ட ஆட்சியருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் கண்களில் நீர் ததும்ப காயத்திரி கூறினார்.

# தமிழகத்தின் நாட்டுப்புறப் பாடகி "ராக் ஸ்டார்" ரமணியம்மாள் காலமானார்

பிரபல நாட்டுப்புறப் பாடகியும், திரைப்படப் பின்னணி பாடகியுமான "ராக் ஸ்டார்" ரமணியம்மாள் உடல்நலக்குறைவால் சென்னையில் உள்ள அவரது இல்லத்தில் ஏப். 04 காலமானார். அவருக்கு வயது 63.

தனியார் தொலைக்காட்சி ஒன்றில் நடத்தப்படும் இசை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு புகழ்பெற்ற ரமணியம்மாள், அந்த நிகழ்ச்சியின் இறுதிப்போட்டியில் கலந்துகொண்டு இரண்டாவது பரிசை வென்று பலரது பாராட்டையும் பெற்றிருந்தார். இந்நிகழ்ச்சியின் மூலம் அவர் "ராக் ஸ்டார்" ரமணியம்மாள் என்று அழைக்கப்பட்டார்.

2004-ம் ஆண்டில் வெளியான "காதல்" திரைப்படத்தில் இடம்பெற்ற "தண்டட்டி கருப்பாயி" பாடல் மூலம் தமிழ் திரையுலகில் ரமணியம்மாள் அறிமுகமானார். தொடர்ந்து, காத்தவராயன், தெனாவட்டு, ஹரிதாஸ், ஜுங்கா, சண்டக்கோழி 2, காப்பான், பொம்மை நாயகி உள்ளிட்ட பல்வேறு திரைப்படங்களில் இடம்பெற்ற பாடல்களையும் பாடி புகழ்பெற்றார். இவைத் தவிர, ஏராளமான நாட்டுப்புறப் பாடல்களையும் பாடி வெளியிட்டிருக்கிறார்.

ரமணியம்மாளின் மறைவுக்கு திரை பிரபலங்களும், ரசிகர்களும், இசைக் கலைஞர்களும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். மறைந்த ரமணியம்மாளின் உடல் அஞ்சலிக்காக மேற்கு மாம்பலத்தில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டது.



# தமிழ் அரசியல் கைதிகள் 3 பேர் 14 வருடங்களின் பின் விடுதலை

இலங்கை செய்திகள் Sri Lanka News

- மன்னார் நிருபர் (03-04-2023)



14 வருடங்களாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 3 தமிழ் அரசியல் கைதிகளை வவுனியா மேல் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

2009ஆம் ஆண்டு மே மாதம் கைது செய்யப்பட்டு தடுப்பு காவலில் இருந்த யாழ். வேலணையை சேர்ந்த இ. திருவருள், யாழ் கரவெட்டியை சேர்ந்த ம. சுலக்சன், முள்ளியவளையை சேர்ந்த க. தர்ஷன் ஆகிய மூவருக்கும் எதிராக வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று வந்தது.

இந்த நிலையில், அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாததால், குறித்த மூவரையும் அனைத்து குற்றச்சாட்டுக்களில் இருந்து வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் விடுவித்து, திங்கட்கிழமை (03.04.2023) அவர்களை விடுதலை செய்துள்ளார்.

குறித்த மூன்று அரசியல் கைதிகள் தொடர்பில் மன்றில் முன்னிலையாகி வழக்கு விசாரணைகளை முன்னெடுத்த சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் கருத்து தெரிவிக்கையில், கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் இருந்து விளக்கமறியலிலும், தடுப்பு காவலிலும் வைக்கப்பட்டிருந்த இ. திருவருள் (வயது 45), ம.சுலக்சன் (வயது 34), க. தர்சன் (வயது 33) ஆகியோர் வவுனியா மேல் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 14 வருடங்களாக இவர்கள் தடுப்பு காவலிலும், விளக்கமறியலிலும் இருந்த நிலையில் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகம் இளஞ்செழியன் அவர்களால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

அரசாங்கத்திற்கு எதிராக சதித்திட்டம் தீட்டிய குற்றம் இவர்களுக்கு எதிராக சாட்டப்பட்டிருந்தது. இவர்கள் ஏற்கனவே வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்குமூலம் செல்லுபடியற்றது என நீதிமன்றம் தீர்மானித்தது.

அதனைத் தொடர்ந்து சுயாதீன சாட்சிகள் இவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டன. அந்த சாட்சியங்கள் இவர்களது குற்றத்தை நிரூபிப்பதற்கு நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை.

இதன் காரணமாக அனைத்து குற்றங்களில் இருந்து அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். மிக நீண்டகாலம் இருந்த அரசியல் கைதிகளின் வழக்காக இது காணப்படுகின்றது. உண்மையில் இவர்களது விடுதலை எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், விடுதலை செய்யப்பட்ட மூவரும், நீதிமன்றம் முன்பாக வருகை தந்திருந்த தமது குடும்பத்தினருடன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரடனும் கட்டியணைத்து தமது மகிழ்ச்சியையும், சந்தோசத்தையும் வெளிப்படுத்தியதுடன் தமது விடுதலைக்காக உழைத்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துள்ளனர்.





# மன்னார் மாவட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு தொழில் பயிற்சி

(02-04-2023)

மன்னார் மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள் மத்தியில் சுய தொழில் முயற்சியை ஊக்குவிக்கும் வகையில் தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகுதி மாற்றுத்திறனாளிகளுக்கு “உறவுகளுக்கு கைகொடுப்போம்” அமைப்பின் ஏற்பாட்டில் மெழுகு சார்ந்த உற்பத்தி பயிற்சி நெறி திங்கட்கிழமை (02) மன்னார் மாவட்ட செயலக தொழிற்பயிற்சி அதிகார சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட தேனீ அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த தொழிற்பயிற்சியில் இலங்கை கைத்தொழில் சபையின் மன்னார் மாவட்ட உதவி பணிப்பாளர் ஜே.எம்.ஏ. லெம்பேட்டினால், தெரிவு செய்யப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு பயிற்சிகள் வழங்கிவைக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலக பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மாற்றுத்திறனாளிகள் குறித்த தொழில் பயிற்சி நிகழ்வில் கலந்து கொண்டனர்,

இதன் போது சாதாரண மெழுகுதிரி, அலங்கார மெழுகுதிரி உற்பத்தி செய்வது தொடர்பாக அவற்றை பொதி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டது.



அதே நேரம் பயிற்சி பெற்றவர்கள் ஊடாக பிரதேச ரீதியாக உற்பத்தி மேற்கொள்ளப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC



www.mortgageclinccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,

Toronto, ON, M1B 2V9

(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE


Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மறைந்த மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் 2ஆம் ஆண்டு நினைவு





(01-04-2023)

மறைந்த மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களின் விண்ணகப் பிறப்பின் 2ஆம் ஆண்டு நினைவு தினமான சனிக்கிழமை (1) மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்தில் விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து தூய செபஸ்தியார் பேராலயத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ள மறைந்த மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களின் அடக்கஸ்தளத்தில் விசேட பிரார்த்தனை இடம் பெற்றது.

இதன் போது மன்னார் மறைமாவட்ட ஆயர், குரு முதல்வர், மறைந்த ஆயரின் உறவினர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# மன்னாரில் 16 கிலோ கேரள கஞ்சாவுடன் 2 நபர்கள் கைது



**- மன்னார் நிருபர் (01-04-2023)**

மன்னாரில் இரு வேறு சந்தர்ப்பங்களில் 16 கிலோ கேரள கஞ்சா பொதிகளுடன் இரு சந்தேக நபர்கள் வெள்ளிக்கிழமை (31) மன்னார் மாவட்ட பொலிஸ் குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட குற்றப்புலனாய்வு பிரிவிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை தொடர்ந்து வெள்ளிக்கிழமை (31) மன்னார் கொன் வன்ற் வீதி மற்றும், மன்னார் தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள விசேட அதிரடிப்படை முகாமிற்கு அருகாமையில் வைத்தும் இரு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் 16 கிலோ கேரள கஞ்சாவுடன் இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதனடிப்படையில் மன்னார் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொன்வன்ற் வீதி மற்றும் மன்னார் தலைமன்னார் வீதியில் நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது மன்னார் ஜே.ஆர்.எஸ். வீட்டுதிட்டம் சின்னக் கடையை சேர்ந்த 37 வயது நபரிடமிருந்து 6 கிலோ 30 கிராம் கேரள கஞ்சாவும் அதனைத் தொடர்ந்து கட்டுக்காரன் குடியிருப்பை சேர்ந்த 28 வயது நபரிடம் இருந்து தலைமன்னார் வீதியில் கெப் வாகனத்தின் 10 கிலோ 60 கிராம் கேரள கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் துல்சான் நாகாவத்தவின் பணிப்பில் குற்ற புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரி ஆர்.எம்.ஏர். ரத்நாயக்கவின் வழிகாட்டலில் பொலிஸ் சாஜன் ரத்ன மணல தலைமையிலான பொலிஸ் குழுவினர் அப்பகுதியில் கேரள கஞ்சாவை கைப்பற்றியதுடன் சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

இச் சந்தேக நபர்களிடம் பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்ட பின் கைப்பற்றப்பட்ட கேரளா கஞ்சா மற்றும் சந்தேகநபர்கள் வாகனங்கள், என்பன மன்னார் நீதவான் முன்னிலையில் முன்னிலை படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# மன்னார் நகர சபை யை மாநகர சபையாக தரமுயர்த்தும் விவகாரம்

## - பிரதமருக்கு செல்வம் அடைக்கலநாதன் எம்.பி கடிதம்





**- மன்னார் நிருபர் (03-04-2023)**

மன்னார் நகர சபை யை மாநகர சபையாக தரம் உயர்த்துவது தொடர்பில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், பிரதமர் தினேஷ் குணவர்தனவிற்கு திங்கட்கிழமை (03) அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில், மன்னார் நகர சபையை மாநகர சபையாக தரம் உயர்த்துவது தொடர்பில் அமைச்சரவையில் இருந்து அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

எனினும் இன்னும் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படவில்லை என்பதனை தங்களது கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

எனவே விரைவில் மன்னார் நகர சபையை மாநகர சபையாக தரம் உயர்த்துவது தொடர்பில் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# பிலிப்பைன்சில் பயணிகள் கப்பல் தீ விபத்தில் 32 பேர் சாவு

உலக செய்திகள் World News



பிலிப்பைன்சின் மிண்டனாவ் தீவில் உள்ள ஜாம்போங்கா நகரில் இருந்து சுலு மாகாணம் ஜோலோ தீவு நோக்கி தனியாருக்கு சொந்தமான பயணிகள் மற்றும் சரக்கு கப்பல் ஒன்று சென்று கொண்டிருந்தது. இதில் கப்பல் ஊழியர்கள் 35 பேர் உள்பட 250-க்கும் மேற்பட்டோர் பயணம் செய்தனர். இரவு இந்த கப்பல் பசிலன் மாகாணத்தின் பலுக்-பாலுக் தீவு அருகே சென்றபோது திடீரென தீப்பிடித்தது. இந்த தீ கப்பலின் மற்ற பகுதிகளுக்கும் வேகமாக பரவியது. இதனால் கப்பலில் இருந்த பயணிகள் பயத்தில் கத்தி கூச்சலிட்டனர். மேலும் பலர் பதற்றத்தில் கடலுக்குள் விழுந்தனர்.

கடலில் தத்தளித்து கொண்டிருந்தவர்கள் மற்றும் கப்பலில் இருந்த பயணி-களை மீட்புப்படையினர் மீட்டு படகுகள் மூலம் கரைக்கு கொண்டு சேர்த்தனர். இந்த சம்பவத்தில் மீட்பு படையினரின் துரித நடவடிக்கையால் 230 பேர் இதுவரை மீட்கப்பட்டனர்.எனினும் இந்த தீ விபத்து நடந்த நேரத்தில் பெரும்பாலானோர் தூங்கிக் கொண்டிருந்ததால் மீட்பு பணியில் சற்று சிரமம் ஏற்பட்டது. 6 குழந்தைகள் உள்பட 31 பேர் கருகி செத்தனர். காயம் அடைந்த 23 பேரை மீட்டு சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதித்துள்ளனர்.

# அமெரிக்க ஜனாதிபதிகளாக இதுவரைபதவி வகித்தவர்களில் குற்றவியல் வழக்குகளை எதிர்கொண்ட முதலாவது தலைவர் என்ற ''பெயரைத் தட்டிக் கொண்ட டொனால்ட் ட்ரம்ப்

ஆபாசப்பட நடிகையுடன் தான் கொண்டிருந்த முறையற்ற தொடர்பை மறைப்பதற்காகப் பணம் கொடுத்ததாகக் கூறப்படும் வழக்கில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கைது செய்யப்பட்டு, பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். இடம்பெற்ற இந்த விசாரணைகளுக்கு முன்பும் பின்பும் அமெரிக்காவின் நியுயோர்க் நகரத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

நியூயோர்க்கில் மன்ஹாட்டன் நீதிமன்றத்தில் அமெரிக்க நேரப்படி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ட்ரம்ப் விடுவிக்கப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

அமெரிக்க ஜனாதிபதிகளாகப் பதவி வகித்தவர்களில் குற்றவியல் வழக்குகளை எதிர்கொண்ட முதல் நபர் டொனால்ட் ட்ரம்ப்தான். என்ற பெயர் அவருக்கு கிட்டியுள்ளது அந்த வகையில், நீதிமன்றத்தில் ட்ரம்ப் ஆஜரான அந்த 57 நிமிடங்களும் அமெரிக்க அரசியல் வரலாற்றில், கருப்புப் பக்கங்களாகப் பதிவாகியுள்ளன என்றும் உலகின் நாலா பக்கங்களிலும் இருந்து அரசியல் விமர்சகர்கள் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்துள்ளனர்.

இதேவேளை, டிரம்ப் மீதான விசாரணையின் ஒரு பகுதியாக கைரேகைகள் பதிவு செய்யப்படுவதுடன், அவரை புகைப்படம் எடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், விசாரணையினை தொடர்ந்து டிரம்ப் சட்ட அமுலாக்கப் பாதுகாப்பில் இருப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிகவும் மோசமான சொல்லாடல்களையும், வார்த்தை பிரயோகங்களையும் விரக்தியில் செய்துவிட்டார் என்று நியாயப்படுத்தும் உங்களை வாதங்களை ஏற்க முடியாது என்று நீதிபதி மெர்ச்சான் கூறியுள்ளார்.

அவதூறு பேச்சு கூடாது என்ற எனது முந்தைய எச்சரிக்கை ஒரு வேண்டுகோள்தான், உத்தரவு இல்லை என்று குறிப்பிட்ட நீதிபதி, இந்த விவகாரம் மீண்டும் எழுந்தால் மிகவும் உன்னிப்பாகக் கவனிக்கப்படும் என்று எச்சரித்தார்.

ட்ரம்ப் மீதான வழக்கின் நீதிமன்ற நடைமுறைகள் சுமார் ஒரு மணி நேரம் நீடித்துள்ளன. ட்ரம்ப் தனது இருக்கையில் இருந்து எழுந்ததுமே ரகசிய காவல் படையினர் அவரை சூழ்ந்து கொண்டனர்.

ட்ரம்ப் தனது வழக்கறிஞர்களிடம் சன்னமான குரலில் மெதுவாகப் பேசி-னார். இதனால், சற்று தொலைவில் அமர்ந்திருந்த பத்திரிகையாளர்களால் அவர் என்ன பேசினார் என்பதைக் கேட்க முடியவில்லை.

நீதிமன்றத்தின் மையத்தில் இருந்த நடைபாதை வழியே நடந்து சென்று பின் வாசல் வழியே ட்ரம்ப் வெளியேறினார். வெளியே நின்றிருந்த ஊடகத்தினரிடம் அவர் எதையும் பேசவில்லை.அவர் மிகவும் இறுக்கமாகக் காணப்பட்டுள்ளார்.

செவ்வாய்கிழமை இடம் பெற்ற நீதிமன்ற விசாரணைகள் தொடர்பாக விபரித்துள்ள ஊடகவியலாளர்கள் சிலர் பின்வருமாறு தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்துள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதிகள், முன்னாள் ஜனாதிபதிகளுக்குப் பாதுகாப்பு வழங்கும் இரகசியக் காவல் படையினர் புடைசூழ நீதிமன்றத்திற்கு வந்த ட்ரம்ப், வழக்கமான நீலநிற கோட்டும், சிவப்பு நிற டையும் அணிந்திருந்துள்ளார்.

நீதிமன்றத்திற்குள் நுழையும் போதே சற்று மந்தமாகக் காணப்பட்ட ட்ரம்ப், தனக்காகக் காத்துக் கொண்டிருந்த வழக்கறிஞர்களை நோக்கி மெதுவாக நடந்து சென்றுள்ளார்.



அங்கே, ட்ரம்ப் செய்தியாளர்களைச் சந்திக்கவே இல்லை. அவரது உடல் மெ-ாழி மற்றும் முக பாவனைகள் பெரிய அளவில் எதையும் வெளிப்படுத்துவதாக இல்லை.

ட்ரம்ப் முன்னிலையாவதைச் செய்தியாக்குவதற்காக அங்கே கூடியிருந்த பத்திரிகையாளர்கள் தொலைபெசிகள் மற்றும் மடிக்கணினிகளைப் பயன்படுத்த அனுமதி அளிக்கப்படவில்லை.



அத்துடன், அன்றைய நீதிபதி ஜூவான் மெர்ச்சான் நீதி மன்றத்தில் தனது இருக்கைக்கு வந்ததும் ட்ரம்ப் உட்பட அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்தியுள்ளனர்.

நீதிமன்றத்திற்கு வெளியே அரசியல் மற்றும் ஊடக வெளியில் மி-கவும் பரபரப்பாக இந்த வழக்கு பேசப்பட்டாலும், வழக்கைக் கையாறும் நீ-திபதி மெர்ச்சான் ஒருபே-ாதும் குரலை உயர்த்திப் பேசவே இல்லை. என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நீதிபதி மெர்ச்சான் வெகு நிதானமாக வழக்கைக் கையாண்டார். வழக்கறிஞர்களுக்கான காலக்கெடு, அடுத்த விசாரணைக்கான தேதி நிர்ணயம் போன்ற வழக்கமான நீதிமன்ற நடைமுறைகளாகவே அது அமைந்தது.

அரசியல் அரங்கில் வெகு ஆடம்பரமாக, ஆரவாரிக்கக் கூடியவரான ட்ரம்ப் நீதிமன்றத்தில் ஒரு சில வார்த்தைகளையே பேசியுள்ளார். அத்துடன் தனது கவ-லையையும் கோபத்தையும் தவிர்த்து மரியாதையாக நடந்து கொண்டார் என்றும் நீதி மன்றத்திற்குள் இருந்த சில வழக்கறிஞர்கள் தங்கள் நண்பர்களோடு பகிர்ந்து கொண்டுள்ளனர்.

ட்ரம்ப் மீதான 34 குற்றச்சாட்டுகளை நீதிபதி வாசிக்கையில் ட்ரம்ப், “நான் குற்றம் செய்யவில்லை” என்று மட்டுமே பதிலளித்துள்ளார்.

ஒரு கட்டத்தில் நீதிபதி மெர்ச்சான், வழக்கு தொடர்பான அனைத்து விசாரணைகளின் போதும் நீங்கள் நேரில் வர அனுமதி உண்டு என்பதை ட்ரம்பிடம் நினைவூட்டினார்.

நீங்கள் இதைப் புரிந்து கொண்டீர்களா என்று நீதிபதி கேட்க, ட்ரம்ப் “ஆம்” என்று ஒரே வார்த்தையில் பதிலுரைத்துள்ளார்.

நீதிமன்றத்திற்குள் கட்டுக்கடங்காமல் அல்லது விசாரணை-யச் சீர்குலைக்கும் வகையில் நடந்து கொண்டால், விசாரணையில் முன்னிலையாவதற்கான உரிமையை இழக்க நேரிடும் என்றும் நீதிபதி மெர்ச்சான் குறிப்பிட்டுள்ளார்.

ட்ரம்ப் மிரட்டல் விடுக்கும் வகையில் சமூக ஊடகங்களில் செய்திகளைப் பதிவிட்டார் என்று குற்றம்சாட்டிய அரசு தரப்பு வழக்கறிஞர், “என் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டால் உயிரிழப்பும் மற்றும் பேரழிவுமே மிஞ்சும்” என்று குறிப்பிட்டு அவர் பதிவிட்ட ஒரு சமூக ஊடகப் பதிவைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

தன் மீதான குற்றச்சாட்டுகள் ஒரு மிகப்பெரிய அநீதி என்று நம்பும் ட்ரம்ப், மனம் நொந்துபோய் அவ்வாறு நடந்து கொண்டிருக்கலாம் என்று ட்ரம்ப் தரப்பு வழக்கறிஞர்கள் பதிலளிக்கையில் நீதிபதி மெர்ச்சான் அதற்கு மறுப்புத் தெரிவித்தார்.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் நீதிமன்றிலிருந்து வெளியேறி சிறப்பு விமானத்தில் புளோரிடா பயணமாகியுள்ளதாகவும் அறியப்படுகின்றது

இந்நிலையில் அவர் மீதான வழக்கு விசாரணைகள் டிசம்பர் 4ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு ஆபாசப்பட நடிகைக்கு தேர்தல் நிதியினை வழங்கிய குற்றச்சாட்டில் டிரம்ப் மீது குற்றவியல் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.


இதேவேளை, டொனால்ட் டிரம்ப் எதிரான 34 குற்றச்சாட்டுகளையும் உள்ளடக்கி முத்திரையிடப்பட்ட குற்றப்பத்திரிக்கை வெளியிடப்பட்டுள்ளதுடன், அவர் தனக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள 34 குற்றச்சாட்டுகளையும் மறுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் குற்றவியல் குற்றச்சாட்டை எதிர்கொள்ளும் முதல் அமெரிக்க முன்னாள் ஜனாபதி என்ற பெயரை டொனால்ட் டிரம்ப் பெற்றுள்ளார்.

சினிமா

# ''லைக்கா” விற்கும் நடிகர் விஷாலிற்கும் இடையில் ''லடாய்”

## லைக்கா நிறுவனத்தின் பல கோடி ரூபாயை கைவசமாக்கிய விஷால்.. எச்சரிக்கை செய்து செய்த நீதிமன்றம்




லைக்கா நிறுவனத்திற்கு கொடுக்க வேண்டிய பல கோடிகளை செலுத்த தவறியதால் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி அதிரடி உத்தரவை பிறப்பித்துள்ளார். நடிகர் விஷால் தன்னுடைய சொந்த தயாரிப்பு நிறுவனமான “விஷால் பிலிம் ∴ பேக்டரி” மூலம் படத்தினை தயாரிக்க, மதுரை அன்புச் செழியன் இடமிருந்து ரூபாய் 21 கோடியே 29 லட்சத்தை கடனாக வாங்கி இருக்கிறார். அந்த கடனை திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் விஷால் இருந்ததால், இதனை ஏற்றுக்கொண்டு லைக்கா நிறுவனம் அந்த தொகையை செலுத்தியது. அதற்கு பதில் விஷால் தயாரிப்பில் வெளியாகும் படங்களின் உரிமைகளை லைக்காவிற்கு வழங்குவதாக உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

இதற்கிடையே கடனை செலுத்தாமல் விஷால், தனது தயாரிப்பில் நடித்த “வீரமே வாகை சூடும்” படத்தை லைக்காவின் அனுமதி இல்லாமல் வெளியிட்டார். இதனால் கோபத்தின் உச்சத்துக்கே சென்ற லைக்கா சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. இதனை விசாரித்த நீதிபதி, நடிகர் வி'ால் ரூபாய் 15 கோ-டியை உயர் நீதிமன்ற தலைமை பதிவாளர் பெயரில் வங்கியில் நிரந்தர வைப்புத் தொகையாக டெபாசிட் செய்ய வேண்டும். அது மட்டுமல்ல சொத்து பத்திரங்களையும் தாக்கல் செய்ய வேண்டும் எனவும் உத்தரவிட்டார். இந்த உத்தரவை எதிர்த்து இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வில் விஷால் தரப்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இதனை விசாரித்த நீதிபதி விஷால் ரூபாய் 15 கோடியை செலுத்தியே ஆக வேண்டும் என்று உத்தரவை உறுதி செய்து தீர்ப்பளித்தனர். இதனை செய்யாவிட்டால் தனி நீதிபதி அமர்வில் தீர்ப்பு வரும் வரை விஷால் பிலிம் ∴பேக்டரி தயாரிக்கும் படங்களை தியேட்டர்களிலோ அல்லது ஓடிடி-யிலோ வெளியிட தடை விதித்து, மேல் முறையீட்டு வழக்கை முடித்து வைத்தனர்.

# மன்னாரில் பயனாளிகளுக்கு உலர் உணவு மற்றும் சுய தொழில் நடவடிக்கைகளுக்காக கோழிகள் வழங்கப்பட்டன

இலங்கை செய்திகள்
Sri Lanka News




- மன்னார் நிருபர் (04-04-2023)

மன்னார் மெசிடோ நிறுவனத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு செவ்வாய்க்கிழமை (04) மூன்றாவது கட்டமாக உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்ட தொடு, சுய தொழிலை மேம்படுத்தும் வகையில் ஒரு தொகுதி கோழிகளும் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய ஐந்து பிரதேசச் செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கி மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள, பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உள்ளடங்களாக 180 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு தொடர்ச்சியாக 3 மாதங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டு வந்தது.

மேலும் 3 மாதம் முடியும் போது அவர்கள் விரும்பிய சுய தொழிலை மேற்கொள்ள சுமார் 15 ஆயிரம் ரூபாய் பெறுமதியான சுய தொழில் மூலப்பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் செவ்வாய்க்கிழமை (4) 30 பயணாளிகளுக்கு 3 ஆம் கட்ட உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டதோடு, அவர்கள் சுய தொழிலை மேற்கொள்ள 15 ஆயிரம் ரூபாய் பெறுமதியில் கோழிகளும் வழங்கி வைக்கப்பட்டது.

மன்னார் மெசிடோ நிறுவனத்தில் செவ்வாய்க்கிழமை (4) மதியம் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் மன்னார் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ, விற்றோல் திட்டத்தின் வடமாகாண கண்காணிப்பு இணைப்பாளர் எஸ்.ஏ. ரெக்ஸ் மற்றும் மெசிடோ நிறுவனத்தின் பணியாளர்களும் கலந்து கொண்டு குறித்த உதவித் திட்டத்தை வழங்கி வைத்த மையும் குறிப்பிடத்தக்கது.





# பொருளாதார ரீதியாகத் வங்குரோத்து நிலைக்குச் சென்றுள்ள இலங்கை

**இலங்கையில் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக மாறி மாறி ஆட்சியில் அமர்ந்திருந்த முதலாளித்துவ மற்றும் இனவாதக் கட்சிகள் நாட்டின் பொருளாதாரத்தையும் இனங்களுக்கிடையிலான நல்லுறவை எவ்வாறு சீரழித்தன என்பதையையும் இன்றைய பொருளாதார மற்றும் அரசியல் நிலையையும் இந்தக் கட்டுரை சுட்டிக் காட்டுகின்றது.**
**- நன்றி வானவில் சஞ்சிகை**

--------------------------------------------------------------------------

பொருளாதார ரீதியாகத் வங்குரோத்து நிலைக்குச் சென்றுள்ள இலங்கை பல மாதங்களாக பகீரதப் பிரயத்தனம் செய்து சர்வதேச செட்டியாரான சர்வதேச நாணய நிதியத்திடம் 2.9 பில்லியன்கள் கடன் பெற ஒப்புதல் பெற்றுள்ளது. (அமெரிக்கா உலகம் முழுவதும் நடத்தி வரும் ஆக்கிரமிப்புச் செயல்களுக்கு பில்லியன் கணக்காக நிதி வழங்கி வரும் இத்தகைய நிதி நிறுவனங்கள் இலங்கை போன்ற நாடுகளுக்கு உதவி செய்ய எத்தனை இழுத்தடிப்புகள் செய்கின்றன.

இந்தக் கடன் தொகை நான்கு வருடங்களில் பகுதி பகுதியாகப் பிரித்து வழங்கப்படும். இந்தக் கடனை வழங்குவதற்காக சர்வதேச நாணய நிதியம் இந்தச் சின்னஞ்சிறிய இலங்கை மீது தாங்க முடியாத கடுமையான நிபந்தனைகளையும் விதித்துள்ளது. அவற்றில் சில:

கடன் மறுசீரமைப்பு திட்டம் ஏப்ரல் இறுதிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் ஐக்கிய நாடுகள் சபையின் நியமங்களுக்கு அமைவாக ஊழலுக்கு எதிரான சட்டம் கொண்டு வரப்பட வேண்டும்.

அரச வருவாயை மிக விரைவில் அதிகரிக்க தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்.

அதிக வருமானம் ஈட்டுபவர்களிடமிருந்து அதிக பங்களிப்புடன் செல்வ வரி விதித்தல் 2025க்குள் சொத்து மற்றும் சொத்து பரிமாற்ற வரி அறிமுகம் 2023 ஆம் ஆண்டு இறுதிக்குள் பணவீக்கத்தை 12%-18% ஆகக் குறைக்க இலக்கு ஜூன் மாத இறுதிக்குள் தற்போதைய இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட வேண்டும்.




நாணய மாற்று விகித நெகிழ்வுத் தன்மையை பராமரித்தல் மத்திய வங்கியை மேலும் சுதந்திரமாக்குதல் வலுவான சமூக பாதுகாப்பு வலையமைப்பை அறிமுகப்படுத்துதல்.

அத்துடன் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கிணங்க இலங்கை அரசாங்கம் தனது கட்டுப்பாட்டில் உள்ள முக்கியமான நிறுவனங்கள் சிலவற்றையும் தனியாருக்கு தாரை வார்க்க முடிவு செய்துள்ளது. அந்த நிறுவனங்களானவை:

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் மற்றும் ஸ்ரீலங்கன் கேட்டரிங் நிறுவனம், டெலிகொம், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம், ஹோட்டல் டெவலப்மெண்ட் லங்கா நிறுவனம் (கொழும்பு ஹில்டன் ஹோட்டல்), லிற்றோ காஸ் நிறுவனம், லங்கா ஹொஸ்பிடல் கூட்டுத்தாபனம், பி.எல்.சி. ஆகிய நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தப்படவுள்ளன.

இந்த நிறுவனங்களை தனியார்மயப்படுத்துவதற்கு அமைச்சரவையும் அங்கீகாரம் வழங்கிவிட்டது. அது மாத்திரமின்றி, நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைய அரச ஊழியர்களின் தொகையிலும் குறைப்புச் செய்யப்படவுள்ளது. விரைவில், கல்வி, சுகாதாரம், வங்கிகள் போக்குவரத்துச் சேவை என்பனவும் தனியார்மயப்படுத்தப்படலாம். வசதி குறைந்தவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் சமுர்த்தி நிதியும் வெட்டப்படலாம்.

அரசாங்கம் நாணய நிதியத்தின் உத்தரவுக்கமைய எடுத்துள்ள இந்த நடவடிக்கைகள் குறித்து இலங்கையின் எந்தவொரு - வலது - இடது - தேசியவாத - அரசியல் கட்சிகளும் தமது ஆட்சேபனையைத் தெரிவிக்கவில்லை. அதற்குக் காரணம், இந்த அரசியல் கட்சிகள்தான் “அரகலய” என்ற பெயரில் ஏகாதிபத்தியம் ஏற்பாடு செய்த நிகழ்ச்சித் திட்டத்தில் ஈடுபட்டு, ஆட்சி மாற்றத்தின் ஊடாக இத்தகைய ஒரு நிலை ஏற்படுவதற்கு வழி ஏற்படுத்திக் கொடுத்தவர்கள்.

ஏகாதிபத்திய சக்திகள் இலங்கை மீது தற்பொழுது சர்வதேச நாணய நிதியம் மூலம் ஏற்றியுள்ள சுமை திடீரென்று ஏற்பட்டதல்ல. இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்தே இதற்கான முயற்சிகள் நடந்து வந்துள்ளன.

1953 இல் டட்லி சேனநாயக்கவை பிரதமராகக் கொண்டு அமைந்திருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்க காலத்தில் இவ்வாறான முயற்சி ஒன்று முயற்சிக்கப்பட்டது. அப்பொழுது அந்த அரசாங்கத்தில் இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தாய்மாமனார் ஜே.ஆர். ஜெயவர்த்தன நிதியமைச்சராக இருந்தார். அரசியலில் “குள்ளநரி” என வர்ணிக்கப்படும் ஜே.ஆர்., மிகுந்த அமெரிக்க விசுவாசியும் ஆவார். மக்கள் விரோத நடவடிக்கைகளை துணிச்சலுடன் எடுக்கக் கூடியவர்.



இன்று இலங்கைக்கு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது போல அன்றும் ஒரு நெருக்கடி ஏற்பட்டது. அந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கு இன்னொரு உலக வட்டிக்கடைக்காரனான உலக வங்கி இலங்கைக்கு சில ஆலோசனைகளை முன்வைத்தது. அதன்படி, நிதியமைச்சர் ஜே.ஆர்., இலங்கை மக்களுக்கு வழங்கி வந்த பங்கீட்டு அரிசியின் விலையை மும்மடங்காக்கினார், தபால் தந்தி மற்றும் போக்குவரத்துக் கட்டணங்களை உயர்த்தினார், பாடசாலைப் பிள்ளைகளுக்கு மதிய வேளையில் இலவசமாக வழங்கப்பட்டு வந்த பணிசை நிறுத்தினார். இவ்வாறு இன்னும் பல மக்கள் விரோத நடவடிக்கைகளை எடுத்தார்.

இதனால் இடதுசாரித் தொழிற்சங்கங்களில் அமைப்பு ரீதியாக அணிதிரண்டிருந்த இலங்கைத் தொழிலாளி வர்க்கம் ஐ.தே.க. அரசுக்கெதிராகக் கிளர்ந்தெழுந்து ஒரு நாள் வேலை நிறுத்தத்தையும், முழு அடைப்பையும் “ஹர்த்தால்” என்ற பெயரில் 1953 ஆகஸ்ட் 12 ஆம் திகதி நாடு தழுவிய ரீதியில் நடத்தியது. தொழிலாள வர்க்கம் நடத்திய இந்தப் போராட்டத்துக்கு முழுநாட்டு மக்களும் ஆதரவளித்தனர். அதன் காரணமாக டட்லியின் அரசு கவிழ்ந்தது. அவர் நாட்டை விட்டு ஓடினார். இதனால் உக வங்கி இலங்கையில் மேற்கொள்ளவிருந்த நாசகாரத் திட்டங்கள் தவிடுபொடியாகின.

ஆனால், ஜே.ஆர். ஜெயவர்த்தன 1977 தேர்தலின் மூலம் நாட்டின் நிறைவேற்று ஜனாதிபதியாகிய பின்னர், ஏகாதிபத்திய பொருளாதார நிறுவனங்களின் கொள்ளைக்காரத் திட்டங்களை “திறந்த பொருளாதாரக் கொள்கை” என்ற பெயரில் மீண்டும் நடைமுறைப்படுத்த முயற்சிகள் எடுத்தார். அதன் காரணமாக நாட்டின் செல்வங்களை அந்நியர் வாரிச் சென்றதுடன், அந்நியக் கடன்களால் நாடு பாரிய கடனாளியாகவும் மாறியது. ஜே.ஆர். செய்த கைங்கரியத்தின் (அளவற்ற கடன் வாங்கியதின்) தொடர்ச்சியே நாடு இன்று எதிர்நோக்கும் திவால் நிலைமையாகும்.

ஜே.ஆரின் மக்கள் விரோத செயல்பாடுகளுக்கு 1994 இல் மக்கள் முடிவு கட்டினர். ஐ.தே.கவை விரட்டியத்த மக்கள், 2015 வரை சுமார் 20 வருடங்கள் அந்த நிலையைப் பாதுகாத்தனர். இருந்தும் இந்தக் காலகட்டத்தில் அதிகாரத்தில் இருந்த சந்திரிக மற்றும் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசுகள் நாட்டை சுயசார்புப் பொருளாதார நிலைக்கு இட்டுச் செல்லும் அடிப்படையான மாற்றங்கள் எதையும் செய்யவில்லை. ஆனால் அதே நேரத்தில் அவ்வரசுகள் - குறிப்பாக மகிந்த ராஸ பக்ச தலைமையிலான அரசு - ஏகாதிபத்திய பொருளாதார நிறுவனங்கள் தாம் நினைத்தபடி இலங்கையில் செயல்பட அனுமதிக்கவும் இடம் கொடுக்கவில்லை.

இதனால் ஆத்திரமடைந்த அமெரிக்கா தலைமையிலான மேற்குலக சக்திகள் திட்டமிட்ட முறையில் மகிந்த ராஜபக்சவை 2015 ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடித்து தமக்கு இசைவான ஆட்சியொன்றைக் கொண்டு வந்தனர். ஆனால் அந்த அரசின் செயல்பாடுகளை ஏற்காத மக்கள் அடுத்து வந்த ஜனாதிபதி தேர்தலில் கோத்தபாய ராஜபக்சவை அமோக வெற்றிபெற வைத்து, மேற்குலக சக்திகளின் திட்டங்களுக்கு ஒரு தடையை ஏற்படுத்தினர்.

இந்த நிலைமையில் அரசியலுக்குப் புதியவரான கோத்தபாய ராஜபக்ச நாட்டை பொருளாதார தன்னிறைவை நோக்கி சில நடவடிக்கைகள் எடுக்க முயன்றாராயினும், அவரது தூர நோக்கு அற்ற , திட்டமிடாத நடவடிக்கைகளாலும், ஏகாதிபத்திய சக்திகள் திட்டமிட்டு உருவாக்கிய செயற்கைப் பொருளாதார நெருக்கடியாலும், அவர் ஆட்சியைத் தொடர முடியாத சூழல் உருவானது. அவரது தலைமையிலான ஆட்சியை வீழ்த்துவதில் அமெரிக்கா தனது உள்ளூர் அடிவருடிகள் மூலம் நடத்திய “அரகலய” என்ற போராட்டம் ஒரு முக்கிய பங்கை வகித்தது. இதில் ஈடுபட்டவர்கள் இன்று உண்மையை மறைத்தாலும் இந்த விடயம் வருங்காலத்தில் அம்பலத்துக்கு வந்தே தீரும்.

ஏகாதிபத்தியவாத சக்திகள் திட்டமிட்டு உருவாக்கிய ஆட்சி மாற்றத்தின் மூலம், சர்வதேச நாணய நிதியம் போன்ற ஏகாதிபத்திய நிறுவனங்களின் கொத்தடிமையாக இன்று இலங்கை மாற்றப்பட்டுள்ளது. அவர்களுக்கு வசதியான இலங்கையின் பொருளாதாரச் சூழலும், அவர்களுக்கு விருப்பமான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், அவர்கள் தாம் நினைத்ததை இலங்கையில் சாதிப்பதற்கு வழியேற்படுத்திக் கொடுத்துள்ளது.

பல மூன்றாம் உலக நாடுகளில் ஏற்பட்டது போலவே, இலங்கையும் இந்த ஏகாதிபத்திய நிறுவனங்களின் செயற்பாட்டால் விரைவில் முன்பிருந்ததை விட மோசமான வங்குரோத்து நிலையை அடைவதை நாம் பார்க்கத்தான் போகிறோம். அதுவரையும் இலங்கையின் முதலாளித்துவ சக்திகள் சர்வதேச நாணய நிதியம் வழங்கியுள்ள 2.9 பில்லியன் கடனுதவி இலங்கையில் சொர்க்கத்தை உருவாக்கி, நாட்டில் தேனும் பாலும் ஓட வைக்கும் என மக்களுக்குப் பொய் சொல்லிக் கொண்டிருப்பார்கள்.

ஆனால் நதிகள் ஒருபோதும் பின்நோக்கிப் பாய்வதில்லை.

# யாழ்ப்பாணம் – சிறுப்பிட்டியில் பசுமை தமிழ்த் தேசிய இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி

## TORONTO VOICE OF HUMANITY நிதியுதவியில்-பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் ஆரம்ப வைபவத்தில் அமைப்பின் பிரதி பங்கேற்பு




தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி கடந்த சனிக்கிழமை (01.04.2023) சிறுப்பிட்டியில் நடைபெற்றது. மாணவர்களுக்குச் சுற்றுச்சூழல் பற்றிய அறிவைப்புகட்டி அதனூடாக சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களைச் சூழல் பாதுகாப்பில் பங்குபற்றுநர்களாக்கும் நோக்குடனும், மாணர்களிடையே பன்முக ஆளுமைத்திறனை விருத்தி செய்யும் நோக்குடனும் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் பசுமை அறிவொளி நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை கிராமங்களில் முன்னெடுத்து வருகின்றது. இதன் தொடர்ச்சியாகவே இப்பசுமை அறிவொளி நிகழ்ச்சி சிறுப்பிட்டியில் அண்ணமா மகேஸ்வரர் ஆலய கலாசார மண்படத்தில் நடைபெற்றுள்ளது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் சிறுப்பிட்டி மேற்கின் இணைப்பாளர் கு. மயூதரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக ரொறன்ரோவின் மனிதநேயக்குரல் அமைப்பைச் சார்ந்த மரியாம்பிள்ளை மர-ியராசா கலந்துகொண்டிருந்தார். தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலை-வர் பொ. ஐங்கரநேசன் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மாணவர்களின் வகிபாகம் தொடர்பாக உரையாற்றினார். தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பொருளாளர் க. கேதீஸ்வரநாதனும் கலந்துகொண்டிருந்த இந்நிகழ்ச்சியில் நூற்றுக்கணக்கான மாணவர்களும் பெற்றோர்களும் பங்கேற்றிருந்தனர். நிகழ்ச்சியின் இறுதிய-ில் மாணவர்கள் அனைவருக்கும் சூழல் விழிப்புணர்வு மேற்கோள்கள் மற்றும் புகைப்படங்கள் அடங்கிய அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன. இதற்கான அனுசரணையை ரொறன்ரோவின் மனிதநேயக்குரல் அமைப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சனிக்கிழமை (01-04-02023 Saturday) மாலை யாழ்ப்பாணம் சிறுப்பிட்டிக் கிராமத்தில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற பாடசாலை மாணவ மாணவிகளுக்கான அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் வைபவத்திலும் கனடாவிலிருந்து மரியாம்பிள்ளை மரியராசா அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவரும் முன்னாள் வட மாகாண விவசாய அமைச்சருமான பொ. ஐங்கரநேசன் அவர்களின் ஏற்பாட்டில் வருடா வருடம் கையளிக்கப்படும் இந்த திட்டத்திற்கு கனடாவின் "ரொறன்ரோ மனிதநேயக் குரல்" அமைப்பு - TORONTO VOICE OF HUMANITY - தொடர்ச்சியாக பல வருடங்கள் நிதியை அனுப்பி வளயருவதும் இந்த வருடத்திற்குரிய 15 இலட்சம் இலங்கை ரூபாய்களை இங்கிருந்து அனுப்புவதற்கு கனடா வாழ் திருமதி. சக்தி ஞானம்மா. வர்த்தகப் பிரமுகர்கள் திரு. சங்கர் நல்லதம்பி. திரு. நிமால் விநாயகமூர்த்தி. திரு. பாஸ்கரன் சின்னத்துரை மற்றும் யாழினி-இந்துநாதன் குடும்பத்தினர் நிதிப் பங்களிப்பு வழங்கியுள்ளார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.








# Thana Insurance Inc

THANA INSURANCE Inc.

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

**20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி**

**மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி**

**சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்**

**உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்**



Call us Today

**Cell : 416-728-5772**
**Office : 416-519-3896**

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

உதயனின் பிரத்தியேகச் செய்தி

# விநாயகர் விமர்சனம்

## இலங்கையில் பெண்கள் ''சக்தி'' உடையவர்களா?

(கனடா உதயனின் பிரத்தியேக சிறப்புக் கட்டுரைத்தொடர் - பகுதி 10)

- கொழும்பிலிருந்து கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி



கல்வியா? செல்வமா? வீரமா? இம்மூன்றில் எது சிறந்தது? இம்மூன்று சக்திகளும் தம்முள் போட்டியிட்டு தாமே தலை சிறந்ததாகக் காட்ட முயற்சிப்பதாகக் காட்சிப்படுத்திய திரைப்படம் சரஸ்வதி சபதம். இறுதியில் இம்மூன்றும் ஓரிடத்தில் இருந்தால் அதற்கு நிகரேது என்று சௌந்தரராஜனின் கணீர் குரலில் கேட்டு முடித்திருப்பார் அதன் இயக்குநர் நாகராஜன். இன்மூன்று சக்திகளையும் பெண்வடிவங்களாகக் காட்டக் காரணமுண்டு.

வலுவான மனத்தைரியமும் தாக்குப்பிடிக்கும் திறனும் பெண்களுக்கே அதிகமுண்டு என்ற நம்பிக்கையின் வெளிப்பாடு இது என்று வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம். தவறில்லை.

சீச்சீ அப்படியெல்லாம் கிடையாது ஆண்கள் தான் பலசாலிகள் தாக்குப்பிடிப்பவர்கள் என்று வாதிடும் நண்பர்கள் உங்கள் எதிர்வாதத்தை உங்கள் மனைவியிடம் அவிழ்த்து விட்டுப்பாருங்கள். அப்போது தெரியும். ஏற்படும் முன்-பின் விளைவுகளுக்கு நான் பொறுப்பல்ல. வெளியுலகுக்கு சிங்கம் போல மற்றவர்களுக்குத் தெரிபவர்கள் வீட்டுக்குள்ளே வெறும் மியாவ்கள் தான். ஓரிரண்டு விதிவிலக்ககல் வேண்டுமானால் இருக்கலாம் ஆனால் பெரும்பாலும் இப்படித்தான். ஹோம் மினிஸ்டராக வீட்டுக்காரியங்களைக் கவனித்து குடும்பம் ஒழுங்காக நடக்க குத்துவிளக்காகத் தொழிற்படும் அம்மணிகள் தான் இப்படி. மற்றபடி இருவரும் வேலைக்குச் செல்லும் குடும்பங்களில் இந்த விவகாரங்கள் எப்படிக் கையாளப்படும் என்பதை நான் சொல்லித்தான் தெரிந்து கொள்ளவேண்டிய அவசியமில்லை. ஒரு வளர்ச்சியடைந்த நாடாகிய கனடாவில் வாழும் நீங்கள் அதை அனுபவித்துத் தெரிந்த கொண்டிருப்பீர்கள்.

தெற்காசிய சமூகங்களில் குடும்பம் பற்றிய தீரமானம் எடுத்தலில் ஆண்கள் வெறும் "ரப்பர் ஸ்டாம்ப்" மாத்திரம் தான். ஒரு பாட்டியாக, தாயாக, மனைவியாக, மகளாக அவர்களின் செல்வாக்கு குடும்பத்தில் எப்போதும் இருக்கும். இதெல்லாம் சரிதான். வெளியுலகிற்கு பெண்கள் எப்படித் தெரிகிறார்கள் என்று பார்த்தால் - பெரும்பாலான கட்புல, செவிப்புல ஊடகங்கள் அவர்களை வெறும் கவர்ச்சிப் பொருளாகக் காட்டிச் சம்பாதிக்க எத்தனிக்கிறார்கள் என்பது வெளிப்படை.

இவற்றையெல்லாம் மீறி சாதனைப் பெண்களாக அரசியல், பொருளாதாரம், சமூகம், விஞ்ஞானம், தொழில் என்று பல்வேறு துறைகளிலும் பெண்களின் பங்களிப்பு அதிகரித்து வருகிறது. அதிலும் குறிப்பாக மத்திய கிழக்கிலே அண்மைக்காலமாக பெண்களுக்கு சாதகமாக ஏற்பட்டுவரும் மாற்றங்களைச் சொல்லலாம்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் வாக்குரிமை வழங்கப்பட்டபோது ஆண் பெண் இருபாலாருக்கும் சேர்த்தே வழங்கப்பட்டது. ஆகவே அரசியல் செயற்பாடுகளிலிருந்து பெண்களை விலக்கி வைக்கும் காரியங்கள் இலங்கையில் இடம்பெறவில்லை என்று கூறலாம். உலகின் முதலாவது பெண் பிரதமரையும் நாட்டின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியையும் உருவாக்கிய நாடு என்ற பெருமையை இலங்கை கொண்டிருப்பதற்கு மேற்படி சுதந்திரங்கள் காரணம் என்று கூறப்படலாம். ஆனால் இவ்விரு பெண்மணிகளும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இலங்கையின் துரதிருஷ்டவச அரசியலில் துப்பாக்கிக் குண்டுகளுக்கு தமது கணவன்மாரைப் பறிகொடுத்தவர்கள். அவ்விருவரும் அப்பதவிகளுக்கு வருவதற்கு கணவன்மாரை அரசியலில் இழந்த



பரிதாபமும் ஒரு முக்கிய காரணியாக இருந்தது என்பதை மறுக்க முடியாது. ஆனால் இலங்கையின் பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் போதியதாக இல்லை என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

இருக்கின்றவர்களும் நாகரிகமாக அரசியல் செய்ய முடியாத சூழ்நிலைகளை எதிர்நோக்குவதைக் காண முடிகிறது. பொருளாதார ரீதியில் நோக்குமிடத்து இலங்கையின் பொருளாதாரம் பெண்களில் தங்கிவாழ்வதாகக் கூறலாம். காரணம் இலங்கைக்கு வெளிநாட்டு வருமானத்தை ஈட்டித்தரும் தேயிலை உற்பத்திக்கைத் தொழில் ஆடைதயாரிப்புக் கைத்தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் துறை ஆகிய மூன்றிலும் பெண்களின் பங்களிப்பே அதிகளவில் உள்ளது. இவற்றுள் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஆண்களின் சதவீதம் படிப்படியாக அதிகரித்துச் செல்கின்ற போதிலும் ஏனைய இருதுறைகளிலும் பெண்களின் ஆதிக்கமே அதிகமாக உள்ளது.

அது தவிர அரச வேலைவாய்ப்புகளை எடுத்துக்கொண்டாலும் அதிலும் பெண்களின் சதவீதம் அதிகமாக உள்ளது. இலங்கையின் குடித்தொகையில் பெண்களின் சதவீதம் சற்று அதிகமாக உள்ளமை நமக்குத் தெரியும். பாடசாலை உள்வாங்கலில் இருபாலாருக்கும் சமஉரிமை உள்ளது. ஆனால் பாடசாலை இடைவிலகலில் ஆண்களின் சதவீதம் அதிகமாக உள்ளது. இதனால் கல்விப்பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கு வரும் போது பெண்களின் சதவீதம் ஆண்களைவிட உயர்வாக உள்ளது. இதற்குக் காரணம் ஆண்களின் பாடசாலை இடைவிலகலும் கல்விப்பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சையில் பெண்களின் சிறந்த பெறுபேறுகளுமாகும். அத்துடன் கல்விப்பொதுத்ராதர உயர்தரப்பரீட்சையில் கலை மற்றும் வணிகப்பிரிவுகளிலேயே அதிகளவு மாணவர்கள் தோற்றுகின்றனர். இப்பிரிவகளில் ஆண்களை விடப் பெண்களே அதிகளவில் தோற்றுகின்றனர்.



ஆனால், விஞ்ஞானம் கணிதம் போன்ற தொழினுட்பத் துறைகளில் பெண்களைவிட ஆண்களே அதிகளவில் பிரகாசிப்பதையும்காணமுடிகிறது. பொதுவாகச் சொன்னால் கலை மற்றும் வணிகப் பிரிவுகளில் பெண்கள் வெளுத்துக்கட்டுகிறார்கள் எனலாம். இதன் விளைவாகப் பல்கலைக்கழகங்களில் கலை மற்றும் வணிகப்பிரிவுக்குத் தெரிவ செய்யப்படும் மாணவர்களில் பெண்களின் எண்ணிக்கை மிக் மிக அதிகமாக உள்ளது. குறிப்பாக கலைப்பிரிவில் அல்லி ராஜ்ஜியமே நடக்கிறது. இதன் விளைவாக விரிவுரையாளர்களை உள்வாங்கும் போதும் கலைத்துறையில் பெரும்பாலும் பெண்களே ஆதிக்கம் செலுத்தும் நிலை உருவாகி வருகிறது.

வணிகத்துறையிலும் இந்நிலை படிப்படியாக அதிகரித்து வருகிறது. தனியார் துறை வேலைவாய்ப்புகளில் வணிகத்தறை சார்ந்தவற்றில் பெண்களின் பங்களிப்பு அதிகரித்துச் செல்கிறது. அரச போட்டிப் பரீட்சைகளியல் பெண்களின் தேர்ச்சிவீதம் அதிகரித்தள்ளமை தெளிவாகத் தெரிகிறது. எனவே அரச உயர்பதவிகளுக்கு பெண்கள் தகுதியுடையவர்களாக மாறியுள்ளனர் ஆயினும் ஆணாதிக்க மனப்பான்மை காரணமாக அவர்களின் வாய்ப்புகள் மறுக்கப்படுவதாக குற்றச்சாட்டுகள் எழுகின்றன. ஆனால் தனியார்துறையில் பெண்களின் பதவி உயர்வுகள் மறுக்கப்பட்டதாக குற்றச்சாட்டுகளைக் காண முடியவில்லை.

மறுபுறம் இலங்கையில் உள்ள தொழிலாளர்களின் தன்மை குறித்து கவனம் செலுத்துவேமாயின் இலங்கையில் உள்ளவர்களை இருகூறாகப் பிரிக்கலாம். முதலாவது பொருளாதார ரீதியில் செயற்பாட்டில் உள்ள சனத் தொகை (economically active population) இரண்டாவது பொருளாதார ரீதியில் செயற்பாட்டில் இல்லாத சனத் தொகை (economically inactive population). இதில் செயற்பாட்டில் உள்ள சனத் தொகையில் இப்போது வேலை செய்து கொண்டிருப்பவர்களும் வேலை தேடிக் கொண்டிருப்பவர்களும் உள்ளடங்குவர். செயற்பாட்டில் இல்லாத சனத் தொகையில் வேலை செய்ய விருப்பமில்லாதவரகளும் ஓய்வு பெற்றவர்களும் உடல் நலிவடைந்தோரும் அங்கவீனர்களும் வேலை செய்ய அனுமதிக்கப்படாத முழுநேர மாணவர்களும் சட்டரீதியில் வேலை செய்ய அனுமதிக்கப்படாத சிறைக்கைதிகள் போன்றோரும் உள்ளடங்குவர்.



இலங்கையில் 2020இல் வெளியிடப் பட்ட ஆய்வுத் தகவல்களின் படி பொருளாதார ரீதியில் செயற்பாட்டில் உள்ள சனத் தொகையில் ஆண்களின் சதவீதம் 66.1 சதவீதமாகவும் பெண்களின் சதவீதம் 33.9 ஆகவும் இருந்தது. மறுபுறம் பொருளாதார ரீதியில் செயற்பாட்டில் இல்லாத சனத்தொகையில் ஆண்களின் வீதம் 26.5 ஆகவும் பெண்களின் சதவீதம் 73.5 ஆகவும் இருந்தது. இவ்வாறுள்ள பெண்களின் எண்ணிக்கை 61 இலட்சம் என அந்த ஆய்வு கூறுகிறது. வேறு வகையில் கூறுவதாயின் இலங்கையின் சனத்தொகையில் அரைவாசிக்கும் அதிகமாகவுள்ள பெண்கள் கல்விகற்பதிலும் ஆண்களைவிட முன்னேறியுள்ளனர்.

ஆனால், அப்படி தகுதி வாய்ந்த நிலையில் உள்ள பெண்களில் பெரும் எண்ணிக்கையினர் வேலை செய்ய விரும்பவில்லை அல்லது வேலை செய்வதிலிருந்து விலக்கிவைக்கப்பட்டுள்ளனர் என்று கூறலாம். இலங்கையில் வேலை செய்யக் கூடிய வயதும் தகுதியும் இருந்தும் அவர்களில் முக்காற்பங்கினர் வேலை செய்யவில்லை அல்லது வேலை தேடவில்லை என்பது உங்களில் பலருக்குப் பதிய தகவலாக இருக்கலாம். அப்படி வேலை செய்யாமல் இருக்கும் பெண்களிடம் அது பற்றிய காரணம் கேட்டபோது 14 சதவீதமானோர் படிப்பில் ஈடுபட்டிருப்பதாகக் கூறினர் ஆனால் 60 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் வீட்டுவேலைகளில் ஈடுபட்டிருப்பதால் வேலை செய்யவில்லை என்று பதிலளித்திருக்கிறார்கள். ஆகவே பெண்கள் வேலையில் ஈடுபடாமல்.'.ப்இருப்பதற்கு அவர்களது குடும்பப் பொறுப்புகளே முக்கிய காரணமாக இருக்கின்றன. ஆண்களில் குடும்பப் பொறுப்பகள் காரணமாக வேலை செய்யவில்லை என்று கூறியவர்களின் சதவீதம் வெறும் 3.7 மாத்திரமே.



இதில் வேடிக்கை என்னவென்றால் உயர்கல்வி கற்ற பெண்களும் கூட குடும்பப் பொறுப்புகள் காரணமாக தொழில் புரியாமல் விட்டிருப்பது தான்.

இலங்கையில் அரசாங்கம் பாடசாலை முதல் பல்கழைக்கழகம் வரை இலவசக் கல்வியை வழங்கிவருகிறது. அதற்காக பெருந்தொகைப்பணமும் செலவ செய்யப்படுகிறது. ஆனால் அதன் மூலம் உருவாக்கபட்ட மனித மூலதனத்தின் கணிசமானபகுதி பயன்பாட்டில் இல்லாமல் இழக்கப்படுவது பொருளாதார ரீதியில் புத்திசாலித்தனமற்ற ஒரு நடவடிக்கையாகும்.

(தொடர்ச்சி 19_ பக்கம்)

# Archaeology, Arrogance, and Atrocity going beyond limits in Sri Lanka

- Siva Parameswaran

Even government ministers in Sri Lanka are unable to stand before the 'atrocities' of the Archaeology department and that department has become the 'superpower' in the island nation.

Two government ministers - Douglas Devananda and Jeevan Thondaman has to cut a sorry figure after they were turned away by the archaeology department when they led a group of people to reinstall a 'Sivalingam' at Vedukkunarimalai in Vavuniya which was vandalized by 'unknown' persons a few days ago.

While the ministers say the reinstallation could not happen due to a court case, local Tamil people say it's all hoodwinking and they are puppets manipulated by the Sinhala Buddhist monks backed by the department saying the place is what they claim to be a Buddhist archaeological site. Both the ministers say a decision would be taken after detailed talks with all concerned.

The desecration of the idols at the historic Sivan Kovil at Vedukkunarimalai has caused a deep sense of anguish among the war-affected Tamils, who have been victims of such continuous assault on their cultural and religious belief, culture, and heritage.

Among those idols desecrated at the place include a Sivalingam, Vairavar, Vinayagar, Balamurugan, and also other religious items used for prayers.

The temple authorities were in for a deep shock when they found their temple and idols were vandalized which has become a norm rather than an exception in the traditional Tamil homeland of North and East.



A complaint was subsequently made to the Nedunkeni Police and the Human Rights Commission of Sri Lanka, and this assault on religion was also brought to the notice of the President by these two ministers.

At the same time, a discussion was also held at the Vavuniya district secretariat with the participation of Hindu and Christian religious leaders. A decision was taken to reinstall the idols including the 'holy Sivalingam' at the same place.

Based on this agreed decision the temple authorities and devotees planned for the reinstallation of the idols at an auspicious time between 12 midnight and 3 Am on the 2nd of April. But the 'super power' department of archeology accused of 'acting like a benami agent' of Sinhala Buddhist monks used their political muscle power to not only stop the reinstallation but also ensured that three Tamils who went atop the hill to make the preliminary arrangements for the installation of the Sivalingam, were taken into custody. They were subsequently released after recording a statement.

Vavuniya residents and the Temple authorities on condition of anonymity say the three were local masons who were arranged by a local agent allegedly close to minister Douglas Devananda. However, this could not be independently verified.

Temple authorities also claim that both these ministers had assured not only them but also all concerned that 'come what may ever' the idols would be reinstalled atop the hill shrine. As such, the ministers along with their respective MPs Kulasingam Dhileepan (EPDP) and Maruthupandi Rameswaran (CWC) attempted to climb the hill only to be told by the police and archaeological department that no such idols could be installed since a case is pending in the Vauniya court and a decision is expected on the 10th of April.

'A detailed discussion could be held after that date and a decision taken on this' the ministers told the locals after their attempted reinstallation ended in a fiasco under the influence of the archeological department.

The Tamils say they feel betrayed by the ministers and their inability to stand up to their religious, and cultural rights which is being obstructed in a sinister way by the Buddhist Monks with the support of the archeological department.

'We feel terribly let down and disappointed that the ministers could not only ensure the rights of the Tamil people but also stand exposed' a member of the temple management told requesting that his name be withheld for fear of reprisal.

Both the ministers also faced flak when journalists questioned them about their said to be efforts in the reinstallation.

"Were you not aware that a court case was pending in this issue?"

Silence was the answer.

Vavuniya residents say the ministers could not even go atop the hill to the site of the desecrated temple but only go around the foothills of Vedukkanarimalai.

"This is terribly disappointing", a local resident and a member of the Temple management said.

Temple authorities say a 'unilateral decision by a few led to this chaos'.

Armed police along with the Special Task Force personnel in large numbers were stationed at the foothills and the roads leading to it and the public who ventured to travel to the place were photographed and intimidated temple management says.

"The police threatened people and warned them of serious consequences if they attempt to climb atop the hill and involve in illegal activities".

Clearly trying to reinstall vandalized idols at a historic temple and Tamils fighting for their religious and cultural rights, which have been declared as fundamental rights by the UN are "illegal activities" by the Sinhala majority administration.

The treachery tentacles of the Octopus Archaeological department in Sri Lanka is spreading far and wide in Sri Lanka in particular the traditional homeland of the Tamils-the North & East - war - affected Tamils allege.

After continuing brazen land grabbing in the North under the guise of an archaeological site and the said to be findings of Buddhist relics, the modus operandi of encircling land areas with the help of the state and installing a Buddha Statue, and constructing a makeshift Vihara has extended to the East now in pulmoddai.

Attempts were made there to fire upon unarmed Tamil speaking minorities by those who accompanied Buddhist monks attempting to grab lands belonging to the Tamil and Muslim people in the Pulmoddai Ponmalaikuda region under the Kuchaveli divisional secretariat area in Trincomalee district.

Locals have protested against the activities of Buddhist monks involved in the forced land-grabbing attempts in and around the Ponmalai hill area rounding up the lands belonging to the Tamils and Muslims and attempting to install Buddha statues and construct a Vihara there.


DEPARTMENT OF ARCHAEOLOGY

While the Tamils and Muslims were protesting against the attempts to grab their lands, they were intimidated by those who accompanied the monks by brandishing their pistols on the first of April.

Traditionally Tamils and Muslims have lived in Pulmoddai. Both communities have lands in the Ponmalaikuda highland which is surrounded by the villages of Kothaavaditivu, Ponmalaikuda, Arisi malai, and Shafa Nagar. They also have set up tents in the area for their business.

On the 30th of March, the Buddhist Monk of Pulmoddai Arisimalai- Panamure Tilakavansa thero went to that place along with the military and the officials of the archaeological department to usurp that place by installing a Buddha statue. The locals gathered and protested against such a move on the day and subsequently on 1st April.

The said monk's brother Sampath who is also his driver trespassed into the private land of a pulmoddai farmer by cutting the fence and taking the vehicles inside. The local public gathered in support of the land owing farmer and protested against this trespassing and highhandedness of the monk and his associates.

As the protests began to gain strength the armed personnel of the Ministerial Security Division providing security to Panamure Tilakavansa thero brandished their pistols pointing at the protesters threatening them to shoot dead.

More than 30 people along with 15 military persons in civil dress accompanied by other Buddhist Monks with the planned intention of installing a Buddha statue at that place. As usual officials of the archaeological department were also present.


Land-owning local farmers have alleged for long that the supporters of the said monk would damage their crops time and often during the night. Moreover, they express concern that constant attempts are being made to evict them by intimidation.

Pulmoddai public also says the said monk Panamure Tilakavansa thero is continuously targeting the Tamil areas in Trincomalee and grabbing them with the tacit support of the army and archaeology department. As such efforts are on to evict the land owners from thousands of land pieces there claiming and identify them as Buddhist heritage sites, without the production of any valid legal, historic documents to prove their claims.



# அரசாங்கத்தின் உள்நோக்கம் என்ன?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



**வெ**டுக்குநாறி மலையில் சிவனாலயம் சிதைக்கப்பட்டமை, கன்னியா வெந்நீர் ஊற்று விவகாரம், கச்சதீவில் புத்தர் சிலை, நெடுந்தீவில் வெடியரசன் கோட்டை விவகாரம், புல்மோட்டையில் முஸ்லிம்களின் பிரதேசத்தில் புத்தபிக்குவின் அட்டகாசம், இவற்றோடு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை புதிய வடிவத்தில் புதுப்பிக்க முற்படுவது... போன்ற அனைத்தும் எப்படிப்பட்ட ஒரு காலகட்டத்தில் நிகழ்கின்றன?

முதலாவதாக, ஜெனிவா கூட்டத் தொடர் நடந்து கொண்டிருக்கும் ஒரு காலகட்டம். கடந்த நான்காம் திகதிதான் ஜெனிவா கூட்டத் தொடர் முடிவுக்கு வந்தது. இரண்டாவது, இரண்டு முக்கிய அமைச்சர்கள் தென்னாபிரிக்காவுக்கு போயிருந்த ஒரு காலகட்டம். அந்நாட்டின் நல்லிணக்க அனுபவங்களை கற்றுக் கொள்வதே அந்த விஜயத்தின் நோக்கம். அதன் பின் இந்த வாரம் உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக் குழுவுக்கான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது ஐ.எம்.எ∴ப்பின் உதவி உறுதி செய்யப்பட்ட ஒரு காலகட்டம்.

தொகுத்துப் பார்த்தால்இப்படிப்பட்ட ஒரு காலகட்டத்தில் அரசாங்கம் அதிகம் அடக்கி வாசிக்க வேண்டும். குறிப்பாக மேற்கத்திய நாடுகளுக்கு நல்ல பிள்ளை வேடம் போட வேண்டும். ஆனால் நடப்பு நிலைமைகளைத் தொகுத்துப் பார்த்தால்,அரசாங்கம் தலைகீழாக நடக்கின்றது. ஏன் அப்படி நடந்து கொள்கிறது?

அதற்கு பின்வரும் காரணங்களைக் கூறலாம். முதலாவது காரணம் ஐஎம்எ∴பின் நிபந்தனைகளுக்குப் பணிந்து மானியங்களை வெட்டும்போது அல்லது பொது நிறுவனங்களை தனியாரிடம் கொடுக்கும் பொழுது அதனால் ஏற்படக்கூடிய சிங்கள பொது மக்களின் கோபத்தைத் திசை திருப்புவது. இரண்டாவது காரணம் உதவி வழங்கும் நாடுகளும் நிறுவனங்களும் அந்த உதவியை இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற முன்நிபந்தனையோடு பிணைத்திருக்கவில்லை என்பது. மூன்றாவது காரணம் தன்னை விட்டால் வேறு தெரிவு உலக சமூகத்திடம் இல்லை என்று ரணில் விக்கிரமசிங்க திடமாக நம்புகிறார்.

இந்த மூன்று காரணங்களின் அடிப்படையில்தான் அண்மை வாரங்களாக அரசாங்கம் தமிழ் மக்களுக்கு கோபமூட்டும் நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது. இதைச் சற்று விரிவாகப் பார்க்கலாம்.

ஐ எம்எ∴பின் நிபந்தனைகளை ஏற்று மானியங்களை வெட்டும்போது ஏழைகள் கொதித்து எழுவார்கள். பொதுச் சேவை நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும் பொழுது தொழிலாளர்கள் கொதித்து எழுவார்கள். அதிக வருமானத்தை பெறுபவர்களுக்கு வருமான வரி விதிக்கும் பொழுது அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்வார்கள். ஏற்கனவே இம்மூன்று தரப்புக்களும் போராடி வருகின்றன. இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளைத் திசை திருப்புவதற்கு அரசாங்கம் இன விவகாரத்தை கையில் எடுத்திருக்கிறது. அதன்மூலம் சாதாரண சிங்கள மக்களின் கவனத்தை எளிதாகத் திசை திருப்பலாம்.

இது ஒரு புதிய உத்தி அல்ல. ஏற்கனவே முன்னம் இருந்த எல்லா அரசாங்கங்களும் கையாண்ட ஓர் உத்திதான். தென்னிலங்கையில் நெருக்கடி தோன்றும் பொழுது இனவாதத்தை நோக்கி அவர்களுடைய கவனத்தைத் திசை திருப்புவது. தமிழ்மக்கள் பௌத்தமயமாக்கலை எதிர்க்கிறார்கள் அதற்கு எதிராக போராடுகிறார்கள் என்று காட்டினால், சிங்கள மக்களின் கோபம் திசை திருப்பப்பட்டுவிடும்.

இது ஒரு காரணம். அடுத்த காரணம், அரசாங்கத்தை பொருளாதார நெருக்கடியில் இருந்து பிணையெடுக்க முற்படும் தரப்புக்கள் தமது உதவிகளுக்கு இனப்பிரச்சினைக்கான தீர்வை ஒரு நிபந்தனையாக முன்வைக்கவில்லை என்று தெரிகிறது.

அவ்வாறு முன்வைத்திருந்திருந்தால் அரசாங்கம் ஜெனிவாக் கூட்டத் தொடர் நடந்து கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் இவ்வாறு சிங்கள பௌத்த மயமாக்களே முடக்கி விட்டிருக்காது. பொருளாதார நெருக்கடியில் இருந்து அரசாங்கத்தைப் பிணை எடுக்க முற்படும் வெளித் தரப்புக்கள் குறிப்பாக மேற்கு நாடுகளும் இந்தியாவும் ஒரு விடயத்தில் ஒன்றாக சிந்திக்கின்றன. இப்போதுள்ள நிலைமைகளின்படி ஜேவிபி படிப்படியாக வளர்ந்து வருவதாக ஒரு தோற்றம் காணப்படுகிறது. இடது பண்புடைய ஒரு கட்சி குறைந்தபட்சம் பலமான எதிர்க்கட்சியாக மேலெழுவதைக் கூட, மேற்படி நாடுகள் விரும்பாது. எனவே ஜேவிபியின் எழுச்சியைத் தடுப்பதற்கு ரணிலைப் பலப்படுத்த வேண்டும். அதனால் நிபந்தனைகளைப் போட்டு அவரைப் பலவீனப்படுத்த மேற்கு நாடுகள் தயாரில்லை.

நாட்டின் பொருளாதார நெருக்கடியை இன பிரச்சினையை தீர்ப்பதற்கான ஒரு வாய்ப்பாக பயன்படுத்த வேண்டும் என்று தமிழ் மக்கள் கேட்கக்கூடும். ஆனால் பிராந்தியப் பேரரசுகளும் உலகப் பேரரசுகளும் அதனை தமக்கு கிடைத்த ஒரு ராஜதந்திர வாய்ப்பாக கருதுவதாக தெரிகிறது. இலங்கை நொடிந்து போய் இருக்கும் காலகட்டத்தில் உதவிகளின்மூலம் இலங்கையை எப்படி தம்வசப்படுத்தலாம் என்று எல்லாப் பேரரசுகளும் சிந்திக்கின்றன. ஏற்கனவே சீனாவின் கடன் பொறிக்குட் சிக்கியிருக்கும் ஒரு நாட்டை எப்படி ஐஎம்எப்பின் கடன்பொறிக்குள் வீழ்த்துவது என்று மேற்குநாடுகள் சிந்திக்கின்றன. இப்படியாக பேரரசுகள் இலங்கைத்தீவின் பொருளாதார நெருக்கடியை ஒரு ராஜதந்திர வாய்ப்பாக பயன்படுத்த தொடங்கினால் உதவிகளையும் இனப்பிரச்சனைக்கான தீர்வையும் ஒன்றுடன் ஒன்று பிணைப்பதற்கான வாய்ப்புகள் மேலும் பலவீனமடையும்.

மேலும், ரணில் மேற்கத்தியப் பாரம்பரியத்தில் வந்த ஒரு தலைவர். ஐ எம்எ∴ப் போன்ற நிறுவனங்களை ஏற்கனவே கையாண்டவர். எனவே ஏற்கனவே பரிச்சயமான ஒருவரோடு விவகாரங்களை கையாள்வது இலகுவானது என்றும் மேற்கு நாடுகளும் ஐ.எம்.எ∴ப்பும் கருதக்கூடும். அதனால் நாட்டில் இப்போதுள்ள நிலைமைகளில் ஒப்பீட்டளவில் ரணில் பரவாயில்லை என்று மேற்கு நாடுகள் கருதுவதாகத் தெரிகிறது.

அதுமட்டுமல்ல, ராஜபக்சக்களைப் பொறுத்தவரை ரணிலை விட்டால் வேறு பாதுகாப்பு கவசம் இல்லை. வேறு பொருத்தமான பினாமியும் இல்லை. ராஜபக்சக்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மதிப்பிழந்து காணப்படுகிறார்கள். எனவே அவர்கள் தங்களைப் பலப்படுத்திக் கொள்ளும்வரை குறிப்பாக நாமல் ராஜபக்சவை அடுத்த தலைவராகக் கட்டியெழுப்பும் வரை நிலைமைகளைக் கையாள்வதற்கு ஒப்பீட்டளவில் பொருத்தமான பினாமி ரணில்தான். இப்படிப்பார்த்தால், உள்நாட்டில் ராஜபக்சங்களுக்கு பொருத்தமான பினாமி ரணில்தான். வெளியே மேற்கத்திய நாடுகளுக்கும் ஐஎம்எ∴ப்பிற்கும், உலக வங்கிக்கும் ரணில் ஒப்பீட்டளவில் பரவாயில்லை.எனவே உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தனக்கு இப்பொழுது மவுசு அதிகரித்து வருவதை ரணில் உணர்கிறார். மேலும் கடந்த மாதத்தோடு அவருக்கு நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரமும் கிடைத்துவிட்டது.

எனவே நிறைவேற்று அதிகாரம், மேற்கத்திய ஆதரவு, ராஜபக்சக்களின் தங்கு நிலை, ஆழங்காண முடியாத தந்திரம், வாழ்வின் இறுதிக் கட்டத்திலாவது சாதிக்க வேண்டும் என்ற ஆவேசம்... போன்ற எல்லாவற்றினதும் கூட்டுக் கலவையாக அவர் காணப்படுகிறார்.

உள்நாட்டில் தனக்கு மக்கள் ஆணை இல்லை என்பதும் தனது கட்சி பெருமளவுக்குச் சிதைந்து போய்விட்டது என்பதும் அவருக்குத் தெரிகிறது. பொருளாதாரத்தை ஒப்பீட்டளவில் நிமிர்த்தினால்தான் தன்னையும் நிமித்தலாம், தனது கட்சியையும் நிமிர்த்தலாம், சஜித்தையும் உடைக்கலாம் என்று அவருக்குத் தெரியும். பொருளாதாரத்தை நிமிர்த்துவது என்றால் மேற்கு நாடுகளின் நிபந்தனைகளுக்கு ஒத்துப்போக வேண்டும். மேற்கின் நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிவதென்றால் உள்நாட்டில் எதிர்ப்புகள் எழும்.அந்த எதிர்ப்பைத் திசைதிருப்ப அவருக்கு இனவாதம் தேவை. அதைத்தான் அவர் செய்கிறார். அதுவும் ஜெனிவாக கூட்டத்தொடர் காலகட்டத்திலேயே செய்கிறார். ஆனால் தமிழ் மக்களோ அதற்கு எதிராகக் காட்டிய எதிர்ப்பு ஒப்பீட்டளவில் பலவீனமானது. வெடுக்குநாறி மலையில் சிதைக்கப்பட்ட சிவனாலயத்துக்கு நீதி கேட்டுத் திரண்ட மக்கள் தொகையை விடவும் நாவற்குழியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள பௌத்த விகாரைக்கு கலசம் வைப்பதற்காக வந்த சிங்கள மக்களின் எண்ணிக்கை அதிகம் என்று யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு செய்தியாளர் சொன்னார்.

சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு எதிராக தமிழ் மக்கள் பலமான ஒரு திராட்சியைக் காட்ட முடியாமல் இருக்கிறார்கள் என்பதைத்தான் இது காட்டுகிறது. இதுவும் அரசாங்கத்துக்குத் துணிச்சலை கொடுக்கிறது.

ஒருபுறம் தென்னாபிரிக்கப் பாணியில் உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஓர் ஆணைக் குழுவை உருவாக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது. இன்னொருபுறம் ஜெனிவா கூட்டத்தொடர் நடந்து கொண்டிருக்கும் பொழுதே தமிழ் மக்களே கோபப்படுத்துகின்றது.

ஒருபுறம் ஐ.எம். எ∴ப்பின் நிபந்தனைகளை நிறைவேற்றுகிறது. இன்னொரு புறம் அதற்கு எதிராகக் கிளர்ந்து எழும் சிங்கள மக்களைத் தமிழ் மக்களின் மீது திருப்பி விடுகிறது. ஒரு பிரச்சினையை இன்னொரு பிரச்சினையால் அடித்து விடுவது. அல்லது ஒரு புதிய பிரச்சினையை உருவாக்கி அதன் மீது மக்களின் கவனத்தை திசை திருப்புவது. ஆக மொத்தம் ரணில் விக்ரமசிங்க அடுத்த ஜனாதிபதியாக வருவது என்று தீர்மானித்து உழைக்க தொடங்கி விட்டார்.

---

**வழியெங்கும் வைரங்கள் - 18**

***** ***** ***** ***** *****

**கவிஞர் தியாரூ**

இடிமின்னல் புயற்காற்று
எதுவரினும் ரசிப்பவன்நான் - சிறு
கொடியோடு விளையாடும்
தென்றலெனத் தவழ்பவன்நான்!

மாணிக்க வைரங்கள்
மனதோடு கண்டவன்நான்- எனை
காணிக்கைப் பொருளாகத்
தமிழுக்குத் தந்தவன்நான்!

உறவாடும் உள்ளங்கள்
உயிராக மதிப்பவன்நான் - நன்றி
மறவாதார் காலடியில்
மலர்ச்சரமாய் மணப்பவன்நான்!

பொன்விளக்கு என்வாழ்வு
புகழ்மிக்க திருத்தலமே - தினம்
என்கிழக்குச் சுடர்வானில்
என்கவிகள் உதித்திடுமே!



# இலங்கையில் அரசியல் போர் நிறுத்தம் சாத்தியமா?



வி.தேவராஜ்
மூத்த
ஊடகவியலாளர்

- நெப்பொலியனையோ, துட்டகமுனுவையோ காணவில்லை.
- பொருளாதார மீட்சிக்குள் இனக் கலவரத்திற்கும் தூபம்.
- வடக்கு கிழக்கிலும், மலையகத்திலும் ஏக காலத்தில் காணி அபகரிப்பு.

சிங்கள ஆளும் வர்க்கம் தமிழ்த் தலைமைகளையும் தமிழ் மக்களையும் மிக ஆழமாகவேத் தெரிந்து வைத்துள்ளது. அதேபோல் தென்னிலங்கையில் சிதறுண்டு கிடக்கும் சிங்களத் தலைமைகளையும் சிங்கள மக்களையும் மிகச் சரியாகவே கணித்து வைத்துள்ளது.

தமிழ் மக்களைப் பொருத்து சிங்கள ஆளும் வர்க்கத்திற்கு சவால் நிறைந்ததாக இருந்தபோதும் இந்தியா உட்பட சர்வதேசத்தின் நேசக் கரம் தாராளமாகக் கிடைத்ததினால் வெற்றி கொள்ள முடிந்தது. தமிழ் மக்களுக்கு எதிராக தென்னிலங்கையும் கட்சி பேதங்களுக்கப்பால் சிங்கள ஆளும் வர்க்கத்துடன் கைகோர்த்துப் பயணித்தது.

சிங்கள ஆளும் வர்க்கம் இலங்கை அரசியலில் தமக்கு எதிரான சக்திகளை துவம்சம் செய்து கடந்த 75 வருடங்களாக இலங்கை அரசியலில் கோலோச்சி வருகின்றது.

ஆனால் கடந்த வருடம் தென்னிலங்கையில் எழுச்சி பெற்ற "அரகலய" போராட்டம் சிங்கள ஆளும் வர்க்கத்தின் அத்திவாரத்தையே ஆட்டம் காணச் செய்த போராட்டமாக அமைந்தது. மொத்தத்தில் இது தென்னிலங்கையின் மாபெரும் எழுச்சிப் போராட்டமாக அமைந்தது.

பிரான்சியப் புரட்சியின்போது புரட்சிக் குழந்தையை தத்தெடுத்து புரட்சியாளருக்குத் தலைமை தாங்க நெப்போலியன் பொனபாட் என்ற மாவீரன் களத்தில் இறங்கினார். புரட்சி வெற்றி பெற்றது.

- நெப்பொலியன் தோன்றவில்லை

ஆனால் "அரகலய" எழுச்சிக்கு தலைமையேற்று வழிநடத்த நெப்போலியன் போன்றதொரு தலைவனைக் காண முடியவில்லை. தமிழர்களுக்கு எதிரான போராட்டமாக இருந்தால் பல துட்டகமுனுக்கள் களம் இறங்கி இருப்பர். துரதிஷ்டவசமாக அரகலய தென்னிலங்கை சிங்கள ஆளும் வர்க்கத்திற்கெதிரான போராட்டமாக இருந்ததினால் ஒரு துட்டகமுனுவைக்கூடக் காணவில்லை. அரகலய எழுச்சியும் வந்த வேகத்தில் மறைந்துவிட்டது.

ஆரகலய எழுச்சி ஏற்பட்டபோது சிங்கள ஆளும் வர்க்கம் ஆட்டம் கண்டது என்பது உண்மையே. ஆனால் ஒரு சில வாரங்களுக்குள்ளேயே சிங்கள ஆளும் வர்க்கம் தன்னைச் சுதாகரித்துக் கொண்டதுடன் ரணில் விக்ரமசிங்கவின் தலைமையை ஏற்று தம்மை இலங்கை அரசியலில் நிலைநிறுத்திக் கொண்டது.

ரணில் - ராஜபக்ஷ அரசாங்கம் பல முனைகளில் களத்தைத் திறந்து தமது செயற்பாடுகளை வடிவமைத்துக் கொண்டு முன்னோக்கிப் பயணிக்க முயல்கின்றது.

மக்களின் "வயிற்றை இறுக்கியுள்ள" ரணில் - ராஜபக்ஷ ஆளும் அணியினர் மறுபுறம் மக்களின் "பொக்கட்டுக்களில்" இருந்து ஈவிரக்கம் இன்றி வரி அறவீட்டை மேற் கொண்டு வருகின்றது.

- தேர்தல் இல்லை

இதற்குச் சமாந்தரமாக மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு சமாதி கட்டும் அதே வேளையில் மக்களின் வாக்குரிமையிலும் கைவைத்துள்ளது. நாட்டில் நடைபெற உள்ள எந்தத் தேர்தலும் ரணில் - ராஜபக்ஷ அணியினருக்கு சாதகமாக அமையாது என்ற யதார்த்த நிலையை உள்வாங்கிக் கொண்டு இப்போதைக்கு தேர்தல் இல்லை என்ற நிலையை உருவாக்கியுள்ளனர்.

- பயங்கரவாத தடுப்புச் சட்டம்

இவைகளுக்குச் சமாந்தரமாக ஆட்சியாளர்களுக்கு எதிரான நியாயமான அனைத்து குரல்களையும் நசுக்கும் பயங்கரவாதத்திற்கெதிரான சட்ட மூலத்தைக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். தற்காலிக ஏற்பாடாக கொண்டு வரப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டம் கடந்த 40 வருடங்களுக்கு மேல் காலத்துக்குக் காலம் நீடிக்கப்பட்டு அரை நூற்றாண்டை எட்டி நிற்கின்றது. இந்தச் சட்டமூலத்தின் கொடூரத்தை தமிழ் மக்கள் இன்றுவரை அனுபவித்து வருகின்றனர். இதுவரை தமிழ் மக்களுக்கெதிராக கூடுதலாகப் பிரயோகிக்கப்பட்ட இந்தச் சட்டம் தற்போது தென்னிலங்கை நோக்கி முழுமையாகப் பாய்ந்துள்ளது.

- பயங்கரவாதத் தடைச்சட்டம் போதாது

சுதந்திர இலங்கையின் 75 வருடகால சிங்கள ஆளும் வர்க்கத்தின் ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்கு இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டம் போதாது என்ற நிலைப்பாட்டுக்கு சிங்கள ஆளும் வர்க்கம் வந்துள்ளது. எனவே தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு அப்பால் இறுக்கமான சட்ட ஏற்பாடுகள் குறித்து அவசரஅவசரமாக கவனம் செலுத்தி வருகின்றது. இதன் எதிரொலியே புதிய பயங்கரவாத தடுப்புச் சட்டம்குறித்த முன்மொழிவை அரசாங்கம் வர்த்தமானியில் பிரசுரித்துள்ளது.

- ஜனாதிபதியின் பெரு விரலுக்குள் அதிகாரம்?

இந்தப் பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் தென்னிலங்கையில் மாத்திரமல்ல வடக்குக் கிழக்கு உட்பட முழு இலங்கையையும் மிக இலகுவில் ஜனாதிபதியின் பெரு விரலின் அழுத்த விசைக்குள் அடக்கிவிடும் வல்லமை பொருந்தியது. மொத்தத்தில் பாதுகாப்பு படைத்துறையின் இரும்புக் கவசத்திற்குள் முழு இலங்கையும் சிறை வைக்கப்படப் போகின்றது. அதாவது இந்த பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்பது "அரச பயங்கரவாதத்தினை" முன்னெடுத்துச் செல்வதற்கான முழுமையான சட்ட கவசத்தை வழங்கப் போகின்றது.

- சட்டரீதியாக புனிதர்களாக பிரகடனப்படுத்த ஏற்பாடு?

அதே வேளையில் நாட்டை வங்குரோத்து நிலைக்குக் கொண்டுவந்த சக்திகள்குறித்தும் நாட்டை சூறையாடியவர்கள்குறித்தும் ரணில் - ராஜபக்ஷ அணியினர் பேச மறுக்கின்றனர்.

மறுபுறம் அரசியல்வாதிகள் மீதும் தலைவர்கள் மீதும் ஊழல்கள் கொள்ளைகள்குறித்து குற்றம் சுமத்துபவர்கள் மீதுநடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று ஆளும் தரப்பினர் அதிகமாகவே இப்பொழுது பேசத் தொடங்கியுள்ளனர்.

மொத்தத்தில் ரணில் - ராஜபக்ஷ அணியினர் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்திற்கூடான சட்ட விதிகளின் மூலம் தாம் "புனிதர்கள்" என தம்மைத்தாமே சட்டரீதியாக பிரகடனப்படுத்திக் கொள்ள காய்களை நகர்த்துகின்றனர்.

ஊழலுக்கெதிராக சட்டம் கொண்டுவரப்போவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கூறுகின்றபோதும் இந்த சட்ட எல்லைக்குள் இதுவரை இடம்பெற்ற ஊழல்கள் கொள்ளைகள் சூறையாடல்கள்குறித்த விடயங்கள் உள்வாங்கப்படுமா என்பதுகுறித்த விடயங்கள் பேசப்படவில்லை.

மக்களை வருத்தியும் ஆபத்தான வரிவிதிப்புக்குள் மக்களை தள்ளியும் மக்களின் ஜனநாயக உரிமைகளை மறுத்தும் கொள்ளையர்களையும் நாட்டையும் சூறையாடியவர்களையும் காப்பாற்றிக் கொண்டு மக்களை தம்பக்கம் வென்றெடுக்கலாம் என்ற எதிர்பார்ப்புடன் காய்களை ரணில் - ராஜபக்ஷ அணியினர் நகர்த்தி வருகின்றனர். மறுபுறம் தாமே மீட்பர் எனறபாணியில் செயற்பாடுகளில் இறங்கியுள்ளனர்.

- தாமே மீட்பர்?

இன்றைய போராட்டங்கள் பொதுமக்களை அசௌகரியத்திற்குட்படுத்துகின்றன. பொது மக்களுக்கு இடைஞ்சலாக உள்ளன. பொது மக்களின் அன்றாட வாழ்வுக்கு இடையூராக உள்ளது. அரசாங்கத்தின் தேசிய நலன் நோக்கிய நகர்வுக்கு எதிர்ப்பாளர்கள் தடைக்கல்லாக இருக்கின்றனர் என்ற கருத்தியலை அரசதரப்பு மிக வேகமாக பரப்புரை செய்து வருகின்றது. ரணில் - ராஜபக்ஷ அணியினர் ஓரணியில் நின்று ஒரே குரலில் இந்தப் பரப்புரையில் ஈடுபடுகின்றனர்.

இதற்கு ஏற்றாற்போல் பொலிசார் எதிர்ப்பாளர்கள் மற்றும் போராட்டக்காரர்களுக்கு எதிராக நீதி மன்றத் தடைகளை தொடர்ச்சியாகப் பெற்றும் அதனை பகிரங்கமாக அறிவித்தும் போராட்டங்களை அடக்கியும் வருகின்றனர்.

அண்மைக் காலமாக எந்த ஒரு போராட்டமும் முழுமையாக வெற்றி பெற்றதாக இல்லை. பொலிசாரின் கண்ணீர்ப் புகைக் குண்டுகளுக்குள்ளும் நீர்த்தாரைப் பிரயோகங்களுக்குள்ளும் போராட்டங்கள் சிதறுண்டு பாதியிலேயே முடிவடைகின்றன.

ஆனால் போராட்டங்கள் தொடர்கின்றன.

உண்மையில் இவை அணைத்தும் அன்றாடம் நடைபெறும் வெற்றிபெறா நிகழ்வுகளாகப் போய்விட்டன. மக்களும் சலிப்பையும் ஏமாற்றத்தையும் நாளாந்தம் சுமந்தவர்களாக நடமாடிக் கொண்டிருக்கின்றனர்.

இவைகளுக்கு மத்தியில் விலைக் குறைப்புகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

சமீப வாரங்களில் ரூபாயின் மதிப்பு உயர்ந்துள்ளது சுற்றுலாத் துறை உயர்ந்து வருகிறது, பணவீக்கம் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டு குறைந்து வருகிறது. ரூபாயின் மதிப்பு உயர்வு மற்றும் உலக சந்தையில் எண்ணெய் விலை சரிவு என்பன தொடர்ந்து இடம்பெறுமாயின் வரும் மாதங்களில் பணவீக்கம் கணிசமாகக் குறையும் என கூறப்படுகின்றது.

ஆனால் இந்தப் பொருளாதார மீட்சிக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது என்று ஆளும்தரப்பில் குற்றம் சுமத்தப்படுகின்றது. ஏனெனில் சமீபத்தியதொழிற்சங்க நடவடிக்கைகள் சக்திவாய்ந்ததாகவும் அழிவுகரமானதாகவும் இருக்கின்றன. ஆனால் அரசாங்கம் பின்வாங்காது பொருளாதார மீட்சி நோக்கி முன்னோக்கிச் செல்கின்றது என்றும் கூறப்படுகின்றது.

இந்த ஒரு பின்னணியில் இலங்கையின் அரசியல் களத்தில் மோதிக் கொண்டிருக்கும் கட்சிகள் பொருளாதார மீட்சிக்கென ஒன்றிணைந்தால் என்ன என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது.

சீர்திருத்தத்திற்கான அரசியல் ஆணை என்பது ஒரு மாயை.

சுதந்திர வரலாற்றில் ஏற்பட்டுள்ள மோசமான பொருளாதார நெருக்கடியானது இலங்கை ஒன்றுபட வேண்டும் அல்லது அழிய வேண்டும். வேறு வழியில்லை என்ற வாதமும் முன்வைக்கப்பட்டு வருகின்றது. இதற்கு இன்று இலங்கைக்கு தேவைப்படுவது அரசியல் போர் நிறுத்தம் என்ற தீர்வும் முன் வைக்கப்படுகின்றது.

இது சாத்தியமாகுமா என்பதே இன்றைய கேள்வியாகும்.

ஏனெனில் இலங்கையில் அரசியல் சக்திகள் ரணில் - ராஜபக்ஷ அணி, சஜித் அணி, ஜேவிபி அணி மற்றும் பெதுஜன பெரமுன கட்சியில் இருந்து பிரிந்த அணி, "அரகலயா" என சிதறுண்டு கிடக்கின்றன. இந்த அணியினர் ஒவ்வொருவரும் தமக்கான அரசியல் நிகழ்ச்சி நிரல்களை சுமந்து கொண்டு நாடாளுமன்ற ஆசனங்களுக்கான கனவுகளில் மிதந்து கொண்டிருக்கின்றனர்.

அதாவது ரணில் - ராஜபக்ஷ ஆளும்தரப்புக்கெதிராக நேச சக்திகளாக ஒன்றுபட வேண்டிய தென்னிலங்கையின் எதிர்த் தரப்பு அரசியல் சக்திகள் தாம் பிரிந்து நின்று கொண்டு மக்களை ஒன்றிணைந்து போராட வருமாறு அழைப்புவிடுத்து நிற்கின்றன.

- Do Or Die பாணியில் ஆளும்தரப்பு பயணம்.

மக்களையும் எதிர்தரப்பு அரசியல் சக்திகளையும் வேருடன் பிடுங்கிச் சாய்த்து அரசியலில் தம்மை தக்கவைத்துக் கொள்ள வியூகங்களை வகுத்து எதேச்சதிகாரபாணியில் ரணில் - ராஜபக்ஷ அணியினர் Do Or Die பாணியில் அரசியல் செய்கின்றனர்.

இந்த ஒரு பின்னணியில் அரசியல் போர் நிறுத்தம் சாத்தியமாகும் நிலை இல்லை.

- இனமுரண்பாட்டுக்குத் தூபம்

மறுபுறம் இனமுரண்பாட்டுக்குத் தூபம்போட்டு அரசியலில் குளிர்காய ஒருதரப்பு முனைப்புடன் செயற்படுகின்றது. தமிழர் பிரதேசங்களில் காணி அபகரிப்பு பௌத்தமயமாக்கல் என்பன கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. பொருளாதார நெருக்கடிக்கான தீர்வுக்கு கைகோர்த்துப் பயணிக்க அழைப்பு விடுத்து நிற்கும் ரணில் - ராஜபக்ஷ ஆளும் தரப்பு நாடு திவாலாகிப்போன நிலையிலும் தமிழர் பிரதேசங்களில் கோவில் சிலை உடைப்புக்களையும் புத்தர் சிலைகளை பிரதிஷ்டை செய்வதிலும் காணி அபகரிப்புகளை மேற் கொள்வதையும் தங்குதடையின்றி மேற் கொள்கின்றமை விசித்திரமாக உள்ளது. இந்த விவகாரத்தில் ரணில் - ராஜபக்ஷ அணியினருடன் கைகோர்த்து இணக்க அரசியல் நடத்தும் வடக்கு கிழக்கு அரசியல்வாதிகள் மக்களுக்குக் கூறப்போகும் பதில் என்ன?

(தொடர்ச்சி 14_ பக்கம்)

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மாந்தை மேற்கில் 20 மாணவர்களுக்கு "கல்விக்கு கரம் கொடுப்போம்" எனும் எண்ணக்கரு விற்கிணங்க புத்தகப்பை வழங்கி வைப்பு



- மன்னார் நிருபர்
(05-04-2023)

"கல்விக்கு கரம் கொடுப்போம்" எனும் எண்ணக்கரு விற்கிணங்க சமூக ஆர்வலரும் கிராம அலுவலருமான எஸ். லுமாசஹ்றி அவர்களின் முயற்சியில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட 20 மாணவர்களுக்கு புதன்கிழமை (5) புத்தகப்பை வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

லண்டனில் வசித்து வரும் அவரது நண்பரின் நிதிப் பங்களிப்பில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அடம்பன், மாளிகைத்திடல், வேட்டையா முறிப்பு ஆகிய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட 20 மாணவர்களுக்கு இவ்வாறு புத்தகப் பை வழங்கி வைக்கப்பட்டது.

# ஆபத்தான குற்றவாளிகள் பிணையில் விடப்படுவனாலேயே அதிகமான கொலைச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன என்று குற்றஞ்சாட்டும் கனடிய பொலிஸ் அதிகாரிகள்

கனடாவின் பல மாகாணங்களில் மிகவும் ஆபத்தான குற்றவாளிகள் என கருதப்படும் நபர்கள் பிணையில் விடப்படுவனாலேயே அதிகமான கொலைச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன என்று குற்றஞ்சாட்டும் கனடிய பொலிஸ் அதிகாரிகள் நீதிமன்றங்கள் இது தொடர்பாக அதிகம் கவனமெடுக்க வேண்டும் என்றும் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

கனடாவில் அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் குற்றச் செயல்கள் தொடர்பில் பொலிஸார் அறிவித்துள்ள நிலையில் ஆங்காங்கே பலர் இது தொடர்பாக பேசுவதற்கு முன்வந்துள்ளார்கள் என்றும் அறியப்படுகின்றது.

பிணையில் விடுதலை செய்யப்படும் நபர்களினால் வன்முறைச் சம்பவங்கள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக மாகாண முதல்வர்களுடன் அவசர சந்திப்பு ஒன்று நடாத்த பல்வேறு மாகாணங்களில் செயற்படும் பொலிஸ் பிரிவுகளின் முதன்மை அதிகாரிகள் திட்டமிட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

அவசர சந்திப்பு ஒன்றுக்கு அனுமதி வழங்குமாறு மாகாண, முதன்மை அதிகாரிகள் மாகாண முதல்வர்களிடம் எழுத்து மூலமும் கோரியுள்ளனர்.

அண்மைய நாட்களாக பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொலை செய்யப்படும் சம்பவங்கள் தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இந்தக் குற்றச் செயல்களின் பின்னியை கவனத்திற் கொண்டால், அநேகமான சம்பவங்களின் பின்னணியில் பிணையில் விடுதலை செய்யப்பட்டவர்கள் இருப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நான்கு வருடங்களுக்கு முன்னதாக பிணை வழங்குதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட சட்டத் திருத்தங்களின் பின்னர் இந்த சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மாகாண காவல்துறை முதன்மை அதிகாரிகள் ஒன்றியத் தலைவர் டேனி ஸ்மித் இந்த விடயங்களைத் ஊடகங்களுக்கு அண்மையில் தெரிவித்துள்ளார்.

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் ஐ.நா.மனித உரிமை சட்டங்களிற்கோ சாசனங்களிற்கோ அமைய இயற்றப்படவில்லை

## - சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன்




(06-04-2023)

பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் என்பது ஐ.நா.மனித உரிமை சட்டங்களிற்கோ சாசனங்களிற்கோ அமைய இயற்றப்படவில்லை என சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தொடர்பில் மன்னார் மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் 6ம் திகதி வியாழக் வியாழக்கிழமை காலை விசேட கலந்துரையாடல் இடம் பெற்றது.



மன்னார் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் இடம் பெற்ற குறித்த கலந்தரையாடலில் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்து பொது அமைப்புகளின் பிரதி நிதிகள், மீனவ அமைப்புகளின் பிரதி நிதிகள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

குறித்த கலந்துரையாடலை தொடர்ந்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை பாராளுமன்றத்தில் தற்போது கொண்டு வருவதில்லை எனவும், தாமதிப்பதாகவும் நீதியமைச்சர் கூறியிருக்கின்றார். தற்போது அது நல்ல விடயம் என்றுதான் நாம் கூற வேண்டும்.

இந்த சட்டமானது இரகசியமான விதத்தில்தான் இயற்றப்பட்டது.

பல உரிமைகளில் தாக்கத்ததை ஏற்படுத்தும் இவ்வாறான சட்டம் கொண்டுவரப்படுவதற்கு முதல் அச்சட்டம் இயற்றப்படும் போது மக்களின் அபிப்பிராயங்கள், சிவில் சமூகங்கள், சட்டத்தரணிகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், நிபுணர்கள் ஆகியோரின் அபிப்பிராயங்களையும் எடுத்துதான் சட்டத்தை இயற்ற வேண்டும்.

ஆகவே இந்த சட்டத்திற்கு தற்போது எழுந்து கொண்டிருக்கிறது. அரசாங்கமானது மக்கள், நிபுணர்கள், சட்டத்தரணிகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் என்ன கூறுகிறார்கள் என்று செவிமடுத்து, முக்கியமாக, எமது அரசியலமைப்பில் உள்ள உரிமைகள் மீறப்படாமல், அலங்கைக்கும் சர்வதேசத்திற்கும் மத்தியில் கடமைகள் உள்ளன.

ஏனெனில் இலங்கை பல்வேறு ஐ. நா சாசனங்களில் கைச்சாத்திட்டுள்ளது. அதன் அடிப்படையில் சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு கடமை இருக்கிறது.

இந்த சாசனங்களில் உள்ள உரிமைகளை இலங்கையில் நடை முறைப்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கு மாகும்.

இந்த பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் என்பது ஐ நா மனித உரிமை சட்டங்களிற்கோ சாசனங்களிற்கோ அமைய இயற்றப்படவில்லை.

ஆகவே, அரசாங்கம் இதனை பாராளுமன்றத்துக்கு கொண்டு வராமல், தற்போது இதை நிறுத்தி இவ்வாறான சட்டம் இயற்றுவது என்றால், வெளிப்படையான முறையில் நான் முன்னர் குறிப்பிட்ட அத்தனை பேரையும் இணைத்து அவர்களின் அபிப்பிராயங்களை எடுத்து சர்வதேச மனித உரிமைகள் சட்டங்களுக்கு ஏற்றதான ஒரு சட்டத்தை இயற்ற வேண்டும் என அவர் தெரிவித்தார்.

இதன் போது மன்னார் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிராடோ கருத்துக்களை முன் வைத்தார்.

*(13 பக்கத் தொடர்ச்சி)*

# இலங்கையில் அரசியல் போர் நிறுத்தம் சாத்தியமா?

- *மலையகத்தில் காணி பகிர்வு*

இதற்குச் சமாந்தரமாக மலையகத்திலும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான காணிகளை தனியாருக்கு வழங்கும் திட்டத்தையும் அரசாங்கம் செயற்படுத்தி வருகின்றது. இந்தத் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாள குடும்பங்களின் எதிர் காலம் மற்றும் அவர்களது வாழ்வாதாரத்தையே கேள்விக்குறியாக்கி காணி பகிர்ந்தளிப்பு நடைபெறுகின்றது. ரணில் - ராஜபக்ஷ ஆளும் தரப்புடன் இணைந்துள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அதன் அமைச்சர் மக்களுக்குக் கூறப்போகும் பதில் என்ன?.

- *ஜனாதிபதியின் இரட்டை வேடம்*

மறுபுறம் நாட்டின் முன்னேற்றம் பொருளாதார மீட்சியில் மாத்திரமல்ல இன விவகாரத்துக்குத் தீர்வு காண்பதிலுமே தங்கியுள்ளது என ஜனாதிபதி மீண்டும் மீண்டும் கூறுகின்றார்.

மொத்தத்தில் பொருளாதார மீட்சி இனவிவகாரத்துக்கான தீர்வு என்ற போர்வையில் ரணில் - ராஜபக்ஷ அரசாங்கம் இலங்கை அரசியலில் தமது இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்கான பாதையை அமைப்பதிலேயே முனைப்பாக இருக்கின்றனர்.

உண்மையில் இவர்கள் எவருமே நாட்டின் மீட்பர்களாக மக்களுக்குத் தெரியவில்லை.

Email : vathevaraj@gmail.com
05 April 2023

## நெஞ்சம் நிறைந்தவரின்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**தோற்றம்:**
**23-07-1965**

**மறைவு:**
**13-04-2022**

# திருமதி. அகிலத்திருநாயகி இளங்குமரன்

## (வேலணை மேற்கு / கனடா)

அகிலம் போற்ற வந்த அகிலத்திருநாயகியே
அன்பே எந்தன் ஆருயிர்த்துணை சாந்தாவே
ஆண்டவன் தந்த அருட்கொடையே அம்மா
அம்பிகை பாதமலர் அடைந்து ஆண்டு ஒன்றாகியதோ
ஆறவும் முடியவில்லை அழுத கண்ணீரும் காயவில்லை
ஓயாது அம்மா உந்தன் நினைவு வாட்டுதே
விண்ணில் நீவிரைய விதிசெய்த கோலத்தால்
கண்ணில் நீர் சொரிந்து கலங்கி தவிக்கிறோம்
அம்மா உன்பிரிவு ஆறமுடியாத சோகமே
விடிகின்ற பொழுதெல்லாம் விழிகள் நிறையுதே
கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகி போனாலும்
எங்கள் முன்னே அம்மா முகம் உயிர்வாழும்
விண்நோக்கி சென்று விரைந்திட்டபோதும்
கண்களை விட்டு உயிர் உள்ளவரை மறைய மாட்டீர்!

*அருமைக் கணவர், பிள்ளைகள், மருமக்கள், உடன் பிறப்புக்கள்*

# மரண அறிவித்தல்

பிறப்பு:
29-01-1938

இறப்பு:
01-04-2023



## திருமதி. பவளம் பரஞ்சோதி

யாழ்ப்பாணம், திருநெல்வெலியைப் பிறப்பிடமாகவும், நல்லூர், Markham ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. பவளம் பரஞ்சோதி அவர்கள் ஏப்ரல் 1, 2023 அன்று கனடாவில் காலமானார்.

ஆன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை நாகம்மா தம்பதிகளின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும்,

காலஞ்சென்ற டாக்டர். க. பரஞ்சோதியின் ஆருயிர் மனைவியும்,

நந்தகுமார் (கனடா), சகுந்தலா (அமெரிக்கா), செல்வகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும்,

காலஞ்சென்ற கைலாசப்பிள்ளை, காலஞ்சென்ற அரசரத்தினம், தர்மபாலன் (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

குமுதினி (கனடா), அமிர்தலிங்கம் (அமெரிக்கா), வதனா (கனடா) ஆகியோரின் அன்பான மாமியாரும்,

அபிராம், குகன், கீதா, செலினா, செவான் ஆகியோரின் அன்பான பாட்டியும் ஆவர்.

***அன்னாரின் பூதவுடல் 08-04-2023 சனிக்கிழமை மாலை 5:00 மணி தொடக்கம் 9:00 மணி வரையும், 09-04-2022 ஞயிற்றுக்கிழமை காலை 9:00 மணி தொடக்கம் பி.ப 12:00 மணி வரையும் 384 Finley Ave., Ajax, ON L1S 2E3 இல் அமைந்துள்ள Ajax Crematorium and Visitation Centre இல் பார்வைக்காக வைக்கப்பட்டு, பின்னர் ஈமைக்கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும்.***

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்
அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: நந்தகுமார் (மகன்): (416) 892-7156
செல்வகுமார் (மகன்): (416) 264-1009

## மறைந்த அன்னை பவளம் பரஞ்சோதி அவர்களுக்கு கனடா மகளிர் மன்றத்தின் அஞ்சலிகள்



கடந்த 01-04-2023 அன்று எமை விட்டுப் பிரிந்து இறைவனடி சேர்ந்துள்ள திருமதி. பவளம் பரஞ்சோதி அவர்கள் எமது மகளிர் மன்றத்தின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டவராக விளங்கியவர். அவரது இழப்பு எமது மன்றத்தின் நிர்வாகிகள். உறுப்பினர்கள் பயனாளிகள் அனைவருக்குமே மனங்களை உறைய வைத்த ஒரு சம்பவமாகவே ஆகிவிட்டது.


அன்னையின் பிரிவினால் துயரத்தில் ஆழ்ந்துள்ள அவரது குடும்பத்தினர் அனைவருக்கும் எமது கனடா மகளிர் மன்றம் அனுதாபங்களைத் தெரிவிக்கின்றது.

இங்ஙனம்,

நிர்வாக சபை மற்றும் உறுப்பினர்கள்
கனடா மகளிர் மன்றம்
Canadian Women Council
Email: canadianwomencouncil@gmail.com
Website: https://www.canadianwomencouncil.com/
Phone No.: 647-505-4253
Address: 33 Almayo Crescent, Etobicoke, Toronto, ON M9V 2L3

Canadian Women Council

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்:
15-03-1938

மறைவு:
16-03-2023

# திரு. வைரமுத்து விநாயகமூர்த்தி

**(கோண்டாவில் கிழக்கு மற்றும் நவக்கிரி)**

*அன்பினை அள்ளித் தந்த அருமையான பெற்றோருக்கு புதல்வராய் பிறந்து*
*அருகினில் சேர்ந்து விளையாடி மகிழ்ந்த சகோதரங்களோடு வளர்ந்து*
*என்பும் தசையும் போல் மணவாழ்க்கையின் பின் துணைவியை நேசித்து*
*எல்லயில்லா மகிழ்ச்சியினை பெற்றெடுத்த நற் பிள்ளைகளிடமிருந்து பெற்றீர்*

*மண்ணையும் மழையையும் நம்பி வாழ்ந்த தொழிலைத் தெய்வமாய் மதித்து*
*மனதினில் உறுதியொடு வெய்யிலில் உடலை வருத்தி பொருள் சேர்த்து*
*நன்மை பல தரவல்ல கல்வியினை பிள்ளைகள் பெற்றிட அனைத்தையும் ஆற்றி*
*நல்ல இடங்களில் அவர்கள் சென்றமர்ந்து பதவிகள் பல பெற்றதை கண்டீர்*

*இன்முகம் காட்டி அவர்களை ஊக்குவித்து பின்னர் உற்ற துணைகளைத் தேடி*
*இசைந்தே எம்முடன் வாழ்ந்த உயர்ந்தவரே உங்கள் பிரிவு எம்மை ஊன்றித் தாக்கியது*
*தங்கள் இழப்பினால் அனைவருமே சந்தோசம் இழந்தோம் நாம் மட்டுமல்ல வரிசையாய்*
*தவழும் குழந்தை முதல் உலகறியும் வயதுடைய பேரப்பிள்ளைகளும் கதறி நின்றனர்*

*உங்களைச் சுற்றி வந்த உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அயலவர்கள் என*
*அனைவருமே ஆழ்ந்த கவலையில் தான். அழுதபடி வந்து எமது ஆறுதல் கூறுகின்றார்*
*சிங்கத்தை போல தைரியம் கொண்டவராய் திகழ்ந்து எம் குடும்பம் காத்தீர் ஐயா!*
*சினங்கொள்ள மாட்டாத சிந்தையை உடையவராய் இறுதிவரை எம்முடன் இருந்தீரே!*

*பொங்கியெழுந்து விடுதலைப்போர் செய்து வீரமரணம் எய்த புதல்வரது வித்துடல் கண்டு*
*பதட்டமின்றி மார் தட்டி நின்று அதன் மீது கைகளால் மண் துவிய தீரத் தந்தை நீங்கள்*
*மங்கியது எங்கள் மனதின் எழுச்சி நீங்கள் மறைந்த நாட் தொடக்கம் மறப்போமா உமை!*
*மனது குளிர தினமும் எம் கனவுகளில் வந்து காட்சி தாருங்கள் ஐயா அதுவே போதும் எமக்கு!*

யாழ். கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும், நவக்கிரி, கனடாவை வதிவிடமாகவும் கொண்ட எமது அன்புக்குரிய வைரமுத்து விநாயகமூர்த்தி அவர்கள் 16-03-2023 வியாழக்கிழமை அன்று காலமானார் என்ற செய்தியைக் கேள்வியுற்று நேரிலும் தொலைபேசி மூலமாகவும் எம் இல்லங்களுக்கு வருகை தந்து ஆறுதல் வார்த்தைகளை பகிர்ந்து சென்றவர்களுக்கும் பின்னர் இறுதிக் கிரியைகளில் நேரில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மலர்வளையங்களை அனுப்பிவைத்தவர்களுக்கும் உணவு மற்றும் உபசாரங்களை செய்தவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவிகளை வழங்கிய அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் 15-04-2023 சனிக்கிழமையன்று பகல் 11.00 மணி தொடக்கம் 733 Birchmount Road, Scarborough, ON M1K 1R5 என்னும் விலாசத்தில் அமைந்துள்ள கனடா கந்தசுவாமி ஆலய கலாச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ள எமது அன்புக்குரியவரின் நினைவஞ்சலிப் பிரார்த்தனைகளிலும் தொடர்ந்து நடைபெறவுள்ள மதிய போசனத்திலும் பங்கெடுத்து ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.!

---

தகவல்:
குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு:
நிமால் (மகன் - கனடா): (416) 888-1128
சாந்தி (மகள் - கனடா): (647) 289-6545
வசந்த் (மகன் - கனடா): (647) 885-3012

# மரண அறிவித்தல்



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 19 | 05 |
| ஐப்பசி | ஏப்ரல் |
| 1936 | 2023 |

# அமரர். கமலாவதி இராமநாதன்

## (மாதகல் - தமிழீழம்)

தமிழீழத்தில் மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவில் மொன்றியலை வதிவிடமாகவும் கொண்டு வாழ்ந்து வந்த கமலாவதி இராமநாதன் (ஆங்கில ஆசிரியை, இலங்கை மொன்றியல் அருள்திரு முருகன் கலைநெறிக் கல்விக் கழக ஆசிரியை முன்னாள் அதிபர்) அவர்கள் மொன்றியலில் ஏப்ரல் 5ந் திகதி 2023ம் ஆண்டு புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார். இவர் காலஞ்சென்ற பராசக்தி, தம்பிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு மகளும், பரகதியடைந்த சின்னத்தம்பி இராமநாதன் (கணக்காளர்) அவர்களின் அன்புமனைவியும், காலஞ்சென்ற பாலசிங்கம் (எழுதுவினைஞர்) அவர்களின் தங்கையும், முருகையா (வரைவாளர், கட்டடத் திணைக்களம்) அவர்களின் தமக்கையாரும், சாந்தகுமாரி, நந்தகுமாரி, இரத்தினகுமார் (மாதகல் கண்ணன்), கலாராணி, திருமால், உமாராணி ஆகியோரின் பாசமிகு தாயாரும் அரவிந்தன், சிவராசா, சற்குணலீலா, தர்மராசா,பாரதி, தர்மா ஆகியோரின் மாமியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத் தரப்படும்.

**தொடர்புகளுக்கு**

| | |
|---|---|
| சாந்தி | (450) 445 - 3174. |
| நந்தா | (917) 579 - 0879 |
| மாதகல் கண்ணன் | (647) 657 - 8566 |
| கலா | 94 77 128 - 7434 |
| திருமால் | (514) 812 - 6720 |
| உமா | (438) 924 - 9703 |

**குறிப்பு:** ஈழமுரசு சார்பாக எமது ஆழ்ந்த அனுதாபங்கலையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.


tasty தமிழா ™

தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக உலகெங்கும்...




இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா பொருட்கள் பாரம்பரிய உணவு வகைகள்..

கனடாவில்

Tasty தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்..

MAHAANS PICK & PRESS OIL MILL INC
Organic Bulk Store & Water Filling Station
5635 Finch Ave East,
Unit 5, Scarborough M1B 5K9.

Call: 416 293 4010

MAHAANS PICK & PRESS OIL MILL INC

(10 பக்கத் தொடர்ச்சி)

# விநாயகர் விமர்சனம்

உண்மையில் குடும்பப் பொறுப்பகளைச் சுமக்கும் பெண்களின் சேவை ஒரு பொருளாதார நடவடிக்கையாகப்பார்க்கப்பட வேண்டும். ஏனெனில் வேறெந்த மாற்று ஊழியராலும் அதனை ஒத்த சேவையினை ஆற்ற முடியாது. ஆனபோதிலும் ஒரு இல்லத்தரசியாகப் பணியாற்றுவதற்கு பல்கலைக்கழகக் கல்வி போன்ற சிறப்பக் கல்வியறிவு தேவைப்படாது. எனவே அப்படி இல்லத்தரசியாக இருக்க விரும்பம் பெண்கள் பொருளாதாரத்திற்குப் பங்காற்றக் கூடிய இன்னொருவரது வாய்ப்பை வீணடிக்கின்றனர் என்றே கொள்ள வேண்டியுள்ளது. ஏனெனில் படித்தது அதன் பயனை சமூகத்திற்கு வழங்கும் விருப்பமள்ள ஒருவரது வாய்ப்பை அவர்கள் விணாக்கி விடுகின்றனர். அவ்வாறு படித்த பெண்கள் வேலை செய்ய விரும்பாமைக்கு ஒரு குடும்பத்தில் பெண்கள் செய்யும் பலதரப்பட்ட பணிகளே காரணமாகும்.

திருமணத்திற்கு முன்னர் தொழில் புரியும் பெண்களில் கணிசமானோர் குழந்தை பிறப்பின் பின்னர் அதனைக் கைவிடுவதைக் காண முடிகிறது. தொழிலிடத்திற்கும் வீட்டிற்கும் இடையிலான தூரம் போக்குவரத்து வசதிகளின் பற்றாக்குறை மற்றும் போக்குவரத்தின் போது எதிர்கொள்ள நேரிடும் பாதிகாப்பின்மை மற்றும் அசௌகரியங்கள் தொழிலிடத்தில் காணப்படும்.

சிநேகபூர்வமற்ற சூழல் மேலதிகாரிகளின் கெடுபிடிகள் மற்றும் பாதுகாப்பின்மை தொழில் புரிந்த வீடுவந்த பின்னர் காத்திருக்கும் வீட்டுவேலைகள் ஏனைய குடும்ப அங்கத்தவர்களின் ஒத்துழைப்பின்மை போன்ற இவ்வாறான காரணிகள் பெண்கள் தொழில் புரியாமல் விடக்காரணங்களாக உள்ளன.

இலங்கையிலே எதிர்காலத்திலே தொழிலாளர் பற்றாக்குறை ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் பிரகாசமாகத் தென்படுகின்றன. அரசாங்கமோ வெளிநாடுகளுக்க ஓடி வேலை தேடுங்கள் என்கிறது. நிபுணத்தவம் பெற்ற வைத்தியர்களின் வெளியேற்றம் காரணமாக வைத்தியசாலைகளின் சிறப்பப் பிரிவுகள் மூடப்படுகின்றன. இளைஞர்களும் யுவதிகளும் பாஸ்போட் ஒபிஸில் தவம் கிடக்கின்றனர். உள்நாட்டில் வேலை செய்யாவிட்டாலும் வெளிநாடுகளில் வேலை தேடும் யுவதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. இந்த வெளிப்பாய்ச்சல்களின் பின்னர் அடுத்தவரும் காலகட்டம் ஒரு மனிதனில் சேகரித்து வைத்த சக்தி அபாய காலத்தில் சேமிப்பிலிருந்து வெளிப்படுவது போல பொருளாதார ரீதியில் செயற்படாத நிலையில் உள்ள சனத்தொகையிலுள்ள பெண்களை உயிர்ப்பிப்பதன் மூலமே இலங்கையின் ஊழிய தேவையின் ஒரு பகுதியைப் பெறமுடியும். அப்போதும் கூட இலங்கை பெண்களில் தான் தங்கியிருக்கும்.

எங்கு காணினும் சக்தியடா என்று பாரதி இதைத் தான் பாடினானோ?




Toronto சிட்டி கவுன்சிலர்
PAUL AINSLIE
WARD 24, SCARBOROUGH-GUILDWOOD

HELP IS AVAILABLE
வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.

குறைந்த கட்டனத்தில் வீட்டுவசதி
விலங்கு சேவைகள்
உயர்மாடி கட்டட சட்டங்கள்
கட்டட அனுமதி பத்திரங்கள்
பிள்ளை பராமரிப்பு சலுகை
அவசர வீட்டு வசதிகள்
தீயணைப்பு சேவைகள்
கழிவுப் பொருட்கள் சேவை
நூலகச் சேவை
மாநகரத் தேர்தல்
மாநகர அனுமதியும் சட்டங்களும்

Ontario Works
வாகனத் தரிப்பிடங்கள்
பூங்காக்கள்
காவல் துறை
பொதுச் சுகாதாரம்
வீதிகள்
ஆதன வரிகள்
பொதுப் போக்குவரத்து
மீள் சுலட்சியும் பசுமை திட்டமும்
மரங்கள்
நீர் விநியோகம்

நியமன அலுவலகம்
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம்
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca
Ward 24 Scarborough-Guildwood
@cllrainslie
www.paulainslie.com
@Ainslie_Ward24
Paul Ainslie (City of Toronto)

www.paulainslie.com 416-396-7222



MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

0% வட்டி
அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்களது மகிழுந்து, விடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, விடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்
உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்
416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# பொருளாதார நெருக்கடியில் தவிக்கும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள்

## (ஒரு சிறப்பு கள ஆய்வுக் கட்டுரை)

**- யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்**



இலங்கையில் இன்று நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு முன்னேற உலக நாடுகளிடம் இருந்து கடன்களையேனும் பெற்று மீளத்துடிக்கும் நிலையில் பெண் தலைமைத்துவ குடும்பங்களில் சுயதொழிலில் ஈடுபடும் பெண் தலைமைகளின் நிலையும் தினக்கூலிகளாக பணியாற்றும் பெண்களின் வாழ்வாதாரமும் மிக மோசமாக உள்ளதோடு போதிய ஒத்துழைப்பு இன்றியுமே காணப்படுகின்றது.

இலங்கையில் போர் ஓய்ந்து 13 ஆண்டுகளானாலும் அதனால் ஏற்பட்ட அதிகரித்த பாதிப்புக்களில் இந்த பெண் தலைமைத்துவ குடும்பங்களின் நெருக்கடியும் ஒன்றாகும். போரின் காரணம் மட்டுமன்றி வீதி விபத்துக்கள், கொடிய நோய்களினாலும் ஏற்பட்ட இறப்பின் காரணத்தோடு குடும்ப பிரிவுகளினாலும் இந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் எண்ணிக்கை இலங்கை முழுவதுமே காணப்பட்டாலும் போரின் காரணமாக வடக்கு கிழக்குப் பகுதியிலேயே பெண் தலைமைத்துவ குடும்பங்கள் அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றனர்.

இவ்வாறு காணப்படும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் தமது அடிப்படை வாழ்வியலிற்காக ஓர் தொழிலில் மேற்கொள்வதில் அன்றாடம் எதிர்கொள்ளும் சவால்களும் மிக அதிகமாகவே உள்ளது. இதனை இனரெர் நியூஸ் நிதி அனுசரணையில் களவிஜயங்களை மேற்கொண்டு செய்தியாக்கினோம்.

போரின்போது தனது மூத்த ஆண் பிள்ளையை இழந்து, கணவன் இயற்கை எய்திய நிலையில் ஓர் விபத்தில் ஒரு காலும் முழுமையாக பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவனில் வாழும் அமிர்தலிங்கம் கலாசோதி (56) இன்று தனது குடும்ப வருமானம் கருதி ஓர் சிறுதொழில் முயற்சியில் ஈடுபடுவதோடு மேலும் சிலருக்கு பகுதி நேர வேலை வாய்ப்பினையும் வழங்கி வருகின்றார். "நான் இந்த தொழிலை 24 ஆண்டுகளாகச் செய்து வருகின்றேன். எனது மூத்த மகன் போர்க் காலத்தில் உயிரிழந்தார். பின்பு கணவர் உயிரிழந்து 10 வருடங்கள் ஆகின்றது. கணவர் இருக்கும்போதே ஓர் விபத்தில் அகப்பட்டு எனது ஓர் கால் இயலாது. இந்த நிலையில்தான் எனது குடும்ப வாழ்வாதாரம் கருதி சிறிது சிறிதாக வடகம் போட ஆரம்பித்தேன். ஆரம்பத்தில் குடும்பத்தினர் மட்டுமே முயற்சித்து 10 முதல் 15 கிலோ வடகம் தயாரித்து விற்பனை செய்தபோது கேள்வி அதிகரிக்க அதிகரிக்கவே முயற்சியை சற்று விரிவாக்கினேன்.



இந்த தொழிலிற்கு மிக முக்கிய மூலப்பொருளான வேப்பம் பூவை பெறுவதும் அதனைப் பாதுகாத்து வைப்பதும் மிகப் பெரிய சவால். ஏனெனில் வேப்பம்பூ 12 மாதமும் பெற முடியாது வருடத்தில் ஒரு மாதம் மட்டுமே பெற முடியும். மார்ச் மாத கடைசியில் தொடங்கி ஏப்ரல் மாதம் மட்டுமே இந்த பூவை பெறமுடியும்.

இதனைப் பெறுவதற்கு சுமார் 60 முதல் 70 கி.மீ பயணிக்க வேண்டும் சில சமயம் 100 கிலோ மீற்றர் தாண்டியும் செல்ல வேண்டும். அதனால் முச்சக்கர வண்டிகளிலேயே பயணித்து அவற்றை சேகரித்து வரலாம். 2020 ஆம் ஆண்டுவரை ஒரு தடவை சென்று பூவை சேகரித்து ஏற்றி வருவதற்கு 2 ஆயிரம் ரூபோ போதுமானதாக காணப்பட்டது இன்று 6 ஆயிரம் ரூபாவும் போதாமல் உள்ளது.

இதேநேரம் வேப்பம்பூ இல்லாத காலத்தில் தொழிலைக் கைவிட்டால் வாழ்வாதாரச் செலவிற்கு வேறு எந்த வருமானமும் கிடையாது. இதனால் தொழில் முறையில் மாற்றத்தை ஏற்படுத்தி வாழைப்பூ, பிறண்டை, தாமரைக் கிழங்கு, வெங்காயம் போன்றவற்றிலும் வடகம் தயாரிப்பதோடு பாகற்காய், சுண்டங்காய், காத்தோட்டிக்காய், வாழைக்காய், போன்றவற்றில் வற்றல் தயாரிக்கும் பணியிலும் ஈடுபடுகின்றோம்.

ஆரம்பத்தில் மூலப்பொருளைப் பெற்றுவருவதற்கும் உற்பத்தியை நகருக்கு எடுத்துச் செல்லவும் போக்குவரத்து செலவு குறைவாக இருந்தது. அத்தோடு இதற்கு தேவையான உழுந்து, மிளகாய், பெருஞ்சீரகம் என்பனவும் நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் காரணமாக பல மடங்கு விலை உயர்ந்து விட்டது. இருப்பினும் அதன் விலைக்கு ஏற்ப உற்பத்தியின் விலையை அதிகரிக்க முடியவில்லை.

இத்தனைக்கும் மத்தியில் எனது குடும்பம் மட்டுமன்றி நான்கு அல்லது ஆறு பெண்கள் என்னுடன் பணியாற்றுகின்றனர். காலையில் 8 மணி முதல் 11 மணிவரை பணியாற்றினால் 600 ரூபாவை பெற முடியும். அது அவர்களின் குடும்ப நெருக்கடியில் ஒருவேளை உணவுப் பசியைப் போக்க வெய்யிலில் வாடி வதங்கி பாடுபடுவதால் வரும் பணம் உதவுகின்றது.

இந்த பொருளாதார நெருக்கடியிலும் சுகாதாரப் பரிசோதகர்கள் கூறும் அறிவுரைக்கேற்ப அதற்கு தேவையான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக வடகம், வற்றல் என்பன காய வைப்பதனை பதிவாக வைப்பதற்கு அனுமதிக்க மாட்டார்கள், உயரத்தில் வைத்தாலும் திறந்த வெளியில் வைக்க முடியாது போன்ற சுகாதாரப் பிரச்சனைகளைப் பொருளாதார நெருக்கடியிலும் தீர்க்க வேண்டும். இவற்றை தாண்டியே வாழ்வாதாரத்தை ஈட்ட வேண்டும். இன்றைய பொருளாதார நெருக்கடியில் சுய முயற்சியில் ஈடுபடும் பெண்களிற்கு இந்த கடும் பொருளாதார நெருக்கடி காலத்தில் தொழிலைத் தொடர்ந்து நடாத்த அரசு மானிய விலையில் எரிபொருளையோ அல்லது அதற்கான ஊக்குவிப்புக்களை குறுகிய காலத்திற்கேனும் வழங்கினால் எம்மைப்போன்ற பெண்கள் மட்டுமன்றி என்போன்ற சிறு முயற்சியில் ஈடுபடும் பெண்கள் தொடர்ந்தும் சொந்த முயற்சியில் ஈடுபட வாய்ப்பு உண்டு. ஏனெனில் கடந்த ஆண்டு ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாடு காலத்தில் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் துறைசார்ந்தவர்களை மட்டுமே அரசு நினைத்ததே அன்றி வேறு வருமானம் அற்ற எம்போன்ற சுய முயற்சியாளர்களை திரும்பியும் பார்க்கவில்லை இதனால் 3 மாதம் தொழிலை இழந்து தவித்தோம்" என்றார்.



இங்கே சுமார் ஓராண்டாக பணியாற்றும் இ.வனிதா, "வருமானம் போதாமல் உள்ளபோதும் காலை 8 மணிமுதல் 11 மணிவரை வேலை செய்து அதன் பின்பு வீட்டிற்குச் சென்று தனது சமையல் வேலையைப் பார்ப்பதாகக் கூறுகின்றார்.

இலங்கையில் இடம்பெற்ற போரின் கொடுமையாலும், விபத்துக்கள் மற்றும் இயற்கை அனர்தங்களால் அதிகமாகவும் முதலில் பாதிக்கப்படுபவர்கள் பெண்களாகவே காணப்படுகின்றனர். இவ்வாறு பாதிக்கப்பட்ட பெண்களை நம்பி வாழும் பல ஆயிம் குடும்பங்கள் இன்றும் தொடர் நெருக்கடியின் மத்தியில் தமது குடும்ப வாழ்வாதாரத்திற்காக கையில் கிடைக்கும் தொழில் முயற்சிகளையும் கடினமான வேலைகளையும் ஏற்று அதில் வரும் வருமானத்தில் வாழ்வாதாரத்தை நடாத்துவதோடு சில பெண்கள் இணைந்து தமக்கான வாழ்வாதாரத்தைத் தேடும் அதே நேரம் அயலில் உள்ள தம்மைப்போன்ற பெண்களிற்கு பகுதி நேர வேலை வாய்ப்பினையும் வழங்குகின்றனர். இந்த நிலை இன்று இலங்கை முழுவதும் வியாபித்துக் காணப்படுகின்றது.

இந்த அவலம் தமிழ், முஸ்லீம், சிங்களம் என்ற பாகுபாடின்றி வியாபித்துள்ளது. வவுனியா நகரின் மத்தியிலிருந்து 7 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மடுக்கந்தைப் பகுதியில் உள்ள அம்பலாங்கொடல்ல குக்கிராமத்தில் வாழும் 57 வயதான கே.என். தமயந்தி என்னும் சிங்களப் பெண்மணி: "17 ஆண்டுகளின் முன்பு 40 வயதில் கணவரை இழந்த சமயம் 5 குழந்தைகளுடன் அந்தரித்தேன். அப்போது மூத்த பிள்ளைக்கு வயது 14 ஐந்தாவது பிள்ளைக்கு இரண்டு வயதாகவும் இருந்தது".

ஆரம்பத்தில் கூலி வேலை, தையல் என பல பணிகளில் ஈடுபட்டு கடும் பொருளாதார நெருக்கடியின் மத்தியில் மூத்த இரு பிள்ளைகளும் திருமண செய்துவிட்டார். 5வது பிள்ளையோ விசேட தேவையுடையவர். அரச உதவி எனில் சமுர்த்தி உதவி மட்டுமே கிடைக்கின்றது. இதனால் வீட்டின் அருகே ஓர் அப்பக் கடையை நடாத்துகின்றார்.

"அந்தக் காலமும் கஸ்ரம் இந்தக் காலமும் கஸ்ரம். அதிலும் குறிப்பாக இந்த பொருளாதார நெருக்கடி எம்மை மேலும் வாட்டுகின்றது. ஏனெனில் முன்பு வீட்டின் உணவிற்கு அப்பத்தை வேண்டிச் செல்பவர்களிடமும் பணம் இல்லை. விலை ஏற்றத்தின் முன்பு ஒரு நாளைக்கு 2 ஆயரம் ரூபா முதல் 3 ஆயிரம் ரூபாவிற்கு விற்றால் நாள் ஒன்றிற்கு 700 ரூபா மிச்சம் கிடைக்கும் ஆனால் தற்போது அத்தனை பொருளும் 3 மடங்கு விலை உயர்த்த பின்பும் 2 ஆயிரம் ரூபாவிற்கும் விற்பனை இடம்பெறுவது கிடையாது. இதனால் 400 ரூபாவினைக்கூட இலாபமாகப் பெற முடியவில்லை. இந்த நிலையிலேயே இயலாத பெண் பிள்ளையின் மருத்துவத்திற்கே அந்தப் பணம் போதாது. அதனால் நான் பட்டினி கிடந்தேனும் பிள்ளையின் மருத்துவத்தைப் பார்க்கின்றேன். எனது வேலையோ உணவு விற்பது - ஆனால் நான் உணவை பார்க்கும் நாள்கள் குறைவாகவே உள்ளது".

வடக்கு மாகாணத்தில் தமது வாழ்வாதாரத்திற்காக இன்னல்களை எதிர்நோக்கும் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண் தலைமைத்துவக குடும்பங்கள் வாழ்கின்றபோதும் மாகாண தொழிற்துறை திணைக்களப் பணிப்பாளர் திருமதி. வனஜா செல்வரட்ணத்தை தொடர்பு கொண்டு வடக்கில் எத்தனை பெண் சுய முயற்சியாளர்கள் உள்ளனர் என விபரம் கேட்டபோது பதிவு செய்யப்பட்ட பெண் முயற்சியாளர்களாக தற்போதுவரை 3514 பேர் பதிவில் உள்ளனர் சிலர் தனித்து பதிவின்றியும் இயங்கக்கூடும் என்பதனை உறுதி செய்தார்.

பொருளாதார நெருக்கடி தொடர்பில் பாதிக்கப்படும் பெண்கள் பொருள் விலையேற்றம் மாறுபட்ட விலை எனக் குற்றம் கூறுவது தொடர்பில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினரிடம் தொடர்பு கொண்டு கேட்டால். "எந்த பொருளானாலும் அதற்கு சட்ட வரையறை அல்லது வர்த்தமானி அறிவித்தல் இருந்தால் மட்டுமே வர்த்தகர்களிறகு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும் அவ்வாறு இல்லையென்றால் தரம் தொடர்பில் மட்டுமே எம்மால் பரிசோதிக்க முடியும்" என்றனர்.

இவ்வாறு பாதிக்கப்படும் பெண்களின் நெருக்கடி நிலை ஒரு மாவட்டத்திலோ அல்லது ஓர் இனத்தில் மட்டும் உள்ள பிரச்சனையாக அன்றி நாடு முழுதும் உள்ள பிரச்சனையாகவே உள்ளது. தற்போதைய பொருளாதார நெருக்கடி தீர்ந்தால் மட்டுமே ஓரளவேனும் நிம்மதியான உணவை பார்க்க முடியும் என ஒதியமலையில் புகையிலைத் தோட்டத்தில் பணியாற்றும் ஒரு பெண்மணி கூறியதோடு "புகையிலை ஓர் பணப்பயிர் ஆனாலும் அதனை விளைய வைக்கும் நாம் அந்தப் பணத்தை பார்த்தது கிடையாது" என்றார்.

இவ்வாறெல்லாம் இடர் நோக்கும் பெண்களின் முயற்சிக்கு அரச உதவிகள் எந்தவகையில் கிட்டுகின்றது என யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபரான அ.சிவபாதசுந்தரனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது:

"சுய முயற்சியில் ஈடுபடும் பெண்களிற்கு சமுர்திக் குழுக்கள் மூலம் கடன் ஏற்பாடுகள் கிட்டுவதோடு உள்ளூர் சந்தை வாய்ப்புக்களில் வரி விலக்களிப்பு அல்லது வாடகை கட்டணமற்ற சந்தை வாய்ப்புக்கள் அல்லது கண்காட்சிகளில் முன்னுரிமை அளிப்பது மட்டுமன்றி வடக்கு மாகாண ஆளுநரின் ஏற்பாட்டில் அவரது செயலகம் மூலமாக ஓர் வாய்ப்பை ஏற்படுத்தும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளார். இதே நேரம் சிலர் உற்பத்தி செய்யும் சிறு முயற்சிப் பொருட்களிற்கு சர்வதேச சந்தை வாய்ப்பை பெற்றுக்கொடுக்க முடியும் என்பதனால் ஏற்றுமதியாளர்களுடன் உரையாடி ஓர் நியாயமான பெறுமதியைப் பெற்று வழங்க முடியுமா எனவும் முயல்கிறோம்" என்றார்.



உதயனின் பிரத்தியேகச் செய்தி

# மனோ சாட்சி

## மனம் திறக்கிறார் மனோ கணேசன்

(கனடா உதயனிற்கான பிரத்தியேகத் தொடர் - அத்தியாயம் 10)

# “புலிகளுடன் உறவாட உதவ முடியுமா? மகிந்த அணி கேட்டது”



• ரணில் நல்லவராக இருந்தாலும் கூட, தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வை அவரால் வழங்க முடியாது. ஆகவே புலிகளுடன் நாம் பேச விரும்புகிறோம் என்றார்கள்.

• ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே பேசும் தமிழில் ஒரு இனம் புரியா இனிமை இருக்கும். அந்த இனிமையில் அவரது கட்சியின் வி'மும் இருக்கும்.

• அமெரிக்காவில் இருந்து பெசில் ராஜபக்ச, தன் சகோதரனின் பிரச்சாரத்தில் பங்கேற்க முதன் முதலாக இலங்கை வந்திருந்தார்.

• இந்த திட்டங்களுக்கு பின்னின்ற பிரதான சூத்திரதாரி மங்கள சமரவீர.

• புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனையே நான் சந்தித்து அரசியல் பேசியிருக்கிறேன், புலிகளை தெரியும், புலிகளில் அவர்களை தெரியாது, என்றேன்.

• புலிகளுடன் தொடர்பை ஏற்படுத்தும்படி தென்னிலங்கையில் இருந்து எனக்கு வந்த மூன்றாவது கோரிக்கை இது. முதலாவது சந்திரிக்கா, இரண்டாவது மேத்தானந்த எல்லாவல தேரர், மூன்றாவது இதோ இவர்கள். இதை எல்லாம் செய்து விட்டுதான் “மனோ ஒரு புலி” என தென்னிலங்கையில் இனவாத பிரசாரம் செய்து என்னை கொல்ல முயன்றார்கள்.

• இன்று எங்கெங்கோ இருக்கும், அல்லது இருந்த, மங்கள சமரவீர, அனுரகுமார, விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க, உதய கம்மன்பில ஆகிய அனைவரும் மகிந்த அணியில் இருந்தார்கள்.

• மஹிந்த வருவதைதான் புலிகளும் விரும்புவதாக நான் காற்றுவாக்கில் அறிந்தேன். சிங்கள தேசியவாத அரசாங்கம் வந்தால்தான் தங்களது போராட்டத்திற்கு வாய்ப்பாக இருக்கும் என புலிகள் நினைப்பதாக தெரிகிறது” என்ற உண்மையை உள்ளது உள்ளபடி கூறினேன்.

*காலகட்டம்: 2005 - ஜனாதிபதி தேர்தல். அதற்கு முன் நடந்த ரணிலின் போர் நிறுத்த சமாதான கால ஆட்சியை ஜனாதிபதி சந்திரிக்கா கலைத்த பின் நடைபெற்ற தேர்தல். ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க. ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு வேட்பாளர் மகிந்த ராஜபக்ச*

2005 ஆம் வருடம் ஜனாதிபதி தேர்தலிலே ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளர். சந்திரிகாவுடன் சண்டை போட்டு, மஹிந்த ராஜபக்ச, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் வேட்பாளர் நியமனத்தை பெற்றார்.



அவருக்கு ஜேவிபி, ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளின் ஆதரவு.

தேர்தலுக்கு முன் ரணில், சிங்கள, வடகிழக்கு தமிழ், மலையக தமிழ், முஸ்லிம் வாக்குகளை பெற்று வெல்லும் அரசியல் சூழல் நிலவியது.

சிங்கள வாக்குகளை தானும், ரணிலும் பிரித்துக்கொள்ளலாம். ஆனால், தமிழர்களின் வாக்கு ஒட்டுமொத்தமாக ரணில் விக்கிரமசிங்கவிற்கு விழுவதை மஹிந்த ராஜபக்ச விரும்பவில்லை. அப்படி விழுந்தால் ரணில் வென்று விடுவார் என மஹிந்த அணி மிக சரியாக கணக்கு போட்டது.

அப்பொழுது அவரது தேர்தல் பிரச்சாரத்தின் பிரதான செயற்பாட்டாளர் மங்கள சமரவீர ஆகும். அவருக்கு உதவியாக ஸ்ரீபதி செயற்பட்டார்.

மங்கள பின்னாளில், சமாதான ஆர்வலர், தமிழருக்கு நியாயம் வழங்க வேண்டும் என விரும்பியவர், என்றெல்லாம் புகழப்பட்டாலும்கூட, ஆரம்பத்தில், மஹிந்த ராஜபக்ச ஆட்சியை கொண்டு வந்ததில் அவர்தான் பிதாமகன்.

அப்போதுதான் அமெரிக்காவில் இருந்து பசில் ராஜபக்ச தனது சகோதரனின் தேர்தல் பிரச்சாரத்தில் பங்கேற்பதற்காக இலங்கை வந்திருந்தார். வந்தவுடன் அலரி மாளிகையில் இருந்தபடி மங்களவுடன் சேர்ந்து அவர் சுறுசுறுப்பாக செயற்பட தொடங்கினார்.

இன்று ராஜபக்ச அணியில் இருக்கக்கூடிய முன்னணி அலப்பறைகள் அன்று பிரதானிக-ளாக இருக்கவில்லை. ஒரு புறத்தில் அமைச்சர் மங்களவும், ஸ்ரீபதி சூரியாராய்ச்சியும், மறுபுறம் பசிலும், அமைச்சர் ஜெயராஜ் பெர்னெண்டோ புள்ளேயும்தான் முன்னணியாளர்கள்.

தேர்தல் பிரச்சார ஆரம்ப காலக்கட்டத்திலே வேட்பாளர் நியமனம் செய்யப்பட்ட பிறகு அவசர அவசரமாக ஒருநாள் ஜெயராஜ் பெர்னெண்டோ புள்ளே என்னை தொலைபேசியில் தொடர்புகொண்டார். என்னை சந்திக்க வேண்டும். தன்னுடன் இன்னொரு முக்கிய பிரமுகரும் வந்து என்னை சந்திக்க விரும்புகின்றார் என்று கூறினார். வரச்சொன்னேன்.

ஜெயராஜ் எனது தனிப்பட்ட நண்பர். அவர் என்னுடன் எப்போதும் தமிழில்தான் பேசுவார். அவரது தமிழில் ஒரு இனம்புரியா இனிமை இருக்கும். அந்த இனிமையில் அவரது கட்சியின் வி'மும் இருக்கும். வெள்ளவத்தையில் உள்ள என் சகோதரி கௌரி கணேசனின் வீட்டின் மொட்டை மாடியில் அந்த சந்திப்பு இடம்பெற்றது. என்னுடன் அப்போது கட்சியில் இருந்த சகோதரர் பிரபா கணேசனும் இருந்தார். குறிக்கப்பட்ட நேரத்தில் ஜெயராஜ் பெர்னெண்டோ புள்ளே, பசில் ராஜபக்சவையும் அழைத்துக்கொண்டு என்னை சந்திக்க வந்தார்.

பசில் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டார். அப்பொழுதுதான் அவரை முதன்முதல் சந்திக்கின்றேன். அவரை பற்றி எனக்கும், என்னை பற்றி அவருக்கும் ஜெயராஜ் எடுத்து கூறினார்.

”ரணில் விக்கிரமசிங்கவை வெற்றிபெற வைப்பதில் எந்த பயனும் இருக்க போவதில்லை. அவர் நல்லவராக இருந்தாலும் கூட, (எப்படி? நல்லவர் என ஏற்றுகொள்கிறார்கள்..!) தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வை அவரால் வழங்க முடியாது. அவர் வழங்கும் எந்த ஒரு தீர்வையும் சிங்கள பெரும்பான்மை மக்களும், பௌத்த மகாசங்கமும் ஏற்றுக்கொள்ள போவதில்லை.” என்று மிகவும் நடைமுறை கோணத்தில் பசில் எனக்கு சொன்னார்.

இது எனக்கு புது செய்தியாக இருக்கவில்லை. இரண்டு தினங்களுக்கு முன் இதே வாதத்தை முன் வைத்து பாராளுமன்றத்தில் ஸ்ரீபதி சூரியாராய்ச்சி என்னுடன் உரையாடி இருந்தார்.

இதுதான், ஸ்ரீபதியின் நண்பரும், ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்சவின் பிரதான பிரசார செயற்பாட்டாளருமான, நண்பர் மங்கள சமரவீரவின் அந்நேர நிலைப்பாடாகும்.

பெசில் சொல்வதையெல்லாம் அமைதியாக கேட்டுவிட்டு, “சரி, நான் என்ன செய்யவேண்டும்? என சொல்லுங்கள்” என்று கேட்டேன்.

”நீங்கள் எங்கள் அணியில் சேர வேண்டும். மஹிந்த ராஜபக்ச நிச்சயமாக வெற்றிபெற்று ஜனாதிபதியா-குவார். அவரது அரசாங்கத்திலே தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய பொருத்தமான சில-ரின் நீங்களும் ஒருவர். ” என்று பெசில் என்னிடம் கூறினார்.

பிறகு என்னை ஒருமுறை ஆழமாக பார்த்துவிட்டு மீண்டும் தொடர்ந்தார்.

”நான் உங்களை முதல் முதலாக இன்று தான் சந்திருந்தாலும் கூட ஜெயராஜ் உங்களை பற்றி எனக்கு நிறைய கூறி இருக்கின்றார். தமிழும், சிங்களமும், ஆங்கிலமும் பேசக்கூடிய நீங்கள் எங்களுக்கு உங்கள் கட்சி ரீதியாக ஆதரவளித்து எங்கள் பிரச்சாரத்தில் இணைந்துகொள்ள வேண்டும்.” என்று பெசில் மேலும் கூறினார்.

அந்நேரம் நான் இன்று போல சரளமாக சிங்களம் பேச மாட்டேன். தமிழ், ஆங்கிலம் மட்டும்தான்.

ஆனாலும் இவர் இப்படி சொல்கிறார். காரியம் ஆக வேண்டுமே..! ஜெயராஜ் பெர்னெண்டோ புள்ளே நீண்ட நேரம் பேசினார். நான் எதற்கும் ஆம், இல்லை என்று சொல்லவில்லை. அமைதியாக கேட்டுக்கொண்டு இருந்தேன்.

பிரபா கணேசனும், அந்நேரம் என்னுடைய செயலா-ளர் பிரசாத் பீரிசும் என்னுடன் அமர்ந்திருந்தார்கள்.

”நீங்கள் எங்களுடன் இணைய வேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம். ஒரு வேளை எங்களுக்கு நேரடியாக ஆதரவளிக்க முடியாவிட்டால், இன்னொரு உதவியை நீங்கள் எங்களுக்கு செய்யலாம்.” என்று ஜெயராஜ் என்னிடம் கூறினார்.

அது என்ன என கேட்பதை போல அவர்களை நான் கூர்ந்து பார்த்தேன். பெசில் என்னை பார்த்து சிரித்தபடி இருந்தார், **"Come Mano, I will explain"** (வாருங்கள் மனோ, நான் விளக்குகிறேன்) என்று கூறி என் தோளை பிடித்து எழுப்பினார், ஜெயராஜ் பெர்னெண்டோ புள்ளே.

பெசில், பிரபா, பீரிஸ் அங்கே இருக்க, நானும் ஜெயராஜும் எங்கள் வீட்டின் மொட்டை மாடியின் ஒரு இருண்ட மூலைக்கு சென்றோம். நேரம் இரவு 9 மணி இருக்கும். அங்கிருந்து பார்த்தால் தென் கொழும்பின் பெரும்பகுதி தெரிந்தது. இரவு நேர வெள்ளவத்தை கண் சிமிட்டியது. கடல் காற்று பலமாக அடித்துக்கொண்டு இருந்தது.

ஜெயராஜ் சொன்னார். ”மனோ, நீங்கள் எங்களுக்கு புலிகளுடன் ஒரு தொடர்பை ஏற்படுத்தி தர வேண்டும். நாங்கள் அவர்களுடன் பேச விரும்புகின்றோம்” என்றார்.

”அவர்களுடன் நீங்கள் என்ன பேச விரும்புகின்றீர்கள்?” என்று நான் கேட்டேன்.

”இல்லை, ரணில் ஆட்சிக்கு வரபோவதில்லை. பெசில் உங்களிடம் சொன்னதை போல ஒருவேளை வந்தாலும்கூட, தீர்வு வரப்போவதில்லை. மகாசங்கத்தினர் விட மாட்டார்கள். மகிந்த வந்தால் தீர்வு வரும். மகாசங்கத்தினர் உடன்படுவார்கள்.” என்று கூறினார்.

“அப்படியா? ரணிலின் தீர்வு எனக்கு தெரியும். மகிந்தவின் தீர்வு, என்ன தீர்வு?” என நான் கேட்டேன். அந்த அசந்தர்ப்ப கேள்விக்கு, ஜெயராஜ் பதில் கூறவில்லை. தன் காரியத்தில் கண்ணாக இருந்தார். நான், நண்பர் ஜெயராஜிடம் அன்றைய சூழலில் நான் கேள்விப்பட்ட ஒரு உண்மையை கூறினேன்.

“மஹிந்த வருவதைதான் புலிகளும் விரும்புவதாக தெரிகிறது. அந்த செய்தியை நான் காற்றுவாக்கில் அறிந்தேன். சிங்கள தேசிய வாத அரசாங்கம் வந்தால்தான் தங்களது போராட்டத்திற்கு அது வாய்ப்பாக இருக்கும் என புலிகள் நினைப்பதாக தெரிகிறது” என்ற உண்மையை உள்ளது உள்ளபடி



கூறினேன்.

அது தனக்கு தெரியும் என்றும், ஆனால் அது பற்றி திட்டவட்டமாக பேச வேண்டும் என்றும், மேலதிக ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்றும், எக்காரணம் கொண்டும் மஹிந்தவின் வெற்றி தடைபட்டுவிட கூடாதென தான் உறுதியுடன் இருப்பதாகவும் ஜெயராஜ் என்னிடம் கூறினார். ஆகவே நீங்கள் எனக்கு தொடர்புகளை ஏற்படுத்தி தாருங்கள் என்று கேட்டுக்கொண்டார்.

புலிகள் அமைப்பின் ஒருவரின் பெயரை ஜெயராஜ் சொன்னார். அவர் யார் என இதை படிக்கும் போது ஊகிப்பது கஷ்டம் இல்லை.

ஆனால், அவருடன் எனக்கு தொடர்பு கிடையாது என்றும், தடை செய்யப்படாத இன்றைய நிலையில், இலங்கை அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் சட்டபூர்வ போர்நிறுத்த ஒப்பந்தம் இருக்கும் இந்த சூழலில், புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனையே நான் சந்தித்து அரசியல் பேசியிருக்கிறேன் எனவும், புலி தலைவர் பிரபா-கரனை ஒருமுறை சந்தித்தேன் எனவும், புலிகளை தெரியும், புலிகளில் அவர்களை தெரியாது என அவரிடம் கூறிவிட்டு, சிந்தித்து நாளை சொல்கிறேன் என்று கூறினேன்.

அதன் பிறகு ஜெயராஜும், பசிலும் விடைபெற்று சென்றார்கள். இது புலிகளுடன் பேசும்படி அல்லது, தொடர்பை ஏற்படுத்தும்படி தென்னிலங்கையில் இருந்து எனக்கு வந்த மூன்றாவது கோரிக்கையாகும். முதலாவது சந்திரிக்கா, இரண்டாவது மேத்தானந்த எல்லாவல, தம்மாலோக தேரர்கள், மூன்றாவது இவர்கள்.

இதை எல்லாம் செய்து விட்டுதான், “மனோ ஒரு புலி” என பின்னாட்களில் தென்னிலங்கையில் இனவாத பிரசாரம் செய்து என்னை கொல்ல முயன்றார்கள்.

எப்படியும் நான், ஜெயராஜ், பசில் சந்தித்து கேட்ட உதவியை செய்யவில்லை. என் மூலமாக செய்ய முடியாததை காந்தன் மூலமாக மங்கள சமரவீர செய்துகொண்டதாக நான் பின்னர் அறிந்தேன்.

இப்பொழுது நினைத்துப்பார்க்கும் பொழுது அந்த சர்ச்சைக்குரிய தொடர்பாடல் பணிகளை நான் செய்யாததை எண்ணி மகிழ்ச்சி அடைகின்றேன். செய்திருந்தால் சர்ச்சையில் மாட்டியிருப்பேன். அது மட்டுமல்ல, என் மனசாட்சி என்னை வாழ விட்டு இருக்காது.

ஏனெனில், இந்த தொடர்பாடல் மூலமாக, இலங்கையின் வரலாறு தலைகீழாக மாறியது. பெரும் பேரழிவு ஏற்பட, இலட்சக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட வழி வகுத்தது.

இந்த திட்டங்களுக்கு பின்னின்ற பிரதான சூத்திரதாரி, பிற்காலத்தில் தமிழரின் நண்பர் என்ற புகழுடன் மறைந்த மங்கள சமரவீர என்பது காலத்தின் கோல விசித்திரம்.

தேர்தலில் மகிந்தவை வெற்றி பெற வைக்க, மங்கள, விமல், அனுர, சம்பிக்க, கம்மன்பில ஆகியோர் ஒன்று பட்டது போல, பிறகு மகிந்த வெற்றி பெற்று, போரை நடத்தி அப்பாவி மக்கள் கொல்லப்பட்ட போது, மகிந்தவின் கரங்களை பலப்படுத்த கரு ஜெயசூரிய, ராஜித சேனாரத்ன என்ற சமாதான புறாக்களும் அரசு பக்கம் தாவினார்கள்.

இந்த காலத்தின் கோல விசித்திரங்களை பற்றியெல்லாம் நேரகாலம் வந்தால் பிறகு ஒருநாள் பேசுவோம்.

# மக்கள் அரைப் பட்டினி கிடக்கிறார்கள் ஆனால் ஆளுவோர் ஆடம்பரத்தில் மிதக்குகிறார்கள்!

**- கனடா நக்கீரன்**

ஊரார் வீட்டு நெய்யே என் பெண்டாட்டி கையே என்பது ஒரு தமிழ்ப் பழமொழி. அதாவது தன் வீட்டு நெய் என்றால் மனைவி சிக்கனமாகவும் ஊரார் வீட்டு நெய் என்றால் வாரி இறைத்தும் செலவு செய்வார் என்பதை விளக்க இந்தப் பழமொழியைக் கூறுவர் அதுபோல இலங்கையின் சனாதிபதி இரணில் விக்கிரமசிங்க சாதாரண பொதுமக்களைப் பார்த்து வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி வாழுமாறு உபதேசம் செய்கிறார். ஆனால் தனது அமைச்சரவை செலவீனங்கள் பற்றியோ, நாடாளுமன்ற உறுப்பினர்களது செலவு பற்றியோ அவர் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. கவலைப்படாதது மட்டுமல்ல நாடாளுமன்றத்தின் செலவீனங்களை அதிகரிப்பதில்தான் குறியாகயிருக்கிறார். அமைச்சரவையில் இப்போதுள்ள அமைச்சர்கள் போதாது என்று மேலும் பலருக்கு அமைச்சர் பதவிகள் வழங்க அவர் ஆயத்தமாகி வருகிறார். இதற்கான செலவு அவரது வீட்டுப் பணம் அல்ல, நாட்டின் கருவூலத்தில் இருக்கும் பணம்!

முன்னாள் சனாதிபதி கோட்டாபய இராசபக்ச அவர்களின் முதலாவது அமைச்சரவையில் 26 அமைச்சர்களும் 39 இராசாங்க அமைச்சர்களும் இடம்பெற்றார்கள். தற்போதைய சனாதிபதி இரணில் விக்கிரமசிங்க அவர்களின் அமைச்சரவையில் 21 அமைச்சர்கள் இடம்பெற்றுள்ளனர். இராசாங்க அமைச்சர்களாக 35 பேர் இருக்கிறார்கள்.

நாடு ஒட்டாண்டியாகப் போன காரணத்தால் மக்கள் அரைப்பட்டினி கிடக்கிறார்கள். மூன்று நேரம் உணவு உண்டவர்கள் அதனை இரண்டு நேரமாகக் குறைத்துள்ளார்கள். பொருட்களின் விலை சற்றுக் குறைந்து காணப்பட்டாலும் ஏழைபாளைகளுக்கு



அவை எட்டாத தூரத்தில் இருக்கின்றன.

பக்கத்து நாடான பாகிஸ்தானும் இலங்கையைப் போலவே பாரிய பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் 30 பில்லியன் டொலர் பெறுமதியான உற்பத்தி முற்றாக அழிக்கப்பட்டுவிட்டது. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துவிட்டது. பாகிஸ்தான் 22 கோடி மக்கள் தொகை கொண்ட நாடு. அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தி **(GDP)** 2.4**%** ஆகும். பணவீக்கம், சனவரியில், 2023 இல் 27.5**%** தொட்டது. அன்னியச் செலாவணி கையிருப்பு மூன்று வார இறக்குமதித் தொகைக்குக் கீழே குறைந்துள்ளது. மக்கள் தொகையில் 35**%** ஏழைகள்.

இலங்கையைப் போலவே பாகிஸ்தானும் அனைத்துலக நிதியத்திடம் கையேந்தி நிற்கிறது. கடந்த பெப்ரவரி மாதம் பொருளாதாரச் சரிவைத் தடுக்க **$**6.5 பில்லியன் கடனாகக் கேட்டிருக்கிறது.

இதே சமயம் பாகிஸ்தான் நாட்டின் பிரதமர் ஷெஹ்பாஸ் ஷெரீப் அரசின் செலவினங்களைக் குறைக்க அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். தனது அமைச்சர்கள் மற்றும் ஆலோசகர்களின் சொகுசு கார்கள் மற்றும் அவர்களின் சம்பளம் குறைக்கப்பட்டுள்ளது. அரசாங்க ஊழியர்களின் சம்பளம் 10**%** விழுக்காட்டால் குறைக்கப்பட்டுள்ளது. இந்த சிக்கன நடவடிக்கைகளால் அரசாங்கத்திற்கு ஆண்டுக்கு ரூபா 200 பில்லியன் (**$**766 மில்லியன்) மிச்சப்படுத்தப்படும்.

வரலாறு காணாத பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துவரும் இலங்கையில் நா.உறுப்பினர்களின் சம்பளம் மற்றும் சலுகைகள் குறைக்கப்பட வில்லை. அரச ஊழியர்களின் சம்பளத்தில் வெட்டு இடம் பெறவில்லை. அமைச்சர்களும் அதிகாரிகளும் உலகத்தை சுற்றி வலம் வருகிறார்கள். அண்மையில் வெளியுறவு அமைச்சர் எஸ்யுஎம் அலி சப்ரி, நீதி அமைச்சர் விசயதாச இராசபக்ச மற்றும் அதிகாரிகள் தென் ஆபிரிக்கா சென்று வந்தார்கள்.

இலங்கை சனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், அவைத் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினகளது மாதாந்த சம்பளத்தையும் கொடுப்பனவுகளையும் பின்வரும் அட்டவணை 1 காட்டுகிறது.


**அட்டவணை 1**

| நா.உறுப்பினர்களின் மாத சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் | ரூபா |
|---|---|
| சனாதிபதி | 97,500 |
| பிரதமர் | 71,500 |
| அவைத் தலைவர் | 68,000 |
| துணைத் அவைத் தலைவர் | 63,500 |
| அமைச்சரவை அமைச்சர்கள் | 65,000 |
| எதிர்க்கட்சித் தலைவர் | 65,000 |
| நா.உறுப்பினர்கள் | 54,285 |
| **கொடுப்பனவுகள்** | |
| பயணப்படி | 15,000 |
| எரிபொருள் (சராசரி) 250 லிட்டர் | 15,000 |
| முத்திரைச் செலவு (ஓர் ஆண்டுக்கு) | 350,000 |
| தொலைபேசி | 50,000 |
| ஒரு நாள் வருகை | 2,500 |
| குழுக் கூட்ட வருகை | 2,500 |
| பொழுதுபோக்குக் கொடுப்பனவு | 4,500 |
| வண்டி ஓட்டுநர் | 3,500 |
| அலுவலகம் | 100,000 |

சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுக்கு மேலாக அலுவலக உபகரணங்களான கணினிகள், நகல் இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள் மற்றும் மொபைல் போன்கள் போன்றவற்றையும் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை அரசாங்கம் வழங்குகிறது. கடந்த அரசாங்கத்தின் போது அமைச்சரவையில் 88 இராசாங்க அமைச்சர்கள் இருந்தனர். இந்த 88 இராசாங்க அமைச்சர்களுக்கும் அமைச்சரவை அமைச்சர்கள் அனுபவிக்கும் அனைத்து சலுகைகளும் வழங்கப்பட்டன. மேலும், எட்டுக் கண்காணிப்பு உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டு, நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளுக்கு மேலதிகமாக மாதம் 600,000 ரூபாயும் வழங்கப்பட்டது.

கீழ்க்கண்ட அட்டவணை 2, ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் சம்பளம், கொடுப்பனவுகள், கழிவுகளைக் காட்டுகிறது.

**அட்டவணை 2**



The Details of the allowances and the deduction made for the month of January 2023, are as follows:

Allowances

| | | | |
|---|---|---|---|
| Monthly Allowance | 54,285.00 | Office Allowance | 100,000.00 |
| Entertainment Allowance | 1,000.00 | Fuel Allowance | 179,067.00 |
| Telephone Allowance | 50,000.00 | Transport Allowance | 15,000.00 |
| Sitting Allowance | 17,500.00 | | |
| Gross Salary | 416,852.00 | | |

Deduction

| | | | |
|---|---|---|---|
| House Rent Deposit | 1,000.00 | Stamp Duty | 25.00 |
| Electricity - Monthly | 2,450.00 | Water - Monthly | 1,026.95 |
| Catering | 1,550.00 | House Rent - Madiwela | 1,000.00 |
| Deposit - Bank | 10,000.00 | Telephone Bill (Private) | 574.40 |
| Adv. Personal Income Tax | 76,566.72 | | |
| Total Deduction | 94,193.07 | | |
| Net Salary | 322,658.93 | | |

A sum of Rs.322,658.93 has been credited to your account [redacted] Bank of Ceylon,Parliament Branch, being your net allowances for the month of January 2023

The receipt appended may please be perfected and returned on or before the 10th day of next month to enable me to forward the documents to the Auditor General.

Yours faithfully

Director (Finance)
for Secretary General of Parliament

சனாதிபதி, பிரதமர், அவைத்தலைவர், இராசாங்க அமைச்சர்கள் போன்றோருக்கு ஏதாளமான ஆளணி, வாகனங்கள் வழங்கப்படுகின்றன.

வரலாற்று நோக்கில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த நா.உறுப்பினர்கள் மத்திய கொழும்பில் உள்ள ஸ்ராவஸ்தியில் தங்க வைக்கப்பட்டார்கள். அது நாடாளுமன்ற உறுப்பினர்களின் விடுதி என்று அழைக்கப்பட்டது. 1980 களில் மாதிவெல வீடமைப்புத் தொகுதியை **(Madiwela Housing Complex)** நிர்மாணித்ததன் மூலம், கொழும்பிற்கு வெளியில் இருந்து வருகின்ற உறுப்பினர்கள் அதில் தங்க வைக்கப்படுகின்றனர். மாத வாடை ரூபா 1,000 மட்டுமே. மாதிவெல வீடமைப் தொகுதியில் இடம் இல்லை என்றால் ஒரு வீட்டை வாடகைக்கு எடுப்பதற்கான கொடுப்பனவை அரசாங்கம் கொடுக்கிறது. அத்துடன், பாராளுமன்ற செயலகத்தின் நிர்வாகத் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் நுவரேலியாவில் பத்தொன்பது அறைகள் கொண்ட விடுமுறை மாளிகையில் **(General's House)** நா. உறுப்பினர்களும் அவர்களது குடும்பத்தினரும் தனியே பயன்படுத்தலாம்.

**பிற கொடுப்பனவுகள்**

நா. உறுப்பினர்கள் உணவருந்தும் பகுதியில் மானிய விலையில் உணவு வழங்கப்படுகிறது. முதன்மையாக, 5 பிரத்தியேக உணவகங்கள், சிற்றுண்டிச்சாலைகள், சிறப்பு விருந்தாளிகளது உணவு அறைகள் மற்றும் பிற வகையான சேவை நிலையங்கள் உட்பட 12 முக்கிய உணவு மற்றும் குளிர்பான சேவை விற்பனை நிலையங்கள் உள்ளன. அவற்றில் 5 நாளாந்த அடிப்படையில் இயக்கப்பட்டு, நாடாளுமன்றம் கூடாத நாட்களில் 1000 - 1200 பேருக்கு உணவளிக்கின்றன.

இந்தத் திணைக்களம் சிறப்பு நாட்களில் அதன் முழு அளவிலான திறனுடன் செயல்படும் போது சனாதிபதி, பிரதமர், அவைத்தலைவர், அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள், நண்பர்கள், வெளிநாட்டு இராசதந்திரிகள், உள்ளூர் பிரமுகர்கள், வருகை தரும் அரசாங்க அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலருக்கும் உணவு பரிமாறப்படுகிறது. உணவு



தயாரிப்பில் 260 க்கும் மேற்பட்ட சமையல்காரர்கள் ஈடுபடுகிறார்கள். மதியநேர அல்லது இரவு நேரச் சாப்பாட்டின் விலை ரூபா 296 மட்டுமே. ஆனால் அதன் தயாரிப்புச் செலவு ரூபா 3,000 தொடும் என்கிறார்கள். எப்படியும் வெளியில் அந்த உணவின் விலை குறைந்த பட்சம் ரூபா 1,000 ஆவது வரும். மேலும் இந்த உணவு வீணாக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டும் உள்ளது. ஆண்டு தோறும் ரூபா120 மில்லியன் பெறுமதியான உணவு, குடிதண்ணீர் போன்றவற்றை வீணடிக்கிறது. தண்ணீர் மட்டும் 9 மில்லியன்.

பணத்தைத் தண்ணீராகச் செலவழிக்கும் இதே அரசியல்வாதிகள்தான் மலையகத் தோட்டத் தொழிலாளர்களது சம்பளத்தை உயர்த்த மறுக்கிறார்கள். கடந்த ஆண்டு சம்பளத்தை ரூபா 1,000 ஆக உயர்திய தோட்டக் கம்பனிகள் ஒப்புக் கொண்டாலும் வேலை நாட்களை 6 இல் இருந்து 5 ஆகக் குறைத்துவிட்டன. 16 கிலோ பறித்தால் தினக் கூலி ரூபா 640 மட்டுமே கிடைக்கும். மேலும் இந்த மக்கள்தான் தேயிலை ஏற்றுமதியின் மூலம் ஏற்றுமதி வருவாயில் 11**%** வெளிநாட்டு நாணயத்தை தேடித் தருகிறார்கள். இந்த ஆண்டு தேயிலை ஏற்றுமதி மூலம் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டு (2022) ஆண்டில் 1.2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைத்தது.

உலகில் மிகக் கடுமையாகச் சுரண்டப்படுகிற தொழிலாளர்கள் மலையகத் தமிழர்களே.



(தொடர்ச்சி 23ம் பக்கம்)

*(22ம் பக்கத் தொடர்ச்சி)*

பல ஆயிரம் குடும்பங்களுக்கு புதிய வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டாலும், இவை பழைய லைன் அறைகளில் இருந்து வேறுபட்டவை அல்ல.
இந்த வீடுகளும் இந்தியா கட்டிக் கொடுத்தவை. பல தோட்டங்களில் 200 ஆண்டுகளுக்கு முன் வெள்ளைக்காரன் கட்டிக் கொடுத்த லைன் வீட்டில்தான் இன்னமும் தொழிலாளிகள் குடும்பம் வாழ்கின்றன.

உயர் கல்வித் தகைமைகள் அற்ற இளம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை சட்டக் கல்லூரியின்
நுழைவுத் தேர்வுக்குத் தோன்றாமல் நேரடியாக அனுமதி பெறுகின்றனர். இந்தச் சலுகையைப் பயன்படுத்திச் கட்டக் கல்லூரியில் படித்து சட்டத்தரணிகளாக வெளிவந்தவர்களில் மகிந்த இராசபக்ச, நாமல் இராசபக்ச குறிப்பிடத்தக்கவர்கள்!

நாடாளுமன்ற ஓய்வூதியச் சட்டப்படி, நாடாளுமன்றத்தில் 5 ஆண்டு பதவிக் காலத்தை முடித்த நா.உறுப்பினர், தனது சம்பளத்தில் 1/3 பங்கை ஓய்வூதியமாகப் பெறுகிறார். இதன் அடிப்படையில் ஒரு நா.உறுப்பினக்கு ரூபா 18,095 ஓய்வூதியமாகக் கொடுக்கப்படும். அதே நேரம் அமைச்சராக அல்லது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நா.உறுப்பினருக்கு ரூபா 21,166 ஓய்வூதியமாகக் வழங்ககப்படும். ஐந்தாண்டுகளை நிறைவு செய்யும் அவைத் தலைவருக்கு ரூபா 22,833.50 வழங்கப்படும். ஓய்வூதியத்திற்குத் தகுதி பெறுவதற்கு குறைந்தபட்சம் 5 ஆண்டு காலத்தை முடித்த பிரதமருக்கு ரூபா 23,500 வழங்கப்படும். எவ்வாறாயினும் நாடாளுமன்ற ஓய்வூதியச் சட்டத்தின்படி, 15 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய எம்.பி., அந்தக் காலகட்டத்தில் பெற்ற சம்பளத்தில் மூன்றில் இரண்டு பங்கைப் பெறுகிறார். இதன்படி, 15 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் பணியாற்றிய ஒரு நா.உறுப்பினருக்கு ஓய்வூதியமாக ரூபா 44,190 வழங்கப்படும்.

அதே சமயம் 15 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் பணியாற்றிய அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரூபா 42,332 வழங்கப்படும். மேலும். 15 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் பணியாற்றிய நாடாளுமன்ற சபாநாயகருக்கு ரூபா 25,666 ஓய்வூதியமாக வழங்கப்படும், பதினைந்து ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட சேவையில் இருக்கும் பிரதமருக்கு ரூபா 47,000 வழங்கப்படும். தற்போது, 254 அரசியல்வாதிகள், 196 கைம்பெண்கள், முன்னாள் நா. உறுப்பினர்களைச் சார்ந்துள்ள 7 பேர் ஓய்வூதியம் பெறுகின்றனர். அதன்படி, ஓய்வூதியம் பெற வேண்டிய ஒவ்வொரு நா. உறுப்பினருக்கும் ஓய்வூதியம் வழங்கப்படும் போது அரசாங்கத்துக்கு மாதச் செலவு ரூபா 8,276,587 ஆகும். ஒரு ஆண்டுக்கு அந்தத் தொகை ரூபா 99,211,044 ஆக உயரும். பத்து ஆண்டு காலத்திற்கு இவர்களுக்கான ஓய்வூதியம் மட்டுமே கிட்டத்தட்ட ரூபா 1 பில்லியனைத் (நூறு கோடி) தாண்டும்!

ஜேவிபியின் 39 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கடந்த 13 ஆண்டுகளாக ஓய்வூதியக் கொடுப்பனவாக ரூபா 24 கோடி, 63 இலட்சத்து அறு-பதினாயிரம் பெற்றுள்ளதாக இராசாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் மட்டும் 40 ஆயிரம் ரூபா வீதம் ரூபா 62,40,000 ஓய்வூதிய கொடுப்பனவாக கடந்த 13 வருடங்களாக பெற்றுக் கொண்டுள்ளதாகவும் அவர் சபையில் சுட்டிக்காட்டினார்.

இன்று ஐந்து முன்னாள் சனாதிபதிகளுக்கு கோடிக் கணக்கில் ஓய்வூதியம், வீடுகள், வாகனங்கள் மற்றும் சலுகைகள் வழங்கப்படுகின்றன. அவற்றைப் பார்த்தால் மயக்கம் வருகிறது. *(தொடரும்)*




கனடிய செய்திகள்
Canadian News

# கனடாவில் சண்டிலிப்பாய் ஐக்கிய மன்றத்தினரின் ஒன்றுகூடல்

**- குரு அரவிந்தன்**

சென்ற சனிக்கிழமை மார்ச் மாதம் 25 ஆம் திகதி 2023 ஆம் ஆண்டு கனடாவில் இயங்கிவரும் சண்டிலிப்பாய் ஐக்கிய மன்றத்தினரின் ஒன்றுகூடலும், இரவு விருந்துபசாரமும் இடம் பெற்றன. ரொறன்ரோ எக்லிங்டன் வீதியில் உள்ள ஈஸ்ட்ரவுன் விருந்தினர் மண்டபத்தில் மாலை 6:30 மணியளவில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. மன்றத்தின் தலைவர் திரு. அஜந்தன் மகேந்திரனும் அவரின் துணைவியாரும் மங்கள விளக்கேற்றி விழாவை தொடக்கி வைத்தனர். தொடர்ந்து கனடா தேசிய கீதமும், தமிழ்தாய் வாழ்த்தும் இடம் பெற்றன. அதன்பின் சமீபத்தில் எம்மைவிட்டுப் பிரிந்தவர்களுக்காக ஒரு நிமிடம் அகவணக்கம் இடம் பெற்றது. அதைத் தொடர்ந்து பாமதி ராம்தாஸ் அவர்களின் வரவேற்புரை இடம் பெற்றது.



தொடர்ந்து மன்றத்தின் "கலைச்சங்கமம் - 2023" என்ற ஆண்டு மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது. மருதநிலத்தின மாண்புகள் என்ற தலைப்பில் சண்டிலிப்பாயின் வரலாறு பற்றி எழுத்தாளர் குரு அரவிந்தன் எழுதிய கட்டுரை ஒன்றும் இதில் இடம் பெற்றிருந்தது. சண்டிலிப்பாய்க்குப் பெருமை சேர்க்கும் வழுக்கை ஆறு, கூவல் தெப்பக்குளம், கல்வளை அந்தாதி, கண்ணகி அம்மன் கோயில் போன்றவை பற்றிய விபரங்களும் இந்த மலரில் இடம் பெற்றிருக்கின்றன.




அடுத்து வரவேற்பு நடனம், பரதநாட்டியம், திரையிசை நடனம், சினிமாப் பாடல்கள், வீணையிசை, நகைச்சுவை நாடகங்கள் போன்ற கலைநிகழ்ச்சிகள் இடம் பெற்றன. நனட ஆசிரியை தேவகியின் மாணவிகளும் இந்த நடன நிகழ்ச்சிகளில் பங்கு பற்றிச் சிறப்பித்தனர். வைத்தியகலாநிதி வரகுணனின் மெல்லிசைப் பாடல்களும் இடம் பெற்றன. இந்தக் கலை நிகழ்ச்சிகளின் போது, கனடாவில் பிறந்து வளர்ந்த, மிகத் திறமையாக வீணையிசை வழங்கிய ரிசி என்ற 12 வயதுச்சிறுவனைப் பலரும் பாராட்டியதும் குறிப்பிடத்தக்கது. இவரது திறமையைப் பாராட்டிச் சென்ற வருடம் உதயன் விழாவிலும் இவர் கௌரவிக்கப்பட்டிருந்தார்.

கலைநிகழ்ச்சிகளுக்கிடையே மூத்தோரைக் கணம் பண்ணும் நிகழ்வும் இடம் பெற்றது. சண்டிலிப்பாயின் மூத்த உறுப்பினர்களாகிய திரு. கனகசபாபதி சச்சிதானந்தம், திருமதி. மகேஸ்வரி நாகேந்திரம், திரு. கருணா விஜயநாயகம், திரு. பொன்னையா சிவானந்தன், மற்றும் மாகாஜனக் கல்லூரி ஆசிரியராகக் பணிபுரிந்த திரு. செல்லையா சந்திரசேகரி ஆகியோர் இந்த ஒன்றுகூடலின் போது கௌரவிக்கப்பட்டனர். இந்தக் கௌரவிப்பு நிகழ்வுக்கு வருகைதர முடியாதவர்களுக்காக அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.



மன்றத்தின் சமூகசேவையைத் தொடர்ந்து கொண்டு நடத்துவதற்றகான நிதி சேகரிப்புக்காக நடத்தப்பட்ட குலுக்கல் சீட்டில் பரிசு பெற்றவர்களுக்கான பரிசுகளும் வழங்கப்பட்டன. சிற்றுண்டியும், இரவு உணவும் பரிமாறப்பட்டன. அதைத் தொடர்ந்து நன்றி உரையுடன் இனிதே நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றன.

## உயிர்த்தெழுந்த ஞாயிறு

---------------------------

பாரினில் தோன்றிய பரிசுத்த பிரானை
பாவிகள் சேர்ந்து படுகொலை செய்தனர்
ஊரினில் உபதேசம் செய்த உத்தமனை
ஊழல் பேர்வழிகள் ஒன்றாய்க் கூடியே!
பாரிய குற்றம் பிதாமேல் சுமத்தியே!
பாதக நண்பனின் பக்கத் துணையுடன்
காரியம் ஆற்றியே கடுமையாய்த் தாக்கினரே!

செய்யாக் குற்றத்தால் சித்திரவதைப் பட்டும்
சித்தம் கலங்காத் திடமாய் நின்றார்
பொய்யாய்ப் பலவிதப் பழிகளைச் சுமத்தினும்
பதிலேதும் சொல்லாப் பதுமையாய் இருந்தார்
மெய்நோகக் கடுமையாய் மேனியில் தாக்கினும்
மனது நொந்து மறுமொழி பேசவில்லை
தெய்வமே பொறுத்திடாச் செயலைச் செய்யினும்
தன்னிலை தளராத் தாங்கிக் கொண்டாரே!

முள்முடி தரிக்க மூடர் சொல்லியும்
மரச்சி லுவையைத் தோளிலே சுமந்தும்
தள்ளாடி நடந்து தடுக்கி வீழ்ந்தும்
தயங்கிடா இட்டபணி தவமாய்ச் செய்தார்
வெள்ளை மனது வழுவிலா வரதனை
வீணர் வீணாய் வெட்டி வீழ்த்தினர்
உள்ளம் குமுறி ஊரார் அழுதிட
ஊமையாய் இருந்து உயிர்வதைப் பட்டாரே!

சிவப்பு அங்கியால் சித்தனை மூடியே
சவுக்கால் அடித்துத் தரையிற் சாய்த்தனர்
தவமாய் வாழ்ந்த தருமச் சீலனை
சிலுவையில் அறைந்து சீவனைப் போக்கினர்
கல்லறை வைத்துக் கல்லால் மூடியும்
கர்த்தர் கண்விழித்து மூன்றாம் நாளில்
கலேலாயா நோக்கிக் கடுகிச் செல்கையில்
காட்சி கொடுத்தார் புண்ணிய மாதர்க்கே!

நாற்பது நாட்கள் பேதுறுவுடன் தங்கியே
நன்றாய்த் தான்யார் என்பதை நிறுவியே!
போற்றுதற் குரிய புண்ணிய சீலன்
பரலோகம் நோக்கிப் பிரியமாய்ச் சென்றார்
உத்தமனாய் வாழ்ந்து உலகிற்காய் மரித்து
உயிர்த்து எழுந்த உன்னத நாளில்
சத்தியம் காத்துச் சகோதரப் பாசத்துடன்
சித்தம் நிறைவாய்ச் சிறப்பொடு வாழ்வோமே!

---------------------------

**ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**

### வீணாவின் கவிக்கணை

தன்னைத் தானே
தாழ்த்திக்கொள்பவன்,
தன்னம்பிக்கையற்றவன்,
தன்மேல் பிழையை
ஏற்றுக்கொண்டு
தன்னிலை மறந்து,
தடுமாறி கதியற்று,
தனிமையில் நொந்து,
தானே தன்னை
அழித்துக்கொள்கிறான்,
தனித்துவம் படைத்த
தன்னிகரில்லா மானிடப்பிறப்பை
தவறாக பயனபடுத்தி
மாய்த்துக்கொள்ளாமல்,
தலைநிமிர்ந்து,
தலைசிறந்து,
தன்நம்பிக்கையுடன் வாழ்ந்திடு போதும்.


Home Renovations
Coverall Group Inc.
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Residential
* Commercial
* Building Permits
Contact: Siva
416-706-8160


தமிழீழத்தின் இசை வேந்தன்
வர்ண.ராமேஸ்வரன் நினைவரங்கத்தில்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
30வது ஆண்டு விழா
தமிழக - கனடிய பிரபல பக்கவாத்தியக் கலைஞர்களுடன்
கலைமாமணி
ராஜேஸ் வைத்தியா
வழங்கும்
இசைச் சங்கமம் 2023
APRIL 23, 2023 @ 6PM
CHINESE CULTURAL CENTRE
5183 SHEPPARD AVE. EAST
SCARBOROUGH
அன்பளிப்பு
VVIP $200
VIP $100
$50
விழா சரியாக மாலை 6:00 மணிக்கு ஆரம்பமாகும்
தொடர்புகளுக்கு: ஈழநாடு பரமேஸ் 416-841-9600

# சென்னையில் கோயில் தீர்த்தவாரி நிகழ்ச்சியில் சோகம் குளத்தில் மூழ்கி 5 இளம் அர்ச்சகர்கள் உயிரிழப்பு

சென்னை நங்கநல்லூர் கோயில் தீர்த்தவாரி நிகழ்ச்சியின்போது, 5 இளம் அர்ச்சகர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. முதல்வர் பொது நிவாரண நிதியில் இருந்து,உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு தலா ரூ.2 லட்சம் வழங்கப்படுவதாக முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.சென்னை நங்கநல்லூர் எம்எம்டிசி காலனியில் சர்வ மங்கள தேவி சமேத தர்மலிங்கேஸ்வரர் கோயில் உள்ளது.

பங்குனி உத்திர திருவிழாவை முன்னிட்டு, மூவரசம்பட்டு குளத்தில் இந்த கோயிலின் தீர்த்தவாரி நிகழ்ச்சி நேற்று காலை நடைபெற்றது. இதையொட்டி, ஏராளமான பக்தர்கள் திரண்டிருந்தனர். தீர்த்தவாரிக்கான சடங்குகள் முடிந்த பிறகு, சுவாமி சிலையுடன் 20க்கும் மேற்பட்ட கோயில் அர்ச்சகர்கள் குளத்தில் இறங்கினர். சுவாமி சிலையை குளத்தில் இறக்கி நீராட்டியபோது, ராகவன் என்றஇளம் அர்ச்சகர் தண்ணீரில் மூழ்கிஎழுந்தார். அப்போது, எதிர்பாராதவிதமாக அவர் நீரில் மூழ்கினார். அருகே இருந்த மற்ற அர்ச்சகர்கள் உடனடியாக நெருங்கிச் சென்று, அவரை காப்பாற்ற முயன்றனர். துரதிர்ஷ்டவசமாக, அவர்களும் அடுத்தடுத்து நீரில் மூழ்கினர்.உடனடியாக அருகே இருந்தபக்தர்கள் சிலர் குளத்தில் குதித்து,அங்கு உயிருக்கு போராடியவர்களை மீட்டனர்.

தீயணைப்பு, மீட்புதுறையினருக்கும் தகவல் கொடுக்கப்பட்டது. தீயணைப்பு வீரர்கள்விரைந்து வந்து, மீட்பு பணியில் ஈடுபட்டனர். இதில் 5 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டு, பிரேதப் பரிசோதனைக்காக



குரோம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.நடந்த சம்பவம் குறித்து போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர். இதில், உயிரிழந்தவர்கள் குறித்த தகவல்கள் கிடைத்துள்ளன.நங்கநல்லூர் பகுதியை சேர்ந்த வைத்தியநாதன் மகன் வனேஷ் (18), புழுதிவாக்கம் ராஜேஸ்வரி நகரை சேர்ந்த ரகு மகன் ராகவன் (21). இவர்கள் இருவரும் சி.ஏ. படித்து வந்தனர். புழுதிவாக்கம் முத்து முகமது தெருவை சேர்ந்த ஹரிஹரன் மகன் ராகவ் (18), பி.காம். மாணவர். நங்கநல்லூர் எம்எம்டிசி காலனியை சேர்ந்த பாஸ்கர் மகன் சூர்யா (எ) குருராஜன் (25), தந்தையுடன் இணைந்து கேட்டரிங் தொழில் செய்து வந்தார். மடிப்பாக்கம் பாலையா தோட்டம் பகுதியை சேர்ந்த பெருமாள் மகன் யோகேஸ்வரன் (22) பி.இ . ஆட்டோமொபைல் டிசைன் இன்ஜினீயரிங் படித்து வந்தார். இவர்கள் 5 பேரும்தான் குளத்தில் மூழ்கி உயிரிழந்தனர் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.தீர்த்தவாரி நிகழ்வின்போது 5 இளம் அர்ச்சகர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தது பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.சம்பவ இடத்தில் சென்னை மாநகர காவல் ஆணையர் சங்கர் ஜிவால் ஆய்வு மேற்கொண்டார். அமைச்சர் தா.மோ.அன்பரசன், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ராகுல்நாத், தாம்பரம் மேயர் வசந்தகுமாரி உள்ளிட்டோர் மருத்துவமனைக்கு சென்று, உயிரிழந்த அர்ச்சகர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினர்.

முதல்வர் ரூ.2லட்சம் நிவாரணம்:இந்தநிலையில், உயிரிழந்த 5 அர்ச்சகர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.2 லட்சம் நிவாரணம் வழங்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.இதுகுறித்து முதல்வர் தெரிவித்துள்ளதாவது: செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் வட்டம் மூவரசம்பட்டு கிராமத்தில் உள்ள தர்மலிங்கேஸ்வரர் கோயில் தெப்பக்குளத்தில் பங்குனி உத்திர திருவிழாவை முன்னிட்டு, தீர்த்தவாரி நிகழ்ச்சிக்காக கோயில்அர்ச்சகர்கள், அப்பகுதி மக்கள்நீரில் இறங்கியபோது, எதிர்பாராதவிதமாக குளத்தில் மூழ்கி சூர்யா,வனேஷ், ராகவ், யோகேஸ்வரன், ராகவன் ஆகிய 5 பேர் உயிரிழந்த செய்தி கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன். இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர், உறவினர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன், முதல்வர் பொது நிவாரண நிதியில் இருந்து, உயிரிழந்தவர்கள் குடும்பத்துக்கு தலா ரூ.2 லட்சம் வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு முதல்வர் தெரிவித்துள்ளதாக தமிழக அரசு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## "தமிழகத்தில் நிலக்கரி எடுக்க முதல்வர் ஸ்டாலின் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்" அமைச்சர் உதயநிதி



தமிழகத்தில் நிலக்கரி எடுக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார் என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.தஞ் சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பல்வேறு துறையைச் சார்ந்த வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்று விட்டு, செய்தியாளர்கள் சந்திப்பில் உதய நிதி பங்கேற்றார். அப்போது அவர் கூறியது: "தஞ்சாவூரில் மார்ச் 14ம் தேதி ஆய்வு கூட்டம் நடத்தினோம். அதனுடைய தொடர் நடவடிக்கை குறித்து ஆய்வு செய்வதற்காக இக்கூட்டம் நடத்தப்பட்டது. இதில், என்னென்ன திட்டங்கள்? எவ்வளவு முடிக்கப்பட்டுள்ளது? எனக் கேட்டறிந்து, மீதமுள்ள திட்டங்களை விரைந்து முடிக்குமாறு மாவட்ட ஆட்சியரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளேன்.

பூமாலை வணிக வளாகம், மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடங்கள் புனரமைப்பு பணியை விரைவில் முடிக்க வேண்டும், தமிழக முதல்வர் திறப்பதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம் எனவும் கூறியிருக்கிறோம். இது தொடர்பாக அரசு அலுவலர்களும் விளக்கம் அளித்தனர். முதல்வரின் ஆணைப்படி அலுவலர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. இளைஞரணிக்கு 4 ஆண்டுகளுக்கு முன்பு பொறுப்பேற்கும்போது, ஒவ்வொரு தொகுதியிலும் 10 ஆயிரம் பேர் சேர்க்க வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதில், 85 சதவீதம் முடிவடைந்துவிட்டது.

இப்போது, கட்சியில் உறுப்பினர் சேர்க்கை மேற்கொள்ளுமாறு தலைவர் கூறியுள்ளார். அப்பணியை செய்து வருகிறோம்.தற்போது திமுகவில் 1 கோடி பேரை உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளார். அதன் அடிப்படையில் நிர்வாகிகள் சேர்க்கும் பணி நடந்து வருகிறது. மேலும் தொகுதி வாரியாக இளைஞர் அணிக்கு திராவிட மாடல் பயிற்சி பாசறை கூட்டம் நடந்து வருகிறது. அடுத்த சில நாட்களில் ஒன்றிய அளவில் கூட்டம் நடைபெறும்.தமிழகத்தில் நிலக்கரி எடுக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார். இது தொடர்பாக அவர் பிரதமருக்கு அரசுக்கு கடிதம் அனுப்பி உள்ளார். நாளை நடைபெறும் சட்டப்பேரவை கூட்டத்தில் மன்னார்குடி எம்.எல்.ஏ. ராஜா கவனம் ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வரவுள்ளார்" எனத் தெரிவித்தார்.

பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, எம்பி திரு.எஸ். எஸ்.பழநிமாணிக்கம், மாவட்ட ஆட்சியர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், எம்எல்ஏக்கள் துரை சந்திரசேகரன், டி.கே.ஜி.நீலமேகம், கா.அண்ணாதுரை, வருவாய் கூடுதல் ஆட்சியர் என்.ஓ.சுகபுத்ரா, வளர்ச்சி கூடுதல் ஆட்சியர் எச்.எஸ். ஸ்ரீகாந்த், மாநகராட்சி மேயர் சண் ராமநாதன் மற்றும் பலர் பங்கேற்றனர்.


## பற்களை பிடுங்கியதாக சர்ச்சை 3 இன்ஸ்பெக்டர்கள் உட்பட 6 போலீஸார் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றம்

போலீஸ் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படுவோரின் பற்களை பிடுங்கியதாக எழுந்த சர்ச்சையைத் தொடர்ந்து, அம்பாசமுத்திரம் காவல் கோட்டத்தில் அதிகாரிகள் தொடர்ந்து மாற்றப்பட்டு வருகின்றனர். 3 இன்ஸ்பெக்டர்கள் உட்பட 6 போலீஸார் நேற்று காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டனர். அம்பாசமுத்திரத்தில் ஏஎஸ்பி பல்வீர்சிங் பொறுப்பு வகித்தபோது, போலீஸ் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படுவோரின் பற்களை பிடுங்கியதாக சர்ச்சை எழுந்தது. ஏஎஸ்பி பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். இவ்விவகாரம் தொடர்பாக சேரன்மகாதேவி சார் ஆட்சியர் முகமது சபீர் ஆலம் விசாரணை நடத்தி வருகிறார். மாநில மனித உரிமை ஆணையம் தனியாக விசாரணை நடத்துகிறது. இதற்கிடையே காவல்துறை அதிகாரிகள் தொடர்ந்து மாற்றப்பட்டு வருகின்றனர்.அதிரடி மாற்றங்கள்: திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சரவணன் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டார்.

விக்கிரமசிங்கபுரம் தனிப்பிரிவு தலைமைக் காவலர் போகபூமன், கல்லிடைக்குறிச்சி தலைமைக் காவலர் ராஜ்குமார் ஆகியோர் கடந்த சில நாட்களுக்கு முன் ஆயுதப்படைக்கு மாற்றப்பட்டனர். மாவட்ட உளவுப்பிரிவு இன்ஸ்பெக்டர் கோமதி சென்னை தலைமையிடத்துக்கும், அம்பாசமுத்திரம் சரக உளவுப்பிரிவு சப்இன்ஸ்பெக்டர் மகாராஜன் காவல் நிலையப் பணிக்கும் பணியிடமாற்றம் செய்யப்பட்டனர்.இதைத்தொடர்ந்து நேற்று மேலும் 6 பேர் காவல்துறையில் அதிரடியாக மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

காவல் ஆய்வாளர்கள் எஸ்.சந்திரமோகன் (அம்பாசமுத்திரம்), பி.ராஜகுமாரி (கல்லிடைக்குறிச்சி), எ.பெருமாள் (விக்கிரமசிங்கபுரம்), அம்பாசமுத்திரம் கோட்ட சிறப்பு பிரிவு உதவி ஆய்வாளர் சக்தி நடராஜன், தலைமைக் காவலர் எம்.சந்தானகுமார், காவலர் வி.மணிகண்டன் ஆகியோர் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளனர். இந்த விவகாரத்தால் அம்பாசமுத்திரம் காவல்கோட்ட அதிகாரிகள் கூண்டோடு காலியாவது, அதிகாரிகள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## "ஸ்டெர்லைட் ஆலை குறித்து ஆளுநர் ரவி பேசியது ஆணவத்தின் உச்சம்" வைகோ



"ஸ்டெர்லைட் ஆலை குறித்து ஆளுநர் பேசியிருப்பது ஆணவத்தின் உச்சம்" என்று மதிமுக பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், ''ஸ்டெர்லைட் ஆலை குறித்து தமிழக ஆளுநர் பேசியிருப்பது ஆணவத்தின் உச்சமாகும். வெளிநாடுகளிலிருந்து பணம் வாங்கிக் கொண்டுதான் ஸ்டெர்லைட் ஆலையை எதிர்த்தார்கள் என்று அதிகாரத் திமிரில் உளறிக் கொட்டியிருக்கிறார் ஆளுநர்.

ஸ்டெர்லைட் ஆலையால் தூத்துக்குடி மாவட்டமே நாசமாகிவிடும் என்று ஏறத்தாழ 30 ஆண்டுகள் தன்னலமின்றிப் போராடிய என்னைப் போன்றவர்கள் நெஞ்சில் ஈட்டி பாய்வதைப் போல் ஆளுநர் கொடும் சொற்களை வீசியிருக்கிறார். அதே வெளிநாடுகளிலிருந்து ஆளுநர் எவ்வளவு பணம் வாங்கிக் கொண்டு ஸ்டெர்லைட்டுக்கு ஆதரவாகப் பேசுகிறார் என்பதை மக்கள் எடைபோட்டுப் பார்ப்பார்கள்.

ஸ்டெர்லைட்டுக்கு எதிரான போராட்டத்தில் 15 பேர் தங்கள் உயிர்களைப் பலி கொடுத்திருக்கிறார்கள், நீதிமன்றங்களே ஸ்டெர்லைட்டை மூடுவது சரிதான் என்று தீர்ப்பளித்துவிட்டன. சட்டமன்றத் தீர்மானத்தை நிறுத்தி வைத்தாலே நிராகரிப்பதாகிவிடும் என்று எவரும் ஏற்றுக்கொள்ள முடியாத அக்கிரமமான கருத்தைச் சொல்லியிருக்கிறார். இன்றைய ஆளுநர் தமிழ்நாட்டின் சாபக்கேடு. இவர் நம் மாநிலத்திலிருந்து வெளியேற்றப்பட வேண்டும்'' என்று வைகோ தெரிவித்துள்ளார்.



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள் 1043

## சுவர்ணாம்பிகா சமேத அருணாசலேஸ்வரசுவாமி ஆலயம் முகத்துவாரம், கொழும்பு

*" குணங்கள் பலவிதமாய்க் கொள்ளாதே நெஞ்சே*
*வணங்குங் குணமாக வந்து - வணங்கியே*
*மண்டலமெ லாங்கடந்து மாவீட்டை நீதிறந்து*
*கண்டெடுத்துக் கொள்வாய் கனம்."*

பெரியானைக்குட்டிசுவாமியின் வாக்கு பலிக்க ஆரம்பித்தது. ஊரிலே பெரியவர்கள், பணக்காரர்கள், வியாபாரிகள் என பல்வேறு நிலையில் இருந்தவர்களும், சுவாமியைத் தேடி வர ஆரம்பித்தனர். பணமும் பெருகியது. ஈனமுத்துவின் மகிழ்ச்சிக்கு எல்லையேது? சுவாமி வீதிசுற்றிவர ஒரு வண்டியும், ஒரு சோடி மாடும் வாங்கினார். அதிகாலையிலே எழுந்து செட்டிமார் இருக்கும் வீதிவழியே சுவாமி செல்வார். அப்பொழுது நோயாளிகளும், வறியவர்களும் வழியெங்கும் சுவாமியின் வருகைக்காகக் காத்துநிற்பார்கள்.

நோயாளிகள், சுவாமியிடமிருந்து வாய்வழியாக வழியும் தாம்பூல எச்சிலை எடுத்து, நோய்க்கு மருந்தாகப் பாவிப்பார். அதனால் சுகமுற்று நோயாளிகள் செல்வர். செட்டிமார் பணப்பெட்டியோடு, தமது பெட்டியில் சுவாமி கைவைத்துப் பணம் எடுக்க வேண்டும் என ஏங்கி நிற்பார்கள். சுவாமியும் ஒருவரின் பெட்டியில் கை வைத்து பணத்தை எடுத்து, அதனைத் தானதருமங்களைச் செய்வார். காசெடுத்தவர்களுக்கு சகல செல்வங்களும் நிறையும் என்பது நம்பிக்கையாகக் காணப்பட்டது. இவற்றோடு அரிசி மற்றும் பொருட்களையும் பெற்றுக்கொண்டு வீடு திரும்புவார். சுவாமியோடு கூட்டங்கூட்டமாக வரும் ஏழைகளுக்கு, அன்று முழுவதும் சாப்பாடு போட்டுக்கொண்டே இருப்பார்கள். சுவாமி கொண்டு சென்ற பொருட்களில் ஒன்றுமே மிஞ்சாது. அடுத்தநாளும் இவ்வாறே தொடரும்.

வசதிபடைத்தவர்களும், கொடுக்கும் நல்லெண்ணங் கொண்டோரும் கொடுப்பற்றை, ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுத்து, அவர்களோடு அமர்ந்து சுவாமிகளும் உணவு உண்ணுவார்கள். சிறிதாக உணவை எடுத்துவிட்டு, தன்னிடமுள்ள மிகுதி உணவை குழைத்து, சுவாமி அனைவருக்கும் கொடுப்பது வழக்கம். இதனைப் பெறுவதற்காக அனைவரும் ஏங்கி நிற்பது வழக்கம். "உணவளிப்பவர் ஈசன். ஆதலால் உணவை பழிக்கக்கூடாது. அளிக்கப்பட்ட உணவை உதறித்தள்ளியவன் பெரும் பாவத்துக்குள்ளாவான்" என்ற கொள்கையில் பிடிப்புள்ளவராகவே, சுவாமியின் செய்கைகள் காணப்பட்டன. அதனையே தன்னிடம் வருபவர்களுக்கும் சுவாமி போதனை செய்தார். சுவாமியின் பெருமையைக் கேள்வியுற்ற கண்பார்வை இழந்த பிராமணப் பெரியவர் ஒருவர், சுவாமியை நாடிவந்து கண்பார்வை பெற்றுச் சென்ற விந்தையும் நடைபெற்றுள்ளது.

பெரியானைக்குட்டி சுவாமியார் தினமும் வீதிவழியே செல்லும்பொழுது, சுவாமியைத் தரிசனம் செய்யும் பாக்கியம், திரு. பொன்னம்பலம் அருணாசலம் அவர்களுக்கும் கிடைத்தது. சுவாமியைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தபோதிலும் அவரது தரிசனம் கிடைத்தமையைத் தனது தவப்பயனாகவே, திரு. அருணாசலம் அவர்கள் கருதினார்கள். இதன் பின்னர் சுவாமியை பலவழிகளிலும் போற்றி வணங்கி உபசரித்து வந்தார். சுவாமி சொன்ன பல விடயங்கள், திரு. பொ. அருணாசலம் அவர்கள் வீட்டிலே நடைபெற்றது. இச்சம்பவங்களின் காரணமாக மேலும் சுவாமிமீது திரு. அருணாசலம் அவர்களுக்கு பக்தியும், மதிப்பும் மேலிட்டது.

பெரியானைக்குட்டிச் சாமியாரின் தலையாய சீடராக, சித்தானைக் குட்டிச்சாமியார் விளங்கினார். பெரியானைக்குட்டிச்சாமியார் சமாதி அடையும் காலம் நெருங்கியதை, தனது உள்ளுணர்வால் அறிந்து கொண்ட சித்தானைக்குட்டிச்சாமியார், உடனடியாக பெரியானைக்குட்டிச் சாமியார் இருந்த இடத்திற்கு வந்து, அவரையே சுற்றிக்கொண்டு திரிந்தார். பெரியானைக்குட்டிச்சாமியாரை யாழ்ப்பாணம் கொண்டு சென்று சமாதி வைக்க வேண்டும் என்பது, சித்தானையின் எண்ணமாக இருந்தது. ஆனால் பெரியானைக்குட்டிச்சாமியார், கொழும்பிலேயே சமாதியடையவேண்டும் என்ற எண்ணத்தோடு காணப்பட்டார். இவ்வெண்ணத்திற்கு வேறோர் உள்நோக்கம் சுவாமியின் உள்ளத்திலே புதைந்திருந்தது.

சித்தானையின் எண்ணக்கருத்தை உணாந்துகொண்ட சுவாமியார், அவரை அழைத்து, "வடக்கே ஒரு பெரியவருடைய சமாதி உள்ளது. அந்த மண்ணிலே அடிமை மிதிக்கத் தகுதியற்றவன். எனவே யாழ்ப்பாணத்தில் எனக்குச் சமாதி வைக்கும் எண்ணத்தைக் கைவிடு" என்று கூறினார். சுவாமிகள் குறிப்பிட்ட மகான், கடையிற் சுவாமிகள் ஆவார். சித்தானையின் அன்பிலே கரைந்த சுவாமிகள், அவருடன் அன்பாகப் பேசிக் கொண்டிருந்த வேளையில், அடுப்பிலே கிடாரத்தில் சோறு வெந்து கொண்டிருந்தது. அந்த அடுப்பிலிருந்து தீப்பிடித்துள்ள பெரிய கொள்ளிக்கட்டையொன்றை எடுத்துவருமாறு சித்தானைக்குட்டிச் சாமியாருக்கு அன்புக்கட்டளையிட்டார்.

ஏன்? எதற்கு? என்ற கேள்வி எழுப்பாது, குருநாதரின் சிந்தையையுணர்ந்த சித்தானை, சுவாமி கூறியவாறே கொள்ளிக்கட்டையைக் கொண்டுவந்து கொடுத்தார். நெருப்பு கொள்ளிக்கட்டையில் தகதகவென எரிந்து தணலாகிக் கிடந்தது. அதனை வாங்கிய சுவாமி, சித்தானையின் புயத்திலே வைத்து அழுத்தினார். சித்தானையும் அதனைப் புன்சிரிப்போடு ஏற்றுக்கொண்டார். சித்தானைக்கு, பெரியானைக்குட்டிச்சாமியார் கொடுத்த குருதீட்சை இதுவாகும் என்பதை சித்தானை உணர்ந்தார். பெரியானைக்குட்டிச் சாமியார், சமாதியடையும் நேரம் வந்தபொழுது, சித்தானையை நோக்கி, "நீ முனீஸ்வரம் போ" என்று அனுப்பிவைத்தார். சித்தானை முனீஸ்வரத்தில் இருக்கும் பொழுது, பெரியானைக்குட்டிச்சாமியார் அவரது எண்ணப்படியே கொழும்பிலே சமாதியடைந்து விட்டார்.

**- வளரும்...**



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை
NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு
Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy

crc
CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court -Unit 300
Scarborough ON M1B 3C6



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# இவ்வார ராசிபலன்

**07-04-2023 வெள்ளி தொடக்கம் 13-04-2023 வியாழன் வரையும்**




**மேஷம்:** பொறுப்போடும், சிறப்போடும் செயல்படும் வாரம். சோதனைகள் நீங்கும். பதவி உயர்வு தாமதமாகும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். வயிற்று உபாதைகளும் வந்து போகும். ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். தொழில் வளர்ச்சி கூடும். தனவரவுகள் பெருகும். முயற்சிகள் பலிதமாகும். செயல்களில் துணிவு கூடும். தடைகள் அகலும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். நல்லச் செய்திகள் நாடி வரும். வினைகள் அகலும். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். விவசாயம் லாபம் தரும். வியாபாரம் மந்தமாக இருக்கும். எதிர்ப்புக்கள் அதிகமாகும். சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். பெற்றோர்கள் பாராட்டுக் கிட்டும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். குடும்ப குழப்பம் அகலும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். ஆடம்பரப் பொருள் சேரும். மங்களகரமான செய்தி வரும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் அகலும். அன்னதானம் செய்வதால் அதிர்‘டம் கூடும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். புகழ் அதிகரிக்கும். பாக்கிகள் வசூலாகும். கடன் சுமைகள் குறையும். ஏஜென்சி தொழில் ஏற்றம் தரும். வாகன மாற்றம் ஏற்படும். ஊதிய உயர்வு கிட்டும். அலைச்சல் அதிகரிக்கும். திருப்திகள் அதிகரிக்கும். சுபச்செய்தி வரும். அனுகூலச் செய்தி வந்து சேரும். பணியாட்கள் ஆதரவு பெருகும். எண்ணங்கள் பூர்த்தியாகும். பெண்களுக்கு அணிகலன் சேரும். தொழில் லாபம் உண்டு. ஆண்களின் அதிகாரம் உண்டு. சாதகமான வாய்ப்பு அமையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: இந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 8,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,P




**ரிஷபம்:** உறவுகளால் செலவுகள் அதிகரிக்கும் வாரம். சாதனையான எண்ணம் உதயமாகும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். குடும்ப அன்யோன்யம் பெருகும். பொருள் வரவு ஏற்படும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். மனைவியால் நன்மை உண்டு. மற்றவர்களால் தொல்லை உண்டு. பதவி உயர்வு தாமதமாகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். வாகன மாற்றம் உண்டு. கொடுக்கல், வாங்கலால் திருப்தி தரும். சகோதர ஒற்றுமை பலப்படும். ஆரோக்கியம் அதிகரிக்கும். புத்துணர்வோடு செயல்படுவது நல்லது. தொழில் வளர்ச்சி கூடும். வாய்ப்புக்கள் சாதகமாக அமையும். வார்த்தைகளில் நிதானம் தேவை. வியாபாரம் திருப்தி தரும். நல்லோர்களின் வாழ்த்து கிடைக்கும். சாதனை படைக்கும் காலம். சுப விரயம் கூடும். உடல்பொலிவு கூடும். தான தர்மங்கள் பலன் தரும். அத்தியாவசிய செலவுகள் ஏற்படும். நண்பகலில் நல்ல தகவல் வந்து சேரும். உண்மைகள் வெளிப்படும். உயர்வுகள் தாமதமாகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். தன சேர்க்கையுண்டு. மனநிம்மதி குறையும். பணியில் பாராட்டு கிடைக்கும். குடும்ப மேன்மை உண்டு. சேமிப்பு அதிகரிக்கும். புதிய சிந்தனை மேலோங்கும். பெண்களுக்கு ஆபரணங்கள் சேரும். நலமும், வகையான நன்மையும் பெருகும். சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பணியில் இடம் மாற்றம் ஏற்படும். பெருமைகள் கூடும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை தேவை. முயற்சிகள் வளர்ச்சி அடையும். யோக பலம் கூடும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். பொருளாதார நிலை உயரும். தொட்டக் காரியம் ஜெயமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பூமாதேவி, அதிர்ஷ்ட எண்: 5,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,Z




**மிதுனம்:** எதிரிகள் உதிரியாகும் வாரம். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு உயரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. கலைஞர்களுக்கு மாணவர்களுக்கு சாதகமான காலம். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். வறுமைகள் விலகும். பங்குச்சந்தையில் லாபம் அதிகரிக்கும். உற்சாகம் அதிகரிக்கும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. விரக்திகள் மறையும். உடல் ஆரோக்கியம் சீராகும். மன ஆரோக்கியம் சிறக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். புத்தி சாதுர்யம் பெருகும். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். உடல்பொலிவு கூடும். கல்வியில் கவனம் தேவை. திட்டமிட்ட செயல் வெற்றிமுகமாகும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். பயண முயற்சி பலன் தரும். நினைத்த காரியம் நிறைவேறும். கட்டிடத்தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். வழக்குகள் சாதகமாகும். வரவுகள் திருப்தி தரும். அன்னிய தேசப்பயணம் உண்டு. திருப்புமுனை ஏற்படும். பொருளாதாரம் மேம்படும். குடும்ப வளர்ச்சி கூடும். அணிமணிகள் சேரும். பாதகமான சூழ்நிலைகள் விலகும். கணவன், மனைவி உறவு மேம்படும். புதிய முதலீடு லாபம் தரும். சகோதரியினால் நன்மை உண்டு. கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. விரும்பிய பொருள் கிடைக்கும். ஏற்றுமதி தொழிலில் லாபம் அதிகரிக்கும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். பொதுவி‘யங்களில் நாட்டம் ஏற்படும். பித்ருக்கள் சாபம் நீங்கும். மங்களச்செய்தியால் மனம் மகிழும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விநாயகர், அதிர்ஷ்ட எண்: 9,5,4,1
அதிர்ஷ்ட நிறம்: வெளிர்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,S




**கடகம்:** வருமானம் திருப்தி தரும் வாரம். பொறுப்புகள் கூடும். வாகன மாற்றம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். தர்மச் சிந்தனைகள் மேலோங்கும். இடமாற்றம் நன்மைத் தரும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பணவரவு திருப்தி தரும். பொது வாழ்வில் புகழ் கூடும். பழைய பாக்கி வசூலாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். புதிய முயற்சி பலன் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். குடும்ப வளர்ச்சி பெருகும். மருத்துவச் செலவுகள் குறையும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். இல்லத்தில் மகிழ்ச்சி துள்ளி விளையாடும். புதிய நட்பில் கவனம் தேவை. இடமாற்றத்தால் நன்மை உண்டாகும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். தாய் வழி உறவில் விரிசல் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும். பெண்களுக்கு அணிகலன் சேரும். தொலைத்தூரப் பயணம் ஏற்படும். மனைவயின் பிரார்த்தனை மாற்றம் தரும். மனோ பயம் அகலும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். முத்தான வாய்ப்புக்கள் வரும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உண்மைகள் வெளிப்படும். பூமி வாங்கும் யோகம் உண்டு. உத்தியோகத்தில் பாராட்டுக் கிட்டும். பிள்ளைகளின் கல்விச்செலவுகள் அதிகரிக்கும். எதிரிகளின் தொல்லைகள் ஒழியும். பிள்ளைகளின் கல்விச் சலுகைகள் அதிகரிக்கும். நினைத்த காரியம் நிறைவேறும். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. சுபவிரயம் ஏற்படும். ஆடை, அணிகலன் சேரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது.

வழிபட வேண்டிய தெய்வம்: லஷ்மி குபேரர், அதிர்ஷ்ட எண்: 3,9,1,2
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,A



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
‘ராஜயோகம்’
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377




**சிம்மம்:** திருப்பங்கள் நிறைந்த வாரம். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். பணியில் பாராட்டு கிட்டும். பால்ய நண்பர் சந்திப்புக் கிட்டும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். எதிர்கால எண்ணம் ஏற்றம் தரும். கணவன், மனைவி இடையே நல்லதொரு புரிந்துணர்வு ஏற்படும். வீடு வாங்கும் வாய்ப்பு உள்ளது. வாழ்வில் முன்னேற்ற நிலையை அடைவீர். சுபிட்ஷங்கள் பெருகும். சமுதாய பிரச்சனைகள் அகலும். வீட்டில் சந்தோஷம் நிலவும். மனஅமைதி உண்டாகும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சி கிட்டும். உடல்சோர்வு ஏற்படும். அலைச்சல் அதிகரிக்கும். புகழும், பொருளும் பெருகும். கனவுத்தொல்லை உண்டு. கைப்பொருள் ஒன்று களவுப்போகும். உறவினரால் உற்சாகம் கூடும். பூர்வீகச்சொத்து சேரும். செயல் திறமை வெளிப்படும். விவசாயம் லாபம் தரும். விவாத முயற்சி வெற்றி தரும். உதவிகள் கிடைக்கும். நிதி நிலைமை சீராகும். புண்ணிய ஸ்தலப் பயணம் ஏற்படும். உடல் உபாதை தோன்றும். தொழில் வழித் தொல்லை குறையும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். வீண் வம்பு விலகும். குடும்ப சேமிப்பு உயரும். சேய் நலம் கூடும். உணவுப்பிரியம் அதிகரிக்கும். பாராட்டுக்கள் பெருகும். பணவரவு தாமதமாகும். புதிய தொழில் வாய்ப்பு அமையும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். தன்னம்பிக்கை கூடும். இன்னல்கள் அகலும். தோல்விகள் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 8,9,4,6
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,T




**கன்னி:** எண்ணிய காரியம் கைகூடும் வாரம். சிறிய இடையூறு ஏற்படும். பெரிய மனிதர்களின் சந்திப்புக் கிட்டும். பகைவர் பணிந்து நிற்பர். மனைவி உடல்நலம் பாதிக்கும். புதிய நட்பு உருவாகும். பொறுப்புக்கள் கூடும். பொருளாதாரம் சிறப்பு தரும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பிரயாணம் ஏற்படும். பிணிகள் அகலும். உணவு விடுதி லாபம் தரும். புதிய வாய்ப்புக்கள் தேடி வரும். அரசு வழி ஆதாயம் உண்டு. அரசியலில் புகழ் கூடும். மாணவர்கள் பாராட்டுப் பெறுவர். ஆபரணச் சேர்க்கையுண்டு. சுபகாரியம் கைகூடும். விரும்பிய பொருள் சேரும். வியாபார மேன்மையுண்டு. வாழ்வில் வளம் உண்டு. ஆரோக்யம் அதிகரிக்கும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் பலன் தரும். உறவுகளால் நன்மை உண்டு. கால்நடைகளால் லாபம் உண்டு. காதலில் மோதல் உண்டு. எள் தானம் செய்வதால் ஏற்றங்கள் அதிகரிக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். உத்தியோக உயர்வு கிட்டும். பாராட்டுக்கள் அதிகமாகும். வெற்றிகள் குவியும். வாகனச் செலவு ஏற்படும். எதிரிகளால் ஏற்றம் உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். குடும்ப கௌரவம் உயரும். கமிஷன் தொழில் லாபம் தரும். பயணத்தால் பலன் உண்டு. பேச்சில் நிதானம் தேவை. தொழிலில் நிம்மதி பெருகும். வழக்கு வெற்றி தரும். தன்னம்பிக்கை அதிகமாகும். சிறிய இடையூறு ஏற்படும். தந்தையின் நலம் பெருகும். மற்றவர்களால் பாராட்டப்படுவீர்கள். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். புதிய பதவிகள் கிட்டும். பொருள் வரவு திருப்தி தரும். பித்தளைத் தொழில் லாபம் தரும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். நல்லோர்கள் நட்பு கிட்டும். மன உற்சாகம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அங்காரகன், அதிர்ஷ்ட எண்: 7,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,H




**துலாம்:** சாதனைகள் நிகழ்த்தும் வாரம். புகழ்ச்சி அதிகரிக்கும். நோய், நொடிகள் அகலும். தங்க நகைகள் சேரும். சகோதரிகளால் சஞ்சலம் ஏற்படும். காதல் எண்ணம் நிறைவேறும். கலை ஆர்வம் கூடும். பணப்பற்றாக்குறை நீங்கும். உடன்பிறந்தவரால் சலசலப்பு ஏற்படும். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் அகலும். தொல்லைகள் ஒழியும். சுயநலம் கூடும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். முயற்சிகள் பலன் தரும். தெய்வீக ஈடுபாடு கூடும். வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். போட்டி, பொறாமைகள் விலகும். தொழில் விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். வேலைப்பளு கூடும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கடன் சுமை குறையும். வழிபாடு மாற்றம் தரும். கல்வியில் ஈடுபாடு கூடும். அலைச்சல் அதிகமாகும். பணப்பிரச்சனை தீரும். வியாபாரம் சிறக்கும். குதூகலமான காலம். அற்புத வாய்ப்புக்கள் கிட்டும். பெண்களின் ஆலோசனை மாபெரும் வெற்றியை தரும். ஆடை, அணிகலன் சேரும். சுபகாரியம் கைகூடும். பங்குச்சந்தை லாபம் தரும். காரியங்களில் வெற்றி பெறுவீர்கள். பாதிப்புக்கள் அகலும். ஆடம்பர சுகங்கள் கூடும். முயற்சிகள் பலன் தரும். மங்களச்செய்தி வரும். மருத்துவச் செலவு உண்டு. மாற்று யோசனை பயன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்பு கூடும். திருத்தமான முடிவு ஏற்படும். வியாபாரத்தில் தடுமாற்றம் ஏற்படும். வருத்தங்கள் மறையும். நண்பர்களால் நன்மையுண்டு. புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். பழையக்கடன் அடையும். திறமைகள் வெளிப்படும். பெண்களால் ஆதாயம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆறுமுகப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 6,1,7,8
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,J




**விருச்சிகம்:** சுபவிரயம் ஏற்படும் வாரம். ஆதாயம் பெருகும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். உறவினர் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வழியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கூடும். பங்குச்சந்தையில் பணம் புரளும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். பழைய பகை தீரும். வீண் செலவுகள் அதிகரிக்கும். புதிய எண்ணங்கள் நிறைவேறும். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் அகலும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். பழைய கடன் பாக்கிகளும் வசூலாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். பெண்கள் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. மனதில் நினைத்த காரியம் நிறைவேறும். காதலர்களுக்குள் மனக்கசப்பு நீங்கும். நீண்ட நாள் பிரச்சனை நிறைவேறும். உறவினர் வகையில் செலவுகள் உண்டு. வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். ஆண்களின் கோரிக்கை நிறைவேறும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. வாழ்வில் வளம் கூடும். தொழில் வாய்ப்புக்கள் வந்து சேரும். தேக ஆரோக்கியம் மிளிரும். பிள்ளைகளால் சந்தோஷம் உண்டு. உலோகத் தொழில் உயர்வு பெறும். குடும்ப லஷ்மி கடாட்ஷம் பெருகும். இன்னல்கள் அகலும். தொல்லைகள் குறையும். கால்நடைகளால் பலன் உண்டு. பழிச்சொல் தேடி வரும். கையிருப்புகள் கரையும். அந்தஸ்து உயரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். தேவைகள் அதிகரிக்கும். புத்திரர் வகையில் சந்தோஷம் ஏற்படும். நினைத்தபடி திருமணம் நடக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீராமர், அதிர்ஷ்ட எண்: 2,9,6,3
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,F

(தொடர்ச்சி 29 பக்கம்)

# இவ்வார ராசிபலன்

(28 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** எதிரிகளால் ஏற்றம் அதிகரிக்கும் வாரம். விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். காதல் எண்ணம் உருவாகும். புதிய பொருள் சேரும். பழைய நட்பினால் பலன் உண்டு. உத்தியோக அலைச்சல் உண்டு. காரிய தாமதம் ஏற்படும். வாய்ப்புக்கள் பெருகும். தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும். வழக்குகள் சாதகமாகும். வரவுகள் மிகுதியாகும். அன்னிய தேசப் பயணம் உண்டு. பழையக்கடன் வசூலாகும். கல்வியில் மேன்மையுண்டு. சிக்கனம் தேவை. வீடு, மனை யோகம் உண்டு. விரக்திகள் மறையும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் சீராகும். மாணவர்கள் உற்சாகம் அதிகரிக்கும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மங்களச் செய்திகள் வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. சாதகமான வாய்ப்பு உருவாகும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். தந்தையின் உடல்நலம் சீராகும். புத்தி சாதுர்யம் பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். வாகனங்களில் முதலீடு உண்டாகும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு வளரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. பறவைகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். பணப்பற்றாக்குறை நீங்கும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்துக் கிட்டும். பெண்களால் மதிப்பும், மரியாதையும் உயரும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். தொட்ட காரியம் ஜெயமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தட்ஷிணாமூர்த்தி, அதிர்ஷ்ட எண: 8,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள் N,U




**மகரம்:** சாமர்த்தியமாக செயல்படும் வாரம். உழைப்பில் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. வார்த்தைகளில் நிதானம் நல்லது. மங்களச் செய்தி வரும். பூர்வீகச் சொத்து கிடைக்கும். புதிய நட்பு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். வாழ்த்துச் செய்திகள் வரும். அரசுத்துறையில் ஆதாயம் கிடைக்கும். தர்ம சிந்தனை மேலோங்கும். கல்வியில் ஆர்வம் கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். இனம் புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். பெண்களின் ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பருப்பு தானம் பாவம் போக்கும். ஊக்கம் அதிகரிக்கும். வருமான வாய்ப்பு கூடி வரும். குதூகலம் சேரும். பழையக்கடன் தீரும். பொன், பொருள் சேரும். ஆடம்பர எண்ணங்கள் மேலோங்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். மகிழ்ச்சியான செய்திகள் வரும். வளமான வாழ்வு அமையும். உலோகத்தொழில் லாபம் தரும். தாய் உடல்நலனில் அக்கறை தேவை. நிதிப்பற்றாக்குறை நீங்கும். வியாபாரம் சிறக்கும். பிரார்த்தனையில் ஆர்வம் அதிகரிக்கும். குடும்ப மேன்மை உண்டாகும். கர்ம வினைகள் அகலும். பொன்னான நேரங்களாக அமையும். கட்டிடத்தொழிலில் லாபம் அதிகரிக்கும். பிறர்க்கு உதவி செய்வதால் நன்மை உண்டாகும் வருமானம் கைகூடி வரும். பாதகமான சூழ்நிலைகள் விலகும். புதிய வாய்ப்பு வரும். சமுதாய விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். குடும்ப வளம் கூடும். புதிய முயற்சியினை உடனே செயல்படுத்தவும். காலம் தாழ்த்துவது நல்லதல்ல. கவனமுடன் செயல்பட வேண்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அக்னி லிங்கப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 4,9,6,2
அதிர்ஷ்ட நிறம்: இளம் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O, P




**கும்பம்:** வருமானமும், வெகுமானமும் சேரும் வாரம். பொன், பொருள் சேர்க்கையுண்டு. குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும். மறைமுகமாக தொல்லை தருகிறவர்கள் விலகி செல்வர். வயிற்றுப்போக்கு வரும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பெண்களுக்கு ஆனந்தம் குடிக்கொள்ளும். திருடு போன பொருள் மீண்டும் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. பணவரவு உண்டு. கௌரவம் அதிகரிக்கும். அன்றாட நாட்கள் மனமகிழ்ச்சியைத் தரும். மனதில் அளவில்லா சந்தோ'ம் உண்டாகும். மனஅமைதி கிடைக்கும். பங்குச்சந்தைத் தொழில் பணம் தரும். புதிய எண்ணங்கள் அதிகமாகும். உணவுத்தொழில் உயர்வு தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். உற்சாகம் களை கட்டும். மனோ தைரியம் அதிகரிக்கும். சுப விரயம் கூடும். நன்மைகள் நாடி வரும். அற்புதமான நாளாக அமையும். குடும்ப கௌரவம் உயரும். பயணத்தால் பலன் உண்டு. சந்தோஷம் அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். டிரான்ஸ்போர்ட் தொழில் சிறந்த லாபம் தரும். தர்மச் சிந்தனைகள் மேலோங்கும். சீரான வாழ்வு அமையும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். ஆலய தரிசனம் அமைதியைத் தரும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. மகான்களின் சந்திப்பு கிட்டும். பெண்களால் மதிப்பு உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். நட்புவட்டம் பெருகும். வராத கடன் வந்து சேரும். பொருளாதாரம் உயரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். வாழ்வுநிலை உயரும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர்.

வழிபட வேண்டிய தெய்வம்: கொண்டத்து காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 1,4,9,8
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,X




**மீனம்:** திறமைகள் அதிகரிக்கும் வாரம். இல்லம் தேடி வாய்ப்பு வரும். மேலதிகாரியின் பாராட்டுக் கிடைக்கும். வியாபாரம் விருத்தியாகும். பெரியோர்களின் வாழ்த்துக் கிட்டும். கோரிக்கைகள் நிறைவேறும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். தாய் வழி உறவில் நன்மை உண்டாகும். சுதந்திரமாக செயல்படுவீர்கள். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். மாற்று யோசனை பலன் தரும். வாகன மாற்றம் உண்டு. வருமானம் திருப்தி தரும். வியாபாரம் விருத்தியாகும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். சகோதர வழியில் சந்தோஷம் உண்டு. உறவினரால் நன்மையுண்டு. எண்ணங்கள் வண்ணமயமாகும். வம்பு வழக்குகள் தீரும். யோக பலம் கூடும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். கடன் பாக்கிகள் வசூலாகும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். பயணம் வெற்றி தரும். விரயங்கள் அதிகரிக்கும். சொத்துக்களால் லாபம் உண்டு. தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். திடீர் மாற்றம் நன்மை தரும். மங்கள நிகழ்ச்சிகளிலிருந்து பங்குப் பெறுவீர்கள். புதிய தொழில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். திருமணப் பேச்சு முடிவிற்கு வரும். விரோதங்கள் விலகும். ஆரோக்கியம் சீராகும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. சூழ்நிலைகள் சாதகமாகும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சந்திரபகவான், அதிர்ஷ்ட எண்: 4,9,3,2
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,I

# கடந்தவையும் கடப்பவையும் (53)

*சற்றேனும் எதிர்பாரா அப்பெரிய எழுத்து அவ்விடத்தில்
பென்னம் பெரியதாகத் தென்படவே*

*அன்றுபோல் இல்லை எதுவும் இங்கு,
இன்றைய வைத்தியசாலை வளாகமும் - அதற்கு*

*விதிவிலக்கல்லவே என்றவாறு அங்கு - மிக
பெரிதாகத் தெரியும் அரச எழுத்தில் வைத்த கண்ணை*

*கொஞ்சம் தள்ளி இருக்கும், என்றும்
நெஞ்சை உலுக்கும் அந்த வாசிகசாலைமீது வைத்தபோது,*

*எழுபதுபேரது சுவாசமும் ஒரு நொடியில்
ஒரே வெடியில் பிரிந்த நாளும்*

*சட்டென்று மனதில் வரவே
பட்டென்று கண்ணும் கலங்கியது*

*யார் இந்த எழுபதுபேர்?*

*முன்னமும் சொன்னதுதான் - இங்கு
என்னோடு கூடவே வந்திருப்பின் புரிந்திருக்கும்*

*பெற்றெடுத்த பிள்ளைகட்கு பாரிகள் - அன்றுவரை
நற்பொறுப்புள்ள பரிகாரிகள் - அந்த*

*ஒற்றைநாள் சுற்றி வளைப்பால்
மொத்தமாய் அழிந்தவர்கள் - அவர்களில்*

*ஒற்றைக்குடும்பத்தில் மூவர் கூட
ஆண்துணைக்கு ஆளில்லாது பிரிந்தார்கள்*

*'அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்' என
பாரி மகளிர் புலம்பியதற்கும் மேலாக
ஆறுதலுக்கு யாருமின்றி கதறியழுத*

*பிள்ளைகளின் அலறலை இன்று
எல்லோரும் மறந்து விட்டோம்*

*'நெருக்கி அமத்த இடம் கொடுத்தாய்' என - அன்று
பெரும் பழியைச் சுமந்த அந்த அறிவுக்கூடம்கூட - இன்று*

*இச்சையூட்டும் பச்சை நிறப் பூச்சோடு
அச்சமூட்டும் அடையாளம் ஏதுமில்லா
இடமாக - அதன்*

*பக்கத்தில் அழகாக வடிவமைத்த
தீர்தக் கேணியோடு கூடவே
மக்களுக்கு மகிழ்வூட்டும் விதமாக (இடமாக)
அமைந்திருக்கு - அங்கும்*

*கொஞ்சநேரம் அமர்ந்திருந்து - செம்
மஞ்சட் சூரியன்
கொஞ்சம் கொஞ்சமாய் கீழ் இறங்கி*

*பரந்த அந்த நீலக்கடலின் மஞ்சத்தில்
விழுந்தே மறையும் காட்சியை*

*இரசிதுவிட்டுத் திரும்புகையில் புரிந்தது - இனி
நேராகப் போவதற்கு போதாது நேரமென்று*

*குறுக்காகப் பாய்வதில் குறியாக இருந்தவர்கள்
வெடுக்கென்று முன்செல்ல - வேறு வழியின்றிப் பின்தொடர்ந்தேன்*

*(தொடரும்)*

**-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --**

# அன்பின் தொனி - 686

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபம்**

**எவைக்காக ஜெபிப்பது?**

a) **நமக்காக**

யாபேஸ் இஸ்ரவேலின் தேவனை நோக்கி: தேவரீர் என்னை ஆசீர்வதித்து, என் எல்லையைப் பெரிதாக்கி, உமது கரம் என்னோடிருந்து, தீங்கு என்னைத் துக்கப்படுத்தாதபடிக்கு அதற்கு என்னை விலக்கிக் காத்தருளும் என்று வேண்டிக் கொண்டான், அவன் வேண்டிக்கொண்டதைத் தேவன் அருளினார். - **1 நாளாகமம் 4: 10**

b) **ஒருவருக்காக ஒருவர்**

உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். - **யாக்கோபு 5: 16**

c) **கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் ஊழியங்களுக்காக**

கடைசியாக, சகோதரரே, உங்களிடத்தில் கர்த்தருடைய வசனம் பரம்பி மகிமைப்படுகிறதுபோல, எவ்விடத்திலும் பரம்பி மகிமைப்படும்படிக்கும், துர்க்குணராகிய பொல்லாத மனுஷர்கையினின்று நாங்கள் விடுவிக்கப்படும்படிக்கும், எங்களுக் காக வேண்டிக்கொள்ளுங்கள். - **2 தெசலோனிக்கேயர் 3: 1-2**

d) **வியாதியஸ்தர்களுக்காகவும், துன்பப்படுகிறவர்களுக்காகவும்**

உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணக்கடவன், ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன். உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக, அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும், கர்த்தர் அவனை எழுப்புவார், அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக் காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். - **யாக்கோபு 5: 13-16**

e) **பாவத்தின் பிடியில் விளுந்தவர்களுக்காக**

மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைத் தன் சகோதரன் செய்ய ஒருவன் கண்டால், அவன் வேண்டுதல் செய்யக்கடவன், அப்பொழுது அவனுக்கு ஜீவனைக் கொடுப்பார். - **1 யோவான் 5: 16**

**ஜெபத்தைக் குறித்த சில விபரங்கள்**

பரிசுத்த வேதாகமத்தில் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு பகுதிகளில் ஜெபத்தைக் குறித்து விபரமாகவும், விளக்கமாகவும் கொடுக்கப்பட்டிருப்பதை வாசித்து அறியலாம்.

"என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக்கொடுப்பேன். இந்த ஸ்தலத்திலே செய்யப்படும் ஜெபத்திற்கு, என் கண்கள் திறந்தவைகளும், என் செவிகள் கவனிக்கிறவைகளுமாயிருக்கும்." - **2 நாளா. 7: 14-15**

"பின்பு சாமுவேல்: நான் உங்களுக்காகக் கர்த்தரை மன்றாடும்படிக்கு, இஸ்ரவேலர் எல்லாரையும் மிஸ்பாவிலே கூட்டு ங்கள் என்றான். அவர்கள் அப்படியே மிஸ்பாவிலே கூடிவந்து தண்ணீர் மொண்டு, கர்த்தருடைய சந்நிதியில் ஊற்றி, அன்றைய தினம் உபவாசம்பண்ணி, கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தோம் என்று அங்கே சொன்னார்கள், மிஸ்பாவிலே சாமுவேல் இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரித்துக் கொண்டிருந்தான். இஸ்ரவேல் புத்திரர் மிஸ்பாவிலே கூடிவந்ததைப் பெலிஸ்தர் கேள்விப்பட்டபோது, பெலிஸ்தரின் அதிபதிகள் இஸ்ரவேலுக்கு விரோதமாக எதிர்த்து வந்தார்கள், அதை இஸ்ரவேல் புத்திரர் கேட்டு, பெலிஸ்தரினிமித்தம் பயப்பட்டு, சாமுவேலை நோக்கி: நம்முடைய தேவனாகிய கர்த்தர் எங்களைப் பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிக்கும்படிக்கு, எங்களுக்காக அவரை நோக்கி ஓயாமல் வேண்டிக்கொள்ளும் என்றார்கள். அப்பொழுது சாமுவேல் பால்குடிக்கிற ஒரு ஆட்டுக்குட்டியைப் பிடித்து, அதைக் கர்த்தருக் குச்சர்வாங்க தகனபலியாகச் செலுத்தி, இஸ்ரவேலுக்காகக் கர்த்தரை நோக்கி வேண்டிக்கொண்டான், கர்த்தர் அவனுக்கு மறுமொழி அருளிச்செய்தார்." - **1 சாமுவேல் 7: 5-9**

**தொடரும்...**





SUBRA
SUBRA MORTGAGE FINANCIAL
MORTGAGE SOLUTIONS
✦ RESIDENTIAL ✦ COMMERCIAL ✦ INDUSTRIAL
✦ VACANT LAND ✦ CONSTRUCTION
Know the basic things on Mortgage to find a better way for your Future!
CONTACT US TODAY
NESAN
416-908-5656
1st & 2nd Mortgages | Purchase | Refinance | Renewal | Switches | Equity lind of Credit
Pre-approvals | Self-employed | Multi-rental properties | New immigrants
Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721
1585 Markham Rd, Unit #406, Toronto, M1B 2W1
www.subra.com
WE DEAL WITH ALL BANKS
Brokerage #10330
Powered By
MORTGAGE ALLIANCE
Scotiabank
radius financial
EQUITABLE BANK
RMG mortgages
TD Canada Trust
RFA
FIRST NATIONAL FINANCIAL LP
HOME TRUST
MCAP










26ம் ஆண்டில்...
26 years of publishing

www.uthayannews.ca

# UTHAYAN உதயன்




உதயம் 1409 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday April 7, 2023

## Mr. Tamil Canada வழங்கிய அர்த்தமுள்ள 'சர்வதேச மங்கையர் விழா – 2023' சிறப்பாக இடம்பெற்றது



கனடாவின் ரொறன்ரோ பெரும்பாகத்தில் வெற்றிகரமாக இயங்கிவரும் **Mr. Tamil Canada** அமைப்பு வழங்கிய அர்த்தமுள்ள சர்வதேச மங்கையர் விழா-2023 கடந்த சனிக்கிழமையன்று சிறப்பாக இடம்பெற்றது.

100 வீதம் ஆண்களைக் கொண்ட இயக்குனர் சபை நிர்வாகத்தையும் அதன் நடவடிக்கைளையும் விழாக்களையும் நலத்திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்ற **Mr. Tamil Canada** அமைப்பு நிர்வாகிகள், அன்றைய தினம் நடத்திய அர்த்தமுள்ளதான மங்கையர் விழா-2023.

(தொடர்ச்சி 3ம் பக்கம்)



## இளம் அரசியல் செயற்பாட்டாளர் ருக்சன் பரா ஏற்பாட்டில் மக்கள் சேவையாளர்களைப் பாராட்டும் சிறப்பு நிகழ்ச்சி

கனடாவின் மிகவும் வேகமாக அபிவிருத்தியடைந்து வரும் மாநகரமாகவும். யோர்க் பிராந்தியத்தில் தமிழ் மக்கள் பெருமளவில் வாழும் நகரமாகவும் விளங்குவது மார்க்கம் நகர சபையாகும்.

இந்த நகர சபையின் நகர பிதாவாக தொடர்ச்சியாக பணியாற்றுபவரும் தமிழ் மக்களின் நண்பருமான பிராங்க் ஸ்கெப்பட்டி அவர்கள். இந்த மாநகரசபையின் முன்னாள் பிரதி நகரபிதா **Jack Heath** மற்றும் 7ம் வட்டார மாநகர சபை உறுப்பினர் காலிட் உஸ்மான் ஆகியோரின் மக்கள் சேவையை கௌரவிக்கும் முகமாக இளம் தமிழ் அரசியல் செயற்பாட்டாளர் ருக்சன் பரா அவர்கள் ஏற்பாடு செய்யப்பெற்ற சிறப்பு நிகழ்ச்சியில் அழைக்கப்பெற்ற பல அன்பர்கள் கலந்து கொண்டார்கள். தமிழ் அன்பர்களினால் தமிழர் அல்லாத மக்கள் சேவையாளர்களைப் பாராட்டும் வகையில் இடம்பெற்ற இந்த நிகழ்வு பாராட்டுக்குரியதாகும்.

## நாளை நடைபெறும் மனோ ஸ்வரநய இசைக் கல்லூரியின் ஆண்டு விழா – 2023

ரொறன்ரோ பெரும்பாகத்தில் வெற்றிகரமாக இயங்கிவரும் மனோ ஸ்வரநய இசைக் கல்லூரியின் ஆண்டு விழா-2023 நாளை சனிக்கிழமை 8ம் திகதி ஸ்காபுறோ இசைக் கலா மன்ற மண்டபத்தில் மாலை 4.00 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது. கல்லூரியின் நிறுவனரும் இசையாசிரியையுமான மனோராணி துசிதரன் அனைவரையும் அன்போடு அழைக்கின்றார். (உள்ளே 23ம் பக்கத்தில் உள்ள விளம்பரத்தைப் பார்க்கவும்)

